கிருஷ்ணபிள்ளை நடராசாவின்

1601

# இலகு தமிழில் அடிப்படைத் தமிழ் இலக்கணம்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 894
Acc No 1601

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர வகுப்பிற்குரியது

Class No:
Acc No 1607

தொகுப்பாக்கம்

**கிருஷ்ணபிள்ளை நடராசா**

(ஓய்வுநிலை அதிபர்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

வெளியீடு

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் தொடர்பான விபரங்கள்

நூற் தலைப்பு : இலகு தமிழில் அடிப்படைத் தமிழ் இலக்கணம்

நூலாசிரியர் : கிருஷ்ணபிள்ளை நடராசா

பதிப்பாண்டு : 2020

பக்கங்கள் : viii+156

அச்சுப்பதிப்பு : திருமதி மஞ்சுளா கமலதாசன்

வெளியீடு : பூபாலசிங்கம் புத்தகசாலை

விலை : ரூபா 325 /=

சர்வதேச நியமநூல் இல. : 978-955-3491-29-9

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# முன்னுரை

க.பொ.த. உயர்தர தமிழ் இலக்கணப் பாடத்துறையில் பல்வகைத் தேர்வு வினாக்கள், குறு வினாக்கள், சிறுகுறிப்பு எழுதுதல், மொழித்திறன் விருத்தி எனப் பல்வேறு அம்சங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக இலக்கண பாடத்தைக் கற்பிப்போருக்கும் கற்போருக்கும் ஏற்றவகையில் இங்கு தமிழில் இலக்கண நூலொன்றைத் தயாரித்து வெளியிடுமாறு ஆசிரிய நண்பர்கள் கேட்டுக்கொண்டனர். இலக்கண பாடத்தை அலகு ரீதியாக கற்று, பின்னர் மாணவர் தம் அடைவைப் பரீட்சித்துப் பார்க்கும் வகையில் பல்தேர்வு வினாக்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான விடைகளும் நூலில் தரப்பட்டுள்ளன. மாணவர் நலன் கருதி கடந்த கால பரீட்சைகளில் இடம்பெற்ற பொருத்தமான வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இலக்கணம் கற்பிப்போருக்குத் தெளிவான வழிகாட்டுதல் இல்லாமையால் அவர்கள் பின்பற்றும் கற்பித்தல் முறை மாணவர் களிடையே பல குழப்பங்களைத் தோற்றுவிக்கின்றன. இலக்கணத்தின் இறுதிப் பயன் பிழையின்றி பேசவும் எழுதவும் உதவுவதேயாகும். இதனைக் கருத்திற் கொண்டே இலக்கண சிறுகுறிப்பும், குறுவினா விடைகளும் மிக எளிமையான இலகு தமிழில் எழுதப்பட்டுள்ளன. இதற்கு ஆதாரமாக நன்னூல், தொல்காப்பியச் சூத்திரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பழைய இலக்கண விதிகள் இன்றைய நடைமுறைத் தமிழுக்கு பொருந்தவில்லை என்பதை விட பொருத்திக் காட்டும் முயற்சியில்லையே என்பதுதான் என் கருத்து.

இந்நூலை வெளியிடுவதற்குப் பல உசாத்துணை நூல்களை நாட வேண்டியிருந்தது. அவற்றின் பட்டியல் நூலின் இறுதிப் பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்நூலாசிரியர்களுக்கு எனது நன்றிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் எனது மாணவருமான திரு. வே.ஞானசம்பந்தன் ஆவார். சரவை பார்த்து உதவியவர் எனது மாணவி செல்வி மயூரி மார்க்கண்டு ஆவார். நூலை அச்சுப்பதிப்பு செய்தவர் எனது மாணவி திருமதி மஞ்சுளா கமலதாசன் ஆவார். பத்து வருடங்களுக்கு மேலாக எனது பாடநூலாக்க சேவைக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து நூலை வெளியிட உதவிய பூபாலசிங்கம் பதிப்பகத்தினருக்கும் அதன் உரிமையாளரும் நண்பருமான திரு. பூ. ஸ்ரீதரசிங் அவர்களுக்கும் எனது நன்றி. அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு ஆலோசனைகள் வழங்கிவரும் பூபாலசிங்கம் புத்தகசாலை கணக்காளருமான திரு. சி. சுப்பிரமணியத்தையும் மறந்துவிட முடியாது.

நூல் பற்றிய கருத்துக்கள் தமிழ் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

**கி. நடராசா**

'ஈஸ்வரம்ஸ்'
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
தொ.பே.இல.: 0212263801



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

மொழியின் பல்வேறு வகைப்பட்ட பயன்பாடுகளில் இலக்கணம் வகிக்கும் பங்கு மிக முக்கியமானது. இலக்கியம் கற்பதற்கும், அதை ரசிப்பதற்கும், உரை கூறுவதற்கும், பிழையின்றி எழுதுவதற்கும், சரியாகப் பேசுவதற்கும், இலக்கணம் மொழியில் பெரும் பங்கினை வகிக்கிறது. சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றை கையாள்வதற்கு பயிற்சியும், தேர்ச்சியும் வேண்டுமெனில் இலக்கண அறிவு அவசிய மாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ்மொழியை கற்கும் மாணவர்கள், தமிழ் இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில் பெரும் இடர்ப்பாடுகளைச் சந்திக்கின்றனர். இவ்விடர்ப்பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருப்பவர்கள் தமிழாசிரியர்களே. அவ்வகையில் மூத்த தமிழாசிரியரான திரு. கிருஷ்ணபிள்ளை நடராசா அவர்களின் பங்கு சிறப்பாகப் போற்றத்தக்கது. தமிழ் இலக்கணத்தையும், இலக்கியத்தை யும் மிக அழகாக, மாணவர்களுக்கு கற்பிக்கும் வல்லமை வாய்ந்த இவ்வாசிரியர், மாணவர்களுக்காகவே தன் அறிவையும், ஆற்றலையும் பிரயோகித்து பல நூல்களை எழுதி வருகின்றார். கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான பாடத்திட்டத்திற்கமைய, இவ் ஆசிரியரால் உருவாக்கப்பட்ட இந்நூலுக்கு, இவரின் மாணவியாகிய நான் அணிந்துரை எழுதுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய மொழிக் கல்வியைப் பொறுத்தவரையில் மொழியியல், உளவியல், சமூகவியல் போன்ற சமூக விஞ்ஞானங்களின் பங்கு மிகவும் அதிகமாகவும், அவசியமாகவும் காணப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட மொழிக் கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்படும் மொழிக் கல்வித் திட்டம் தவறான மொழி மனப்பாங்குகளை மாற்றி மாணவர் களிடையே ஒரு தெளிவை உருவாக்கும். இதற்குக் காரணமாக அமை வது மொழியியல் என்ற சிந்தனையாகும். அவ்வகையில் இன்று தாய்மொழிக் கல்வியிலும், இரண்டாம் மொழிக் கல்வியிலும் மொழியிய லின் பங்களிப்பு சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. மொழி ஆசிரியர்கள் மொழியைப் பயிற்றுவதற்கு மொழியியல் கோட்பாட்டு அறிவு பயன்படுமென்பதை இன்று உணர்ந்து வருகின்றனர். இக் கோட் பாடுகளின் பொருளை உணர்ந்தால், மொழி கற்பித்தலைச் செம்மைப் படுத்த முடியுமெனவும் பல நாடுகள் செயல்முறையில் காட்டியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மொழியியல் அறிவு இருப்பது அவசியம் எனக் குறிப்பிடலாம்.

தற்போதைய சூழலில் தமிழ்மொழியைக் கற்பிக்கும் முறையை விதிமுறை என்று குறிப்பிடக் காரணம், தொல்காப்பியம், நன்னூல் போன்ற பழைய இலக்கண நூல்களில் காணப்படும் சூத்திரங்களை விளங்கிக் கொள்ளாமல், இவ்விதிகளை மனப்பாடம் செய்வதும் மரபிலக்கண நூல்களில் உள்ள விதிகளின் அடிப்படையில் இலக்கணப் பயிற்சிகளைச் செய்விப்பதும் வழக்கமாக இடம்பெறும் கற்பித்தல் முறைகளாகும். இவற்றால் மொழியைக் கற்பவர்களும் கற்பிப்பவர்களும் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். அதுமட்டுமல்ல மாணவர்கள் இலக்கணம் என்றால் முகஞ்சுழிக்கின்றனர்; இந்த காழ்ப்புணர்ச்சியே தமிழ் என்ற பாடத்தை விரும்பாமைக்குக் காரணமாகிறது.

ஆனால் மொழியியலாளர் இப் பாடநூல்களை இலகுவாக்க கற்பிக்கும் அணுகுமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அவற்றை உள்வாங்கிக் கொண்டே ஆசிரியர் இந் நூலை வரைந்துள்ளார்கள் எனக் கொள்ளமுடிகிறது. இந்நூலில் காணப்படும் ஒவ்வொரு இயலும், அவற்றிற்கான விளக்கங்களும், வினாவிடைகளும் மிக இலகுவான நடையில் எளிமையாகத் தரப்பட்டுள்ளன. இவை மாணவர்களை, இலக்கணம் என்ற பயமுறுத்தல் இன்றி, சாதாரணமாகக் கற்றுக்கொள்ளும் முறைமைக்கு கொண்டுசெல்கிறது. குறிப்பாக எழுத்தியல், சொல்லியல், வினையியல், வாக்கியவியல், இடையியல், புணரியல் எனப் பரந்துபட்ட பாடப் பரப்புகளை மிக நேர்த்தியாக தொகுத்துக் கொடுத்துள்ளமையைப் பார்க்கும்போது அவரின் உள் நோக்கம் இலக்கணத்தின்பாலுள்ள வெறுப்பை அகற்றி விருப்பத்தைத் தூண்டக் காரணமாயுள்ளது. அது மட்டுமல்லாமல் எழுத்தியல் முதல் புணரியல் வரை, இலக்கணச் சூத்திரங்களாகக் குறிப்பிடாமல், அவற்றின் விளக்கத்தை அழகிய சிறு சிறு வினாக்கள் மூலம் கிட்டத்தட்ட ஒவ்வொரு இயலுக்கும் 30 இலிருந்து 50 வரையான வினாக்களுடன் அவற்றிற்கான விடைகளையும் தந்து தெளிவுபடுத்தியுள்ளமை ஆசிரியரின் கற்பிக்கும் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

அடுத்து 'சிறு குறிப்பு எழுதுதல்' என்ற பகுதியியல் காணப்படும் இலக்கண அடிப்படைகள் யாவுமே மொழியியலறிஞர்களினால் ஒலியியல், ..., தொடரியல், வாக்கியவியல் என அழைக்கப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகளுக்குச் சமமாக எழுத்தியல், சொல்லியல் (பெயரியல், வினையியல் பகுப்புக்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வகை), வாக்கியவியல் (தொடரியலை உள்ளடக்கியது) எனப் பாகுபடுத்திய ஆசிரியர் அவற்றை இலகுவான நடைக்குள் நெறிப்படுத்தி இப் பகுதிகளுக்குள் அடக்கியுள்ளார். இது மாணவர்களுக்கு ஒரு சுமையாகவோ, உளத்தாக்கத்தை ஏற்படுத்துவதாகவோ அமைய முடியாது.

இவற்றுக்கும் மேலாக மரபிலக்கணத்தின் முக்கிய பகுதிகளாகவும், தமிழைப் பாடமாகக் கற்கும் க.பொ.த. சாதாரண தர, உயர்தர மாணவர்களிற்கு மிகக் கஷ்டம் என்ற மாயையை ஏற்படுத்தும் அங்கங்களாக இருக்கும் வினையியலும், புணர்ச்சி விதிகளும் ஆசிரியரின் மேன்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பொறுத்தவரை, தமிழ்மொழியின் வாக்கிய அமைப்புக்களுக்குள் காணப்படும் ஒவ்வொரு கூறுகளும் பொருளைக் குறிப்பனவாகவே அமையும். அத்தனை பொருள் வேறுபாடுகள் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். மொழியியல் கோட்பாடு களின்படி தமிழில் காணப்படும் இலக்கியத் தமிழ், பேச்சுத் தமிழ் அமைப்புக்களின் வேறுபாடுகள் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். வினையியல் சார்ந்த தெரிநிலை வினை, குறிப்பு வினை, பெயரெச்சம், வினையெச்சம், எதிர்மறை, ஏவல், வியங்கோள், தனி வினை, கூட்டு வினை, தன்வினை, பிறவினை, பெயரடை, விடையடை, தொகைகள் யாவற்றையும் மிக இலகுவாக, மாணவர்கள் விளங்கிக் கொள்ளத்தக்கதாக, இலக்கணங்கள் பற்றிய வரைவிலக்கணங்களையும் விளக்கங்களையும் மனதிற்கொண்டு, உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்தி இந்நூலை வடிவமைத்திருப்பது பாராட்டத்தக்கதாகும். இன்றைய காலகட்டத்தில் இத்தகையதொரு நூல் மிகமிக அவசியமாகின்றது.

மாணவர்கள் விடும் தவறுகளுக்கு ஆசிரியர்களின் தவறுகளும் காரணமாக இருக்கலாம். வினா விடைகள் கொடுக்கப்படுமிடத்து வினாக்களுக்கு அவற்றுக்குரிய விடைகள் சரியாகக் கொடுக்கப்பட வேண்டும். இவற்றால்கூட கற்பித்தல் முறைகளில் சிக்கல்கள் ஏற்படலாம். இவையெல்லாவற்றையும் மேவி, வினைக் கூறுகளைக் கற்றுக்கொள்ளத்தக்கதாக மிக இலகுவாக வாக்கிய அமைப்புக்களை விளக்கியுள்ளமை கண்கூடு.

மேலும் புணர்ச்சி விதிகளைப் பற்றி விளக்கும்போது, மிகவும் எளிதான சூத்திரங்களுக்கூடாக, சிறிய சிறிய உதாரணங்கள் தந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஷ்டமான பகுதிகளை இலகுவாக போதிக்கத்தக்கதாக புணர்ச்சி பற்றிய விளக்கங்கள் காணப்படுகின்றன. அத்துடன் வழு நிலை, வழா நிலை, அணிகள் பற்றிய வகைகள் யாவுமே எளிமையான வாக்கியங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டிருந்த குறு வினாக்கள், மேலதிக வினாக்கள் க.பொ.த. பாட விதானங்களுக்கு ஏற்றவகையில் மாணவர்களுக்கு தரப்பட்டிருந்தமையும், இவ் வினாக்கள் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரிய மாதிரி வினாக்களாகவும் தொகுக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இக் குறு வினாக்கள் உயர்தர மாணவர்களுக்கு மட்டும் பயன்படுவன அல்ல. சாதாரண தர மாணவர்களுக்கும் பயன்தரத்தக்கதான வகையில் இந்நூலின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே பரீட்சைகளின் போது தமிழ் இலக்கணம் பற்றி எத்தகைய வினாக்கள் வந்தாலும், அவ்விடயம் பற்றி முழுத் தகவல்களையும் அறிந்துகொள்ளத்தக்கதாக இப் பாட நூல்கள் அமைக்கப்பட்டுள்ளமையை நாம் மறுக்கமுடியாது.

திரு. கி. நடராஜா அவர்கள் மாணவர்களின் பயன் கருதி, பாடப் பகுதிகளை மிகத் திருத்தமான முறையிலே எடுத்துக் காட்டி, அவற்றின் உள்ளார்ந்த விடயங்களைத் தெளிவாக விளக்கி, அவற்றுடன் தொடர்பான, பொருத்தமான வினாக்களைத் தேர்ந்தெடுத்ததுடன், அவற்றிற்குரிய விடைகளையும் தந்து, ஒரு பாட நூலாகக் கருதாமல், அதனை பயிற்சி நூலாக அமையத்தக்க வகையில் உருவாக்கி கற்றோர் சமுகத்தினருக்கு சமர்ப்பித்துள்ளார்கள். இதனை கற்பதனால் மாணவர்கள் சமுதாயம் அடையும் பயனூடாக, ஆசிரியர்களுக்கும் இது ஒரு நல்ல வழிகாட்டியாக வும், கைநூலாகவும் அமையக்கூடியது. உடல்நலம் குன்றிய நிலை யிலும் கூடத் தமிழைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் மிகுந்த நாட்டம் கொண்டு உழைத்துவருகின்றார். அவரது நீண்ட கால அனுபவத்தின் அறுவடைகளாக இதற்கு முன்னர் பல நூல்கள் வெளியிடப்பட்டு வந்தன. மாணவர், ஆசிரியர் மத்தியில் அந் நூல்களுக்கு பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளன. எனவே தொடர்ந்தும் இவ்வாசிரியரின் நூல்கள் வெளிவர வேண்டும்; தமிழுலகம் பயன்பெறவேண்டும்.

**பேராசிரியர் சுபதினி ரமேஷ்**
மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். 26.12.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

முன்னுரை iii
அணிந்துரை v

1. பல்தேர்வு வினாக்கள்
   1.1. எழுத்தியல் 1
   1.2. சொல்லியல் 8
   1.3. வினையியல் 16
   1.4. வாக்கியவியல் 25
   1.5. இடையியல் 36
   1.6. புணரியல் 40

2. சிறுகுறிப்பு எழுதுதல்
   2.1. எழுத்தியல் 45

   எழுத்துக்களின் பிறப்பிடம், தமிழ்மொழியின் மூல ஒலி வடிவங்கள், முதலெழுத்துக்களின் கால அளவு, மெய் யெழுத்துக்களின் கால அளவு, இன எழுத்துக்கள், கூட் டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள், போலி, சார்பெழுத் துக்கள், குற்றியலுகரம், உயிரளபெடை, ஒற்றளபெடை, முதனிலை எழுத்துக்கள், மொழி இறுதிநிலை எழுத்துக் கள், இடைநிலை மெய்மயக்கம்

   2.2. சொல்லியல் 57

   பகுபதம், பகாப்பதம், பகுதி, விகுதிகள், இடைநிலை கள், சாரியை, மூவகை மொழிகள், பெயர்ச்சொல்லின் தனித்துவமான பண்புகள், மூவிடப் பெயர்கள், இடுகுறி காரணப் பெயர், ஆக்கப் பெயர், கூட்டுப்பெயர், மாற்றுப் பெயர், உயர்திணை ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், இருதிணைப் பொதுப்பெயர், உயர்திணை ஆண் பெண் பொதுப் பெயர், மரியாதை ஒருமைப் பெயர், உயர்திணை பலர்பாற் பெயர், பால்பகா அஃறிணைப் பெயர், தொழிற் பெயர், வினையாலணையும் பெயர், தொழிற்பெயர் வினை யாலணையும் பெயர் வேறுபாடு.

   2.3. பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்கும் முறை 73
   2.4. ஆகுபெயர் 81
   2.5. சொற் பாகுபாடு 84

   இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வினையியல் 89

தெரிநிலை வினை, குறிப்பு வினை, தெரிநிலை வினை குறிப்பு வினை வேறுபாடு, பெயரெச்சம், தெரிநிலை வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று, எதிர்மறைப் பெயரெச்சம், வினையெச்சம், செய்து, செய, செய்தால் எச்சங்கள், எதிர்மறை வினையெச்சம், குறிப்பு வினையெச்சம், ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினை முற்று, ஏவல் வியங்கோள் வேறுபாடு, தனிவினை, கூட்டுவினை, செயப்படுபொருள் குன்றிய, குன்றா வினைகள், தன்வினை, பிறவினை, காரணவினை, செய்வினை, செயப்பாட்டு வினை, துணைவினை, மெல்வினை, வல்வினை, இடைவினை, மூவிடப் பொதுவினை, முற்றெச்சம், பெயரடை, வினையடை.

4. தொகைநிலைத் தொடர் 112

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை

5. புணரியல் 116

இயல்புப் புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி, உயிர்முன் உயிர் புணர்தல், அகப்புறப் புணர்ச்சி, குற்றியலுகரப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, மெய் முன் உயிர் புணர்தல், மெய்முன் மெய் புணர்தல், மகர ஈற்றுப் புணர்ச்சி, னகர, ணகர ஈற்றுப் புணர்ச்சி, லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி.

6. வழாநிலை - வழு - வழுவமைதி 126

திணை வழுவமைதி, திணைபால் வழுவமைதி, இடவழு வமைதி, கால வழுவமைதி

7. அணிகள் பற்றிய விளக்கம் 130

தன்மை, உயர்வு நவற்சியணி, உவமை அணி, உருவக அணி, தற்குறிப்பேற்றம், சொற்பின்வரு நிலை, கருத்துடை அடை கொளி யணி, ஒப்புமைக் கூட்டணி, வேற்றுமையணி, வேற்றுமைப் பொருள் வைப்பு அணி, பிறிது மொழிதல் அணி

8. குறு வினாவிடைகள் 138

8.1. வாக்கியம் திருத்தி எழுதுதல் 138

8.2. இலக்கண வழுக்களை கண்டறிதல் 145

8.3. பொருள் மயக்கத்தை இனங்காணல் 146

8.4. செய்வினை, செயப்பாட்டு வடிவங்கள் 150

8.5. எழுத்துப்பிழைகள் நீக்குதல் 154

9. உசாத்துணை நூல்கள் 156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தியல்

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. *முதல் எழுத்து என்பது,*
1) சொல்லுக்கு முதலில் வரும் எழுத்து
2) உயிரெழுத்து 3) உயிர்மெய் எழுத்து
4) மெய்யெழுத்து 5) உயிரெழுத்தும் மெய்யெழுத்தும்
(........)

02. *பின்வருவனவற்றுள் உடம்படுமெய்யாக வரக்கூடிய எழுத்து*
1) த் 2) ஞ் 3) ய் 4) ப் 5) ம்
(........)

03. *மூக்கொலிகள் இடம்பெறும் சொல்.*
1) நகல் 2) குரல் 3) விரல் 4) மணம் 5) கடல்
(........)

04. *தற்காலத் தமிழில் மொழி முதலில் இடம்பெறாத எழுத்து.*
1) அ 2) க 3) ன 4) ப 5) ல
(........)

05. *மூன்று மெய்கள் மயங்கிவரும் சொல்*
1) பக்கம் 2) மேய்ச்சல்
3) அண்ணம் 4) வெற்றி 5) வர்ணம்
(........)

06. *பின்வருவனவற்றுள் அரைஉயிர் எனப்படுவது,*
1) ஐ 2) ஔ 3) ஆ 4) ச் 5) வ்
(........)

07. *வேற்றுநிலை மெய்ம்மயக்கம், உடனிலை மெய்ம்மயக்கம் இரண்டும் இடம்பெற்ற சொல்*
1) பாக்குமரம் 2) வசந்தகாலம்
3) புகையிரதம் 4) பார்த்தான்
5) வாழ்ந்தான்
(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. ‘ப’கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொற்கள்

1) படம், நுட்பம் 2) மார்பு, அம்பு
3) கப்பல், சிற்பம் 4) மாண்பு, வெண்பா
5) பிழை, புயல் (........)

09. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் மட்டும் வரும் எழுத்துகள்

1) ல்,வ் 2) ண்,ர் 3) ள்,ழ் 4) ர்,ழ் 5) க்,ச் (........)

10. உடனிலை மெய்ம்மயக்கத்தில் மட்டும் வரும் எழுத்துகள்

1) க்,ச் 2) த்,ற் 3) ப்,ம் 4) ர்,ழ் 5) ய்,ழ் (........)

11. தற்காலத் தமிழில் மொழியிறுதியில் இடம்பெறாத எழுத்துகளை மட்டும் கொண்ட தொகுதி

1) அ,இ,எ 2) உ,ஒ,ஏ 3) ஐ,ஓ,ஔ
4) ஒ,ஔ,எ 5) ஈ,ஏ,ஆ (........)

12. பின்வருவனவற்றுள் நுனி நா நடு அண்ணத்தை தொட உச்சரிக்கப்படும் எழுத்து

1) ன 2) ர 3) ஞ 4) ண 5) ங (........)

13. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்.

1) பற்கள் 2) கப்பல் 3) வெட்கம்
4) வாய்க்கால் 5) நட்பு (........)

14. பின்வருவனவற்றுள் கூட்டுயிர்

1) ஆ 2) ஈ 3) ஐ 4) கை 5) ஓ (........)

15. ஈரிதழ் ஒலி அமையப்பெறாத சொல்.

1) பஞ்சு 2) அவல் 3) கமல் 4) மருந்து 5) பறவை (........)

16. பின்வருவனவற்றுள் உதட்டுப் பல்லொலி

1) க் 2) ப் 3) வ் 4) ந் 5) ன் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பின்வருவனவற்றுள் உகரம் இதழ் குவிந்து உச்சரிக்கப்படும் சொல்.

1) பாக்கு 2) கொக்கு 3) புயல் 4) மாண்பு 5) மஞ்சு

(........)

18. ல்,ள்,ழ் ஆகிய ஒலிகளைக் குறிக்கும் பொருத்தமான ஒலி வகை.

1) மூக்கொலி 2) மருங்கொலி 3) ஆடொலி
4) வெடிப்பொலி 5) உரசொலி

(........)

19. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்.

1) பல்லி 2) அக்கா 3) அவ்வை 4) வட்டம் 5) பஞ்சம்

(........)

20. பின்வருவனவற்றுள் ஈரிதழ் மூக்கொலி எழுத்து.

1) ப் 2) ம் 3) வ் 4) ங் 5) ஞ்

(........)

21. சொல்லுக்கு இடையில் இரட்டித்து வராத எழுத்து.

1) ப் 2) ம் 3) ள் 4) க் 5) ர்

(........)

22. உயிர்த்தொடர் குற்றியலுகரம் இடம்பெற்ற சொல்.

1) வரகு 2) நாக்கு 3) பருந்து 4) இது 5) ஆடு

(........)

23. பின்வருவனவற்றுள் அண்ண ஒலிகளை குறிக்கும் எழுத்து.

1) ச,ஞ,ய 2) ற,ள,ல 3) ல,ழ,ள 4) ப,ம,வ 5) ர்,ற,க

(........)

24. 'க'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1) கடல் 2) முட்கள் 3) சங்கம் 4) பக்கம் 5) பற்கள்

(........)

25. பின்வருவனவற்றுள் போலி எழுத்து இடம்பெறும் சொல்.

1) சாம்பர் 2) சாம்பார் 3) மகள் 4) அகம் 5) மகம்

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. தனக்குரிய மாத்திரையில் கூடியும் குறைந்தும் ஒலிக்கும் உயிர் எழுத்து.

1) இ 2) உ 3) ஐ 4) எ 5) ஒ

(........)

27. இதழ் குவியா உயிரெழுத்துக்களைக் கொண்ட தொகுதி மட்டும்

1) அ, ஆ, இ, ஈ 2) உ, ஊ, ஒ, ஓ
3) இ, ஈ, உ, ஊ 4) அ, ஆ, உ, ஊ
5) இ, ஈ, ஒ, ஓ

(........)

28. இகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்.

1) பிழை 2) விலை 3) இரை 4) மிகை 5) இமை

(........)

29. தற்காலத்தில் இலக்கண விதிகளுக்கு மாறாக அமைந்த வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொல்

1) செய்க 2) கொள்க 3) பத்மா 4) சந்தி 5) தாழ்வு

(........)

30. 'ந'கரம், 'ன'கரம் ஒரேவிதமாக உச்சரிக்கப்படுவதற்கு உதாரணம்.

1) பந்து, மன்றம் 2) சந்தை, சன்னம்
3) நாய், போனாய் 4) சந்தை, மன்று
5) மந்தம், மன்னன்

(........)

31. சந்தியக்கரம் எனக் குறிப்பிடும் எழுத்துகள்

1) ஐ, இ 2) ஔ, உ 3) இ, அ 4) உ, ஊ 5) ஐ, ஔ

(........)

32. இன எழுத்து இல்லாத எழுத்துத் தொகுதி

1) வல்லினம் 2) குறில்
3) மெல்லினம் 4) நெடில்
5) இடையினம்

(........)

33. இரண்டு உயிரொலிகளுக்கிடையே 'க'கர ஒலி இடம்பெறும் சொல்.

1) தங்கம் 2) பக்கம் 3) பாகம் 4) முட்கள் 5) பற்கள்

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. 'ந'கரம் பல்லொலியாக ஒலிக்கும் சொல்

1) நன்றி 2) நமது 3) நீங்கள் 4) நாலி 5) சந்து

(........)

35. வருடொலி எனக் குறிப்பிடுவது

1) க 2) ச 3) ர 4) ய 5) வ

(........)

36. பன்னிரண்டு உயிரோடு சேர்ந்து மொழி முதலாகும் மெல்லின எழுத்துக்கள்

1) ந, ம 2) ம, ண 3) ஞ, ந 4) ம, ஞ 5) ந, ன

(........)

37. தற்காலத்தில் மொழி இறுதியில் அரிதாக இடம்பெறும் மெய் எழுத்துகள்

1) ள், ழ் 2) ந், வ் 3) க், ச் 4) ட், த் 5) ஞ், ட்

(........)

38. பின்வருவனவற்றுள் அகச்சுட்டாக அமைந்த சொல்

1) அச்சம் 2) அத்து 3) அவ்வீடு 4) அது 5) அல்ல

(........)

39. 'த'கரம் வல்லினமாக ஒலிக்காத சொல்

1) கொய்தேன் 2) தப்பு 3) சொத்து

4) பித்தன் 5) சக்தி (........)

40. உடனிலை மெய்ம்மயக்கத்திற்கு மட்டும் உரித்தான மெய் யெழுத்துத் தொகுதி

1) க, ச, த, ப 2) ய, ர, ல, வ 3) க, ச, ட, த

4) க, ச, ந, ம 5) ய, ர, ழ, ள (........)

41. பின்வருவனவற்றுள் இலக்கண விதிகளுக்கு மாறாக அமைந்துள்ள சொல்

1) பச்சை 2) ஆத்மா 3) வெட்கம்

4) கொள்கை 5) பத்தி (........)

42. பின்வரும் எழுத்துகளுள் உடனிலை மெய்ம்மயக்கத்தில் வராத எழுத்து எது?

1) க 2) ல 3) ழ் 4) ன் 5) த்

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. ஈரெழுத்துச் சொற்களில் குறிலை அடுத்து வராத மெய் யெழுத்துக்கள் எவை?

1) ர், ழ் 2) க், ச் 3) ட், ற் 4) ப், வ் 5) ன், ண்

(........)

44. பின்வருவனவற்றுள் 'எ' வேறுபட்டு ஒலிக்கும் சொல்

1) என்ன 2) எங்கு 3) எளிமை 4) எது 5) எல்லை

(........)

45. பின்வருவனவற்றுள் சொல் இடையில் யகர மெய்யை அடுத்து மயங்கக்கூடிய எழுத்து

1) ட் 2) வ் 3) ர் 4) ழ் 5) ம்

(........)

46. பின்வருவனவற்றுள் வெடிப்புரசொலி என அழைக்கப்படுவது யாது?

1) க 2) ச 3) ட 4) த 5) ப

(........)

47. முற்றாய்தம் இடம்பெற்றுள்ள சொல்

1) அ∴றிணை 2) மு∴டீது 3) ப∴றுளி

4) எ∴கு 5) க∴றீது

(........)

48. தற்காலத்தில் பிறமொழிச் சொற்களோடு கலந்து மொழிக்கு முதலாகும் எழுத்துகள் எவை?

1) க, ச 2) த, ப 3) ல, ழ 4) ட, ற 5) ர, ந

(........)

49. இடையின மெய் எழுத்துகள் பிறக்கும் இடம் எது?

1) மார்பு 2) மூக்கு 3) தொண்டை

4) தலை 5) பல்.

(........)

50. பின்வருவனவற்றுள் வளையிநா மூக்கொலி

1) ம் 2) ன் 3) ண் 4) ஞ் 5) ங்

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| *01. 5* | *11. 4* | *21. 5* | *31. 5* | *41. 2* |
| *02. 3* | *12. 4* | *22. 1* | *32. 5* | *42. 3* |
| *03. 4* | *13. 2* | *23. 1* | *33. 3* | *43. 1* |
| *04. 3* | *14. 3* | *24. 3* | *34. 5* | *44. 3* |
| *05. 2* | *15. 2* | *25. 1* | *35. 3* | *45. 5* |
| *06. 5* | *16. 3* | *26. 3* | *36. 1* | *46. 2* |
| *07. 4* | *17. 3* | *27. 1* | *37. 2* | *47. 4* |
| *08. 2* | *18. 2* | *28. 1* | *38. 4* | *48. 4* |
| *09. 4* | *19. 5* | *29. 3* | *39. 1* | *49. 3* |
| *10. 1* | *20. 2* | *30. 3* | *40. 1* | *50. 3* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்லியல்

*01.* *ஒரு பகுபதத்தின் பகுதி என்பது*

1) பகுபதத்தின் முதலில் வரும் உறுப்பு
2) விகுதி ஏற்கும் சொல்
3) விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி போன்றவற்றை ஏற்கும் அடிச்சொல்
4) ஒரு பகுபதத்தில் இடம்பெறும் பகாப்பதம்
5) வேற்றுமை உருபு ஏற்கும் வடிவம் (........)

*02.* *பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்*

1) இருந்தார்கள் 2) கைவிட்டார்கள்
3) ஓடுகின்றார்கள் 4) வருகின்றன
5) சித்திரித்தார்கள் (........)

*03.* *பின்வருவனவற்றுள் இன் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்*

1) வீட்டிற்கு 2) மரத்தை 3) பள்ளிக்கு
4) ஆசையால் 5) பனங்காய் (........)

*04.* *பின்வருவனவற்றுள் பின்னொட்டு ஏற்காத சொல்*

1) அநீதி 2) நோயாளி 3) புதுமை
4) அரசியல் 5) பாட்டாளி (........)

*05.* *அறி என்ற சொல்லை அடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்*

1) அறிவு 2) அறிதல் 3) அறிவது
4) அறிக்கை 5) அறிந்தது (........)

*06.* *பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் எது?*

1) புத்திசாலி 2) பாமரத்தனம் 3) முதலீடு
4) அறிவாளி 5) நோயாளி (........)

*07.* *பின்வருவனவற்றுள் 'தல்' விகுதி பெற்ற தொழிற்பெயர்*

1) போதல் 2) காதல்
3) உண்ணல் 4) வருடல் 5) கருதல்
(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. *பின்வருவனவற்றுள் உருபு இல்லாமலும் திரிபடையாமலும் உணர்த்தப்படும் வேற்றுமை*

1) இட வேற்றுமை 2) கொடை வேற்றுமை

3) எழுவாய் வேற்றுமை 4) விளி வேற்றுமை

5) உடனிகழ்ச்சி வேற்றுமை (........)

09. *நீ போனதைக் கண்டேன் – இதில் போனது என்ற சொல்*

1) அ∴றிணை வினைமுற்று 2) வினையாலணையும் பெயர்

3) தொழிற்பெயர் 4) படர்க்கைப் பெயர்

5) பண்புப் பெயர் (........)

10. *நடந்து வந்தவன் திடீரென விபத்துக்குள்ளாயினான். இதில் வந்தவன் என்பது*

1) இறந்தகால வினைமுற்று 2) பயனிலை

3) படர்க்கைப் பெயர் 4) வினையாலணையும் பெயர்

5) பொதுப்பெயர் (........)

11. *மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது. இதில் ஆல் உருபு உணர்த்தும் வேற்றுமைப் பொருள்*

1) கருவி 2) கருத்தா 3) நீங்கல்

4) உடனிகழ்ச்சி 5) இடம் (........)

12. *சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்கள் தமிழுக்குப் பெரும் தொண்டாற்றியவர். இதில் அவர்கள் என்பது*

1) பலர்பாற் பெயர் 2) படர்க்கைப் பெயர்

3) ஒருமைப் பெயர் 4) மரியாதைப் பன்மைப் பெயர்

5) மரியாதை ஒருமைப்பெயர் (........)

13. *பத்து மாம்பழங்கள் வாங்கினேன். அதில் இரண்டு பழுதானவை. இதில் வரும் இரண்டு என்பது*

1) எண்ணுப்பெயர் 2) மாற்றுப் பெயர்

3) எண் அடை 4) அளவுப் பெயர் 5) பெயரடை

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. *பின்வருவனவற்றில் எதிர்மறைத் தொழிற்பெயர் கொண்ட தொகுதி*

1) வராதவன், போகாதவன் 2) வராதே, போகாதே

3) வராதது, போகாதது 4) வராத, போகாத

5) வராது, போகாது (.......)

15. *பெருமழை பெய்ததால் பயிர்கள் நாசமடைந்தன. இவ் வாக்கியத்தில் வரும் 'ஆல்' உருபு உணர்த்துவது,*

1) கருத்தாப் பொருள் 2) கருவிப் பொருள்

3) நிபந்தனைப் பொருள் 4) காரணப் பொருள்

5) அழுத்தப் பொருள் (.......)

16. *'கள்' விகுதி இணையும்போது அவ்விகுதியின் முதல் எழுத்தை இரட்டிக்கச் செய்யும் சொல்.*

1) மாடு 2) புல் 3) மரம் 4) காய் 5) பசு

(.......)

17. *மரியாதை ஒருமைப் பொருள் உணர்த்தும் சொல்*

1) தாய்மார் 2) தாயார் 3) தாய்

4) தாயர் 5) தாய்மார்கள் (.......)

18. *விளி வேற்றுமை ஏற்காத சொல்*

1) தம்பி 2) மனம் 3) நீ 4) தாய் 5) ஆசிரியர்

(.......)

19. *'ஆக' என்னும் விகுதி பெற்று வினையடையாக இயங்கவல்ல தொழிற்பெயர்.*

1) பாடுதல் 2) இனிமை 3) வாடுதல் 4) ஆறுதல் 5) சீறுதல்

(.......)

20. *பின்வருவனவற்றுள் பகுபதமாகவும், பகாப்பதமாகவும் வரும் சொல்.*

1) பாவை 2) நாவை 3) நோவை 4) கோர்வை 5) கூகை

(.......)

21. *பின்வருவனவற்றுள் சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்.*

1) நாட்டுக்கு 2) நாட்டிற்கு 3) அவர்கட்கு

4) நாய்க்கு 5) வட்டிக்கு (.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. தலைவர் அவர்களே தங்கள் வரவு நல்வரவாகட்டும். இதில் தங்கள் என்பது,

1) படர்க்கை தற்சுட்டுப் பெயர்

2) படர்க்கைப் பன்மைப் பெயர்

3) முன்னிலைப் பன்மைப் பெயர்

4) முன்னிலை மரியாதை ஒருமைப் பெயர்

5) படர்க்கை மரியாதை ஒருமைப் பெயர்

(........)

23. துன்ப நினைவுகளில் இருந்து என்னால் விடுபட முடியவில்லை. முறையே இவ் வாக்கியத்தில் இடம்பெற்ற வேற்றுமைகளின் பொருள்.

1) நீங்கல், கருவி

2) இடம், கருவி

3) நீங்கல், கருத்தா

4) இடம், காரணம்

5) எல்லை, காரணம்

(........)

24. தானியாகு பெயர் இடம்பெற்ற தொடர்

1) தாமரை சூடினாள்

2) ஊர் அடங்கியது

3) கழல் பணிந்தான்

4) வெள்ளை உழுந்து

5) கார்த்திகை பூத்தது

(........)

25. பின்வருவனவற்றுள் படர்க்கை தற்சுட்டுப் பெயர் இடம் பெற்றுள்ள வாக்கியம்

1) அவன் என்னை அன்போடு வரவேற்றான்

2) அவன் உன்னைப் பாராட்டிப் பேசினான்

3) அவன் எங்களை மிகவும் நம்பியிருக்கின்றான்

4) அவன் தன்னைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை

5) அவன் நீங்கள் சொன்னால் கட்டாயம் கேட்பான்

(........)

26. 'சில' என்பது அடைமொழியாக இடம்பெற்ற சொல்

1) சிலர் மாணவர்களைக் குறை கூறுகின்றார்கள்

2) மாணவர்கள் சில குறைபாடுகளை சுட்டிக் காட்டுகிறார்கள்

3) குறைகள் சிலவற்றை ஒப்புக்கொண்டார்கள்

4) அவற்றுள் சிலவற்றுக்கு தீர்வு காணப்பட்டது.

5) சில தீர்க்க முடியாதவைகளாக உள்ளன.

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பின்வருவனவற்றுள் வேற்றுமைத்தொகை இடம்பெற்ற சொல்

1) ஆடு கதிரை 2) வட்ட மேசை
3) தென்னை மரம் 4) முத்துப்பல்
5) மலர்மாலை (........)

28. சிறுவன் சாரைப்பாம்பினைக் கண்டு நடுங்கினான். இதில் சாரைப் பாம்பு என்பது,

1) வேற்றுமைத் தொகை 2) உம்மைத் தொகை
3) உவமைத் தொகை 4) பண்புத் தொகை
5) இருபெயரொட்டுப் பண்புத் தொகை (........)

29. பின்வருவனவற்றுள் உயர்திணையில் ஒரு பாலுக்குரிய பெயர்.

1) கூத்தாடி 2) பிரதிவாதி 3) மூதாட்டி
4) விருந்தாளி 5) நீதிபதி (........)

30. பால் பகா அஃறிணைப் பெயரென்பது

1) ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவானது
2) ஆண்பால், பலர்பால் இரண்டிற்கும் பொதுவானது
3) ஐம்பாலுக்கும் பொதுவான பெயர்
4) ஒன்றன்பால், பலவின்பால் இரண்டிற்கும் பொதுவான பெயர்
5) பலர்பால், பலவின்பால் இரண்டிற்கும் பொதுவான பெயர்
(........)

31. எங்களுக்கு காலம் வரும்போது அனைவரும் உயர்வடைவர். இதில் எங்கள் என்பது

1) தன்மைப் பன்மைப் பெயர்
2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மைப் பெயர்
3) உளப்படுத்தா தன்மைப் பெயர்
4) தன்மைப் பெயர் 5) தற்சுட்டுப் பெயர் (........)

32. மயில் ஆடியது அழகாக இருந்தது. இதில் ஆடியது என்பது,

1) வினைமுற்று 2) ஆக்கப் பெயர்
3) வினையாலணையும் பெயர் 4) தொழிற்பெயர்
5) மாற்றுப் பெயர் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. *இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவான பெயர்,*

1) பிள்ளை 2) வேறு 3) நாம் 4) எல்லாம் 5) தாம்

(........)

34. *அந்த வீட்டிற்கு வந்த இரண்டு மூன்று நாட்களில் அவளுக்குப் பல உண்மைகள் தெரிந்துவிட்டன. இதில் இடம்பெற்றுள்ள மாற்றுப் பெயர்*

1) வீடு 2) நாள் 3) அவள் 4) உண்மை 5) அந்த

(........)

35. *மீண்டும் பிறப்பு உண்டேல் உனை என்றும் மறவாமை வேண்டும். இதில் மறவாமை என்பது.*

1) தொழிற்பெயர் 2) எதிர்மறைத் தொழிற்பெயர்

3) எதிர்மறை வினைமுற்று 4) வினைமுற்று

5) எதிர்மறை வினையாலணையும் பெயர் (........)

36. *அவன் இளநீர் வெட்டினான். இதில் இடம்பெற்ற ஆகுபெயர்*

1) பொருளாகு பெயர் 2) கருவியாகு பெயர்

3) கருத்தாவாகு பெயர் 4) தானியாகு பெயர்

5) குணவாகு பெயர் (........)

37. *வாழ்நாள் என்பதை வாணாள் எனக் கூறுவது*

1) இடக்கரடக்கல் 2) மங்கலம் 3) மருஉ

4) இலக்கணப்போலி 5) குழுஉக்குறி (........)

38. *அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை போல என்ற தொடரில் நீர்ப்பறவை உணர்த்தும் வேற்றுமை*

1) மூன்றாம் வேற்றுமை 2) நான்காம் வேற்றுமை

3) ஐந்தாம் வேற்றுமை 4) ஆறாம் வேற்றுமை

5) ஏழாம் வேற்றுமை (........)

39. *பின்வருவனவற்றுள் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக அமைந்த சொல்*

1) குரிசில் 2) விமானி

3) தோன்றல் 4) செவிலி 5) நம்பி

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. *சுசிலா கணவனுடன் வெளிநாடு போனதைப் பற்றி இதுவரை யாரும் எனக்கு சொல்லவில்லை. இதன் எழுவாய்*

1) சுசிலா 2) எனக்கு 3) யாரும்

4) வெளிநாடு 5) சுசிலா வெளிநாடு போனது

(........)

41. *ஒரு வாக்கியத்தில் வினையின் பயனுக்கு உட்படும் பெயர்ச் சொல் எவ்வாறு அழைக்கப்படும்?*

1) எழுவாய் 2) பயனிலை

3) செயப்படுபொருள் 4) கருவி 5) கருத்தா

(........)

42. *பின்வருவனவற்றுள் உருபு மயக்கமாக அமைந்த வாக்கியம்*

1) கம்பால் அடித்தான் 2) தெருவால் போனான்

3) என்னைப் பார்த்தான் 4) தூணில் சார்ந்தான்

5) பாடம் படித்தான் (........)

43. *பின்வருவனவற்றுள் பொதுமொழியாக அமைந்த சொல்*

1) தாமரை 2) மங்கை 3) எருமை 4) கருமை 4) அல்லி

(........)

44. *ஆரிய மொழிக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவாகி விகார மின்றி வழங்கும் வடசொல்*

1) காரணம் 2) அட்சரம் 3) இலக்குமி

4) அத்திரம் 5) அட்டமி (........)

45. *பின்வருவனவற்றுள் பகுபதமாக அமையும் சொல்*

1) காலம் 2) அகலம் 3) மணம் 4) குணம் 5) இடம்

(........)

46. *பின்வருவனவற்றுள் 'அன்' என்னும் ஆண்பால் விகுதி இணைந்து வரமுடியாத சொல்*

1) அரசு 2) கலை 3) அறிவு 4) ஆலயம் 5) கருமை

(........)

47. *பின்வருவனவற்றுள் 'இன்' இடைநிலையாக வந்துள்ள சொல்.*

1) பழத்தின் 2) வீட்டிற்கு 3) ஓடினேன் 4) ஓடியது 5) நாட்டிற்கு

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. *பின்வருவனவற்றுள் பகாப்பதமாக அமைந்த சொல்*

1) சிரித்து 2) மற்று 3) அவன் 4) ஆடுகள் 5) நன்மை

(........)

49. *வாடியது என்ற சொல்லின் சாரியை*

1) வாடு 2) வாடி 3) இ 4) அ 5) ய்

(........)

50. *பின்வருவனவற்றுள் உளப்பாட்டு தன்மைப் பெயர் எது?*

1) நான் 2) நாம் 3) யான் 4) எங்கள் 5) நாங்கள்

(........)

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| *01. 3* | *11. 3* | *21. 2* | *31. 3* | *41. 3* |
| *02. 2* | *12. 5* | *22. 4* | *32. 4* | *42. 2* |
| *03. 1* | *13. 2* | *23. 3* | *33. 4* | *43. 1* |
| *04. 4* | *14. 3* | *24. 3* | *34. 3* | *44. 1* |
| *05. 4* | *15. 4* | *25. 4* | *35. 2* | *45. 2* |
| *06. 3* | *16. 5* | *26. 2* | *36. 4* | *46. 4* |
| *07. 1* | *17. 2* | *27. 5* | *37. 3* | *47. 3* |
| *08. 3* | *18. 3* | *28. 5* | *38. 5* | *48. 2* |
| *09. 3* | *19. 4* | *29. 3* | *39. 2* | *49. 4* |
| *10. 4* | *20. 1* | *30. 4* | *40. 3* | *50. 2* |

Class No:
Acc No 1601
Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையியல்

01. 'போ' என்ற வினையின் செய்து என்ற வாய்பாட்டு வினை எச்சம்

1) போட்டு 2) போய் 3) போக 4) போன 5) போனால்

(........)

02. மாலன் ஊருக்குப் போய்விட்டான். போய்விட்டான் என்பதில் போ என்பது

1) முதல் வினை 2) ஏவல் வினை

3) துணை வினை 4) வினையடி

5) முன்னிலை வினை (........)

03. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்து காலம் காட்டும் சொல்

1) பாடினான் 2) வந்தான் 3) நட்டான்

4) கூட்டினான் 5) தூங்கினான் (........)

04. வாருங்கள் - இச் சொல் பற்றிய பொருத்தமான இலக்கண விளக்கம்

1) படர்க்கை வினைமுற்று

2) வியங்கோள் வினைமுற்று

3) எதிர்மறை ஏவல் வினைமுற்று

4) ஏவல் பன்மை வினைமுற்று

5) முன்னிலை வினைமுற்று (........)

05. பின்வருவனவற்றுள் காரண வினை

1) செய்தேன் 2) செய்துவிட்டேன்

3) செய்வித்தேன் 4) செய்து முடித்தேன்

5) செய்கிறேன் (........)

06. பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினை இடம் பெற்ற வாக்கியம்

1) அவன் கவனமாக படித்தான்

2) அவன் விரைவாக நடந்தான்

3) அவன் இனிமையாகப் பாடினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) அவன் நன்றாக உழுதான்

5) தாய் மகனுக்கு உணவூட்டினாள் (........)

07. *பாய், நட என்பனவற்றின் நிபந்தனை வினை எச்ச வடிவம்*

1) பாய்வதால், நடப்பதால் 2) பாய்ந்தால், நடந்தால்

3) பாய்ந்து, நடந்து 4) பாய்ந்ததால், நடந்ததால்

5) பாய்ந்த, நடந்த (........)

08. *வினையடை இடம்பெற்ற வாக்கியம்*

1) துரத்திச் சென்றான் 2) நேற்று வந்தான்

3) மடக்கிப் பிடித்தான் 4) எழுந்து நின்றான்

5) நிமிர்ந்து நின்றான் (........)

09. *பின்வருவனவற்றுள் 'இ' என்னும் இறந்த கால இடைநிலை இடம்பெற்ற சொல்*

1) பாடினேன் 2) பாடினான் 3) பாடின

4) பாடியது 5) பாடுவார்கள் (........)

10. *பின்வருவனவற்றுள் வினையடைகளைக் கொண்ட தொகுதி*

1) நேற்று, இன்று, நாளை 2) வந்து, இருந்து, நின்று

3) பழுத்த, நல்ல, சிறிய

4) பளபளப்பு, மொறுமொறுப்பு, சுறுசுறுப்பு

5) இனிய, கடிய, படித்த (........)

11. *பாடிக் கொண்டிருந்தனர், பேசிக் கொண்டிருந்தனர். இவ் வினைச் சொற்களின் பகுதி*

1) பாடு, பேசு 2) பாடி, பேசி

3) பாடிக்கொள், பேசிக்கொள் 4) பாட, பேச

5) பாடிக்கொண்டிரு, பேசிக்கொண்டிரு (........)

12. *பின்வருவனவற்றுள் இறந்தகாலம் காட்ட 'இன்' இடைநிலை ஏற்கும் வினைச்சொல்*

1) நட 2) வா 3) போ 4) இரு 5) கூவு

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. *கூட்டுவினை இடம்பெறும் வாக்கியம்*

1) நான் ஊருக்குப் போய்வந்தேன்

2) நான் ஊரிலிருந்து வந்துவிட்டேன்

3) நான் ஊரிலிருந்து வந்தேன்

4) நான் ஊருக்கு வரமாட்டேன்

5) நான் உங்களை ஊருக்கு வந்து பார்க்கிறேன் (........)

14. *பார் என்பது துணை வினையாக வந்த வாக்கியம்*

1) நான் கண்டியின் அழகைப் பார்த்தேன்

2) இராமன் சீதையோடு சென்றதைப் பார்த்தேன்

3) காலம் வரும் பொறுத்திருந்து பார்ப்போம்

4) சட்டை அளவோ எனப் போட்டுப் பார்த்தேன்

5) ஊருக்குச் சென்று உறவினரைப் பார்த்துவந்தேன்

(........)

15. *செயப்பாட்டு வினைக்கு மாற்றமுடியாத வாக்கியம்*

1) யானை பாகனைக் கொன்றது

2) பாகன் யானைக்கு உணவு ஊட்டினான்

3) யானை சோற்றுக் கவளத்தை விழுங்கியது

4) யானை தறிகெட்டு ஓடியது

5) பாகன் யானையை தறியில் கட்டினான்

(........)

16. *"கேட்பதற்கு மிகவும் சுவையான...." இது ஒரு*

1) பெயர்த்தொடர் 2) வினையடைத் தொடர்

3) பெயரடைத் தொடர் 4) வினைத்தொடர்

5) வாக்கியத் தொடர்

(........)

17. *நீ போனது எனக்குத் தெரியாது. இவ் வாக்கியத்தில் போனது என்பது*

1) இறந்தகால வினைமுற்று

2) அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று

3) பயனிலை 4) வினையாலணையும் பெயர்

5) காலங்காட்டும் தொழிற்பெயர்

(........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. *ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே. இதில் 'ஆட்டுவி' என்பது*

1) ஏவல் வினை 2) பிறவினை

3) காரண வினை 4) நிபந்தனை வினை

5) செய்வினை

(........)

19. *பின்வருவனவற்றுள் 'வை' துணைவினையாக வரும் வாக்கியம்*

1) நான் இங்குதான் பணத்தை வைத்திருந்தேன்

2) நான் இங்குதான் பணத்தை வைத்தேன்

3) அம்மா சாப்பாட்டை மேசையில் எடுத்து வைத்தார்

4) மகனுக்கு நல்ல இடம் பார்த்து வைத்திருக்கிறேன்

5) கரடுமுரடான பாதை ஆதலால் காலை பார்த்து வைத்து நடக்க வேண்டும் (........)

20. *பின்வருவனவற்றுள் பெயரடையாகப் பயன்படும் சொல்*

1) நாளுக்கு நாள் 2) நாள்தோறும்

3) நாளாந்தம் 4) நாளாந்த

5) நாளாவட்டத்தில் (........)

21. *விகுதியால் காலம் உணர்த்தும் சொல்*

1) செய்தான் 2) செய்த 3) செய்வாய்

4) செய்கின்றது 5) செய்யும் (........)

22. *வைதற் பொருளில் இடம்பெற்ற வியங்கோள் வினைமுற்று*

1) கெடுக என் ஆயுள் 2) நின் புகழ் ஓங்குக

3) பரவலாக மழை பெய்யட்டும் 4) வாழ்க்கையில் இன்பம் மலர்க

5) நாட்டின் துயர் நீங்குக (........)

23. *அவள் மிக அழகான பொம்மை ஒன்றை வாங்கினாள். இங்கு 'மிக அழகான' என்பது*

1) பெயரெச்சத் தொடர் 2) பெயர்த் தொடர்

3) வினையடைத் தொடர் 4) பெயரடைத் தொடர்

5) வினைத் தொடர் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. இந்தியா விண்வெளியில் ஏவுகணையை செலுத்தியது. இங்கு ஏவுகணை என்பது

1) பண்புத் தொகை 2) உவமைத் தொகை

3) உம்மைத் தொகை 4) வினைத் தொகை

5) வேற்றுமைத் தொகை (........)

25. பின்வருவனவற்றுள் இறந்தகாலம் காட்ட இன் இடைநிலை ஏற்கும் வினைச்சொல்

1) படி 2) போ 3) செல் 4) ஓடு 5) உண்

(........)

26. வறட்சி நீங்க நன்றாக மழை பெய்யட்டும். இவ் வாக்கியத்தில் வரும் 'அட்டும்' என்பது

1) ஏவல் வினை விகுதி 2) மரியாதை ஏவல் விகுதி

3) ஓர் அசைச்சொல் 4) வியங்கோள் விகுதி

5) எதிர்மறை விகுதி (........)

27. தன்வினையாகவும் பிறவினையாகவும் அமையும் சொல்

1) ஓடு 2) சிரி 3) நனை 4) போடு 5) செய்

(........)

28. அவன் சொன்னது எனக்குத் தெரியாது. இவ் வாக்கியத்தில் இடம்பெறும் 'சொன்னது' என்ற சொல்

1) இறந்தகால வினைமுற்று 2) ஒன்றன்பால் வினைமுற்று

3) வினையாலணையும் பெயர் 4) தொழிற்பெயர்

5) காலங்காட்டும் தொழிற்பெயர் (........)

30. 'ஆல்' வேற்றுமை உருபாக இடம்பெறும் சொல்

1) வந்தால் 2) வந்திருந்தால் 3) வந்ததால்

4) வராவிட்டால் 5) வராதிருக்காவிட்டால்

(........)

31. பின்வருவனவற்றுள் நடந்தேன் என்ற சொல்லின் 'ஏன்' விகுதி உணர்த்தும் பொருள்

1) திணையும் பாலும் 2) இடமும் காலமும்

3) எண்ணும் இடமும் 4) பாலும் இடமும்

5) காலமும் எண்ணும் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. *போவீர்கள் என்ற சொல் தொடர்பான மிகப் பொருத்தமான இலக்கண விளக்கம்*

1) முன்னிலை எதிர்கால பன்மை வினைமுற்று
2) படர்க்கை பன்மை தெரிநிலை வினைமுற்று
3) உயர்திணை முன்னிலை பன்மை வினைமுற்று
4) உயர்திணை எதிர்காலப் பன்மை வினைமுற்று
5) உயர்திணை முன்னிலை நிகழ்கால வினைமுற்று

(........)

33. *பின்வருவனவற்றுள் வினை அடையாக வரக்கூடியது.*

1) பென்னம் பெரிய 2) செக்கச் சிவந்த
3) எதிரும் புதிருமாக 4) சின்னஞ் சிறிய
5) அதிர்ச்சி தருகின்ற

(.......)

34. *பின்வருவனவற்றுள் ஏவல் வினையாக வந்த சொல்*

1) கல் 2) இனி 3) பனி 4) கனி 5) நுனி

(.......)

35. *பின்வருவனவற்றுள் குறிப்பு வினையாக வரக்கூடியது*

1) கல் 2) நில் 3) வெண் 4) அடி 5) போல

(.......)

36. *பின்வருவனவற்றுள் பெயரெச்சத் தொடர் அல்லாதது*

1) ஆடிய மகன் 2) அழகிய பெண்
3) அடித்து நின்றான் 4) முற்றிய காய்
5) உயர்ந்த மரங்கள்

(.......)

37. *பின்வருவனவற்றுள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எது?*

1) தேடாத செல்வம் 2) பாடாத பாட்டு
3) சொல்லாத சொல் 4) எழுதாக் கவிதை
5) காணாத பொருள்

(.......)

38. *உண் என்ற வினையடியின் செயவென் வாய்பாட்டு வினையெச்ச வடிவம் எது?*

1) உண்ட 2) உண்ண 3) உண்டால்
4) உண்டு 5) உண்ணான்

(.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. கண்ணன் நாயினால் கடியுண்டான். இவ் வாக்கியம்

1) தன்வினை 2) பிறவினை 3) செய்வினை
4) செயப்பாட்டு வினை 5) பொதுவினை (.......)

40. நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக. இவ் வாக்கியத்தில் எழுதுக என்பது,

1) வினை எச்சம் 2) ஏவல் வினை
3) கடப்பாட்டு ஏவல் வினை 4) வியங்கோள் வினை
5) நிபந்தனை எச்சம் (.......)

41. வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மிக்க நக்கான். இதில் நக்கான் என்பது காலம் காட்டுவதற்கு அடிப்படை

1) பகுதி 2) விகுதி
3) இடைநிலை 4) குறிப்புப் பொருள் 5) சாரியை
(.......)

42. எச்சமாகவும் முற்றாகவும் வரக்கூடிய சொல்

1) ஓடும் 2) நடந்த 3) ஓடிய 4) ஓட 5) ஓடி
(.......)

43. அழகியற்கலை நமது உள்ளங்களைக் கட்டுப்படுத்துகின்றது. இவ்வாக்கியம்

1) செய்வினை 2) செயப்பாட்டு வினை
3) தனிவினை 4) கூட்டு வாக்கியம்
5) செயப்படுபொருள் குன்றிய வாக்கியம் (.......)

44. சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க. இதில் செய்யற்க என்பது,

1) எதிர்மறை தெரிநிலை 2) எதிர்மறை குறிப்புவினை
3) எதிர்மறை ஏவல்வினை 4) எதிர்மறை வியங்கோள் வினை
5) வியங்கோள் வினை (.......)

45. இனியேனும் நமது இளம் சந்ததியினர் சிரித்து மகிழ்ந்து விளையாடட்டும். இதில் இடம்பெற்றுள்ள வினையடை.

1) மகிழ்ந்து 2) சிரித்து
3) இனியேனும் 4) நமது 5) இளம்
(.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46. *நில்லுங்கள். இச்சொல் பற்றிய பொருத்தமான இலக்கண விளக்கம்*

1) படர்க்கை வினைமுற்று
2) வியங்கோள் வினைமுற்று
3) எதிர்மறை ஏவல் வினைமுற்று
4) ஏவல் பன்மை வினைமுற்று
5) முன்னிலை வினைமுற்று (........)

47. *வினையடை இடம்பெற்ற வாக்கியம்*

1) துரத்திச் சென்றான் 2) நேற்று வந்தான்
3) மடக்கிப் பிடித்தான் 4) படிக்காமல் திரிந்தான்
5) படித்தால் சித்தியடைவான் (........)

48. *கண்ணனது நாய் வாலை ஆட்டியது. இவ் வாக்கியம்*

1) தன்வினை 2) பிறவினை 3) செய்வினை
4) செயப்பாட்டு வினை 5) காரண வினை (........)

49. *பின்வருவனவற்றுள் முற்றெச்சமாக கருதப்படுவது எது?*

1) நின்றனள் நகைத்தாள் 2) நின்ற மனிதன்
3) நின்றால் பயனடைவான் 4) நின்று போனான்
5) நில்லாது போனான் (........)

50. *செய்யாய் - இச் சொல் பற்றிய பொருத்தமான இலக்கண விளக்கம்.*

1) உடன்பாட்டு வினை 2) எதிர்மறை வினை
3) முன்னிலை வினைமுற்று 4) பொது வினை
5) எதிர்கால வினைஎச்சம் (........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 2 | 11. 5 | 21. 5 | 31. 3 | 41. 1 |
| 02. 1 | 12. 5 | 22. 1 | 32. 1 | 42. 1 |
| 03. 3 | 13. 2 | 23. 4 | 33. 3 | 43. 1 |
| 04. 4 | 14. 4 | 24. 4 | 34. 1 | 44. 4 |
| 05. 3 | 15. 4 | 25. 4 | 35. 3 | 45. 3 |
| 06. 2 | 16. 3 | 26. 4 | 36. 3 | 46. 4 |
| 07. 2 | 17. 5 | 27. 3 | 37. 4 | 47. 2 |
| 08. 2 | 18. 3 | 28. 5 | 38. 2 | 48. 2 |
| 09. 4 | 19. 4 | 29. 3 | 39. 4 | 49. 1 |
| 10. 1 | 20. 4 | 30. 3 | 40. 4 | 50. 4 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்கியவியல்

*01.* *நான் கொழும்பிற்கு போக நண்பன் கண்டிக்குப் போனான். இது ஒரு,*

1) கூட்டு வாக்கியம் 2) கலப்பு வாக்கியம்
3) தனி வாக்கியம் 4) வாக்கியத் தொடர்
5) எதிர்மறை வாக்கியம் (........)

*02.* *நீ படித்தால் சித்தி அடைவாய். இதில் நீ படித்தால் என்பது*

1) வேற்றுமைத் தொடர் 2) தலைமைத் தொடர்
3) வினையெச்சத் தொடர் 4) வாக்கியத் தொடர்
5) நிபந்தனை எச்சத் தொடர் (........)

*03.* *பின்வருவனவற்றுள் பொருள் வேறுபடும் வாக்கியம்*

1) பல பாடகர்கள் கண்ணதாசனின் பாடல்களைப் பாடியுள்ளனர்.
2) கண்ணதாசனின் பாடல்களைப் பாடிய பாடகர்கள் பலர்.
3) பாடகர்கள் பலர் கண்ணதாசனின் பாடல்களைப் பாடியுள்ளனர்.
4) கண்ணதாசனின் பல பாடல்களைப் பாடகர்கள் பாடியுள்ளனர்.
5) கண்ணதாசனின் பாடல்களைப் பல பாடகர்கள் பாடி இருக்கின்றனர். (........)

*04.* *பின்வருவனவற்றுள் பொருள் மயக்கம் அற்ற வாக்கியம்*

1) தன் குட்டியைக் கவ்விச் சென்ற பூனையை நாய் துரத்தியது
2) பூனை தன் குட்டியை கவ்விச் சென்றதை நாய் பார்த்தது
3) மாலா தன் பேனையைத் தொலைத்துவிட்டாள் என்று கமலா சொன்னாள்
4) ராமன் தன்னைத் தேடி வரவில்லை என்று குமரன் சொன்னான்
5) கமலா தன் பேனையைத் தொலைத்துவிட்டாள் என்று மாலா சொன்னாள். (........)

*05.* *என் சாஸ்த்திரம் என்னோடேயே இருந்து இந்தக் கட்டையோடெரியும். இவ்வாக்கியம்*

1) தனி வாக்கியம் 2) கூட்டு வாக்கியம்
3) கலப்பு வாக்கியம் 4) இலக்கண வழுவுடையது
5) கூட்டுக் கலப்பு வாக்கியம் (........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. *பின்வருவனவற்றுள் தனி வாக்கியம்*

1) கண்ணனும் கமாலும் நெருக்கமான நண்பர்கள்

2) நானும் கண்ணனும் பாடசாலைக்குச் சென்றோம்

3) கண்ணன் வகுப்பறையில் அல்லது நூலகத்தில் இருப்பான்

4) கண்ணன் கொழும்பிற்கும் கமால் கண்டிக்கும் சென்றார்கள்

5) கமால் படிக்கவோ தொழில் பார்க்கவோ விரும்பவில்லை.

(........)

07. *பின்வருவனவற்றுள் 'அல்ல' என்ற எதிர்மறை வடிவத்தை பயன்படுத்துவதற்குப் பொருத்தமான வாக்கியம் எது?*

1) என்னிடம் புத்தகம் ஒன்று உள்ளது.

2) அந்தப் புத்தகம் கிழிந்திருந்தது.

3) நான் அந்தப் புத்தகத்தை அடிக்கடி படிப்பேன்.

4) அவன் அந்தப் புத்தகத்தைப் படித்தால் முன்னேறுவான்.

5) எனது அபிப்பிராயப்படி அது நல்ல புத்தகம்.

(........)

08. *தான் என்ற சொல் இடைச்சொல்லாக வந்த வாக்கியம்.*

1) கண்ணன் தான் போவதாகக் கூறினான்.

2) கண்ணன் தானும் போவதாகக் கூறினான்.

3) கண்ணன் தனக்கு நேரமில்லை என்றான்.

4) கண்ணன்தான் என்னிடம் சொன்னான்.

5) கண்ணன் தன் பேனையை தொலைத்துவிட்டான்.

(........)

09. *பின்வருவனவற்றுள் பொருள் தொடர்பு அற்ற சொற்றொகுதி*

1) மின்னல், இடி, மழை, புயல், வெள்ளம்

2) அவியல், வறுவல், பொரியல், சுண்டல், கடையல்

3) உறைப்பு, வெதுப்பு, கடுப்பு, சதுப்பு, இனிப்பு

4) மொட்டு, மொக்கு, மலர், அலர், பூ

5) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. *உறுப்பினர் சிலர் வந்தனர் என்ற கருத்துப்பட அமையும் வாக்கியம்*

1) உறுப்பினர்கள் எல்லோரும் வந்தனர்

2) உறுப்பினர் எவரேனும் வராது விடவில்லை

3) உறுப்பினர் எல்லோரும் வரவில்லை

4) உறுப்பினர் அனைவரும் வந்திருந்தனர்

5) உறுப்பினர் ஒருவராவது வரவில்லை (........)

11. *பொருள் மயக்கம் உள்ள வாக்கியம்*

1) ஆசிரியரைப் பாடசாலையிலிருந்து வரும்போது கண்டேன்.

2) ஆசிரியர் பாடசாலையிலிருந்து வரும்போது அவரைக் கண்டேன்.

3) ஆசிரியரை பாடசாலையிலிருந்து வரும்போது நான் கண்டேன்.

4) பாடசாலையில் இருந்து வரும்போது நான் ஆசிரியரைக் கண்டேன்.

5) நான் பாடசாலையில் இருந்து வரும்போது ஆசிரியரைக் கண்டேன். (........)

12. *பின்வருவனவற்றுள் கூட்டு வாக்கியம்*

1) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போனேன்.

2) நானும் அப்பாவும் நேற்று ஊருக்குப் போயிருந்தோம்.

3) நானும் அப்பாவுடன் ஊருக்குப் போனேன்.

4) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போயிருக்கலாம்.

5) நான் நேற்று அப்பாவுடன் ஊருக்குப் போகவில்லை. (........)

13. *நீங்கள் வருவீர்கள் என்று நான் நெடுநேரம் காத்திருந்தேன். இவ் வாக்கியத்தில் இடம்பெறும் நீங்கள் வருவீர்கள் என்ற வாக்கியத் தொடர்.*

1) முற்று வாக்கியத் தொடர் 2) எச்ச வாக்கியத் தொடர்

3) நிரப்பி வாக்கியத் தொடர் 4) சார்புத் தொடர்

5) தனி வாக்கியம் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. *பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாத இணைப்பு*

1) தொடர்ந்து மழை பெய்தது ஆயினும் நான் வேலைக்குச் செல்லவில்லை.

2) தொடர்ந்து மழை பெய்தது ஆயினும் நான் வேலைக்குச் செல்லவில்லை.

3) தொடர்ந்து மழை பெய்தது. ஆதலால் நான் வேலைக்குச் செல்லவில்லை.

4) தொடர்ந்து மழை பெய்தது. ஆகவே நான் வேலைக்குச் சென்றேன்.

5) தொடர்ந்து மழை பெய்தது என்றாலும் நான் வேலைக்குச் செல்லவில்லை. (.......)

15. *கண்ணன் காய்கறி வாங்க சந்தைக்குப் போனான். அமைப்பு அடிப்படையில் இது ஒரு*

1) தனி வாக்கியம் 2) கூட்டு வாக்கியம்

3) கலப்பு வாக்கியம் 4) எச்ச வாக்கியத் தொடர்

5) கூற்று வாக்கியம் (.......)

16. *அப்பா நாளை வருவார் என்று தம்பி சொன்னான். இவ் வாக்கியத்தில் 'அப்பா நாளை வருவார்' என்பது,*

1) பெயரெச்சத் தொடர் 2) நிபந்தனை எச்சத் தொடர்

3) வினையடைத் தொடர் 4) தலைமைத் தொடர்

5) நிரப்பித் தொடர் (.......)

17. *பின்வருவனவற்றுள் தனி வாக்கியம் எது?*

1) அப்பாவைப் பார்க்க நான் வீட்டுக்குப் போனேன்

2) கண்ணன் நேரத்தோடே வந்தால் படிப்பைப் பற்றி பேசலாம்

3) அவன் நல்ல கவிஞனும் நடிகனும் ஆவான்

4) அவன் என்னிடம் பணத்தை தந்தான்

5) கண்ணன் விஞ்ஞானமும் கணிதமும் படிக்கிறான்

(.......)

18. *நிபந்தனை வினை எச்சம் இடம்பெற்ற வாக்கியம்*

1) மழை பெய்ததால் பயிர் நன்கு விளைந்தது

2) கடவுளின் அருளால் நாங்கள் நலமாய் இருக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) உழைப்பால் உயர்ந்தவர்களே உத்தமர்கள்

4) உண்ட களைப்பால் உறங்கிவிட்டேன்

5) கடுமையாக உழைத்தால்தான் வாழ்க்கையில் முன்னேறலாம் (........)

19. *எனக்கு நல்ல பசி – இது*

1) வினை தொக்கிய வாக்கியம்

2) எழுவாய் தொக்கிய வாக்கியம்

3) பெயர்ப் பயனிலை கொண்ட வாக்கியம்

4) கூட்டு வாக்கியம்

5) கலப்பு வாக்கியம் (........)

20. *அழகும் அறிவும் அடக்கமும் நிறைந்த அந்தப் பெரியவர் - மேற்படி தொடர்*

1) பெயர்த் தொடர் 2) வினையடைத் தொடர்

3) பெயரடைத் தொடர் 4) வினைத் தொடர்

5) வாக்கியத் தொடர் (........)

21. *பின்வருவனவற்றுள் அடுக்குத் தொடர்*

1) வரவர 2) சளசள 3) சரசர 4) கலகல 5) கரகர (........)

22. *பட்டப் பகலில் நடந்த கொள்ளை பற்றி பலருக்குத் தெரியாது. இங்கு பட்டப்பகல் என்பது,*

1) இணைமொழி 2) அடுக்கிடுக்குத் தொடர்

3) இரட்டைக்கிளவி 4) அடுக்குத் தொடர்

5) மரபுத் தொடர் (........)

23. *கண்ணன் எதையும் மேலோட்டமாகத்தான் படிப்பான். இதனை உணர்த்துவதற்குப் பொருத்தமான மரபுத்தொடர்,*

1) அரைப் படிப்பு 2) அக்கறையற்றுப் படித்தல்

3) நுனிப்புல் மேய்தல் 4) வீண் விரயம் செய்தல்

5) மாரடித்தல் (........)

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. *பின்வருவனவற்றுள் சமன்பாட்டு வாக்கியம் எனக் கூறப் படுவது,*

1) குழந்தைக்கு காய்ச்சல் 2) அப்பாவுக்கு கோபம்

3) கண்ணன் ஒரு கவிஞன் 4) அவனுக்குப் பைத்தியம்

5) எனக்கு நல்ல நண்பர் கமால் ஆவான். (........)

25. *பின்வருவனவற்றுள் உயர்திணை பலர்பாற் பெயர் எழுவா யாக அமையப்பெற்ற வாக்கியம்*

1) ஆசிரியர், சங்க கூட்டத்திற்குச் சென்றார்

2) அவர் ஆசிரிய சங்க கூட்டத்திற்கு சென்றார்

3) அறிஞர் எனது ஐயங்களைப் போக்கினார்

4) அறிஞர் கூடி முடிவெடுத்தனர்

5) நீ அறிஞர்களை அனுசரித்து வாழவேண்டும் (........)

26. *கடற்கரையில் வெள்ளம் போல் மக்கள் கூட்டம் .... இதற்கு பொருத்தமான முடிப்பு*

1) திரண்டார்கள் 2) திரண்டனர் 3) திரண்டது

4) திரண்டன 5) திரண்டார் (........)

27. *பின்வருவனவற்றுள் கூட்டுவினை பயனிலையாகக் கொண்ட வாக்கியம்*

1) அப்பா நேற்று கொழும்புக்குப் போய்வந்தார்.

2) அம்மா மாமாவை சென்று பார்த்தார்.

3) நான் புத்தகத்தை மேசையில் எடுத்து வைத்தேன்.

4) அப்போதே நான் மருந்தை குடித்துவிட்டேன்.

5) அக்கா குழந்தையை தூக்கிக்கொண்டு சென்றாள். (........)

28. *நான் பாடசாலைக்குப் போய் அதிபரை சந்தித்தேன். இது ஒரு*

1) தனி வாக்கியம் 2) கூட்டு வாக்கியம்

3) கலப்பு வாக்கியம் 4) கதம்ப வாக்கியம்

5) வாக்கியதொடர் (........)

29. *பின்வருவனவற்றுள் வினாச் சொல் இடம்பெறும் வினா வாக்கியம்*

1) தமிழ் உனக்கு விருப்பமான பாடமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) தமிழ் ஏன் உனக்கு விருப்பமான பாடம்?
3) உனக்கு விருப்பமான பாடம் தமிழா?
4) தமிழ் உனக்கு விருப்பமான பாடம் இல்லையா?
5) தமிழ்ப் பாடம் உனக்கு விருப்பமானது தானா? (........)

30. *திருக்குறள் மிக உயர்ந்த அறநூல். இது ஒரு*
1) கூட்டு வாக்கியம் 2) வாக்கியத் தொடர்
3) சமன்பாட்டு வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்
5) பயனிலையற்ற வாக்கியம் (........)

31. *இன்று போய் நாளை வா. இதன் பயனிலை*
1) தொக்க நின்றது 2) வா 3) நாளை
4) பயனிலை அற்றது 5) போய் (........)

32. *பின்வருவனவற்றுள் வழுவற்ற வாக்கியம் எது?*
1) என் நண்பர்களில் ஒவ்வொருவரும் நல்லவர்கள்
2) என் நண்பர்கள் ஒவ்வொருவனும் நல்லவன்
3) என் நண்பர்கள் ஒவ்வொருவரும் நல்லவர்
4) என் நண்பர்களில் ஒவ்வொருவனும் நல்லவன்
5) என் நண்பர்கள் ஒவ்வொருவரும் நல்லவர்கள் (........)

33. *கண்ணன் கோபமாக பேசினான். அவன் கண்ணியமாக நடந்து கொண்டான். இவ்விரு வாக்கியங்களை இணைக்கப் பொருத்தமான இணைப்பு.*
1) ஆகவே 2) எனவே 3) ஆதலால்
4) ஆகையால் 5) ஆனால் (........)

34. *பாலாவது அல்லது பழமாவது எனக்கு வாங்கித் தாருங்கள். இதில் பொருள் சிதையாதவாறு விலக்கி விடக்கூடிய சொல்.*
1) பாலாவது 2) பழமாவது 3) அல்லது
4) எனக்கு 5) தாருங்கள் (........)

35. *ஆவது வாக்கிய இணைப்பிடைச் சொல்லாக வந்துள்ள தொடர்*
1) நீயாவது செய் 2) அவனையாவது வரச் சொல்
3) கோப்பியாவது பாலாவது குடியுங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) பத்து ரூபாயாவது வேண்டும்

5) நடந்தாவது போகவேண்டும் (........)

36. பின்வரும் வாக்கியத்தில் கீறிட்ட இடத்தில் இடம்பெறக்கூடிய மிகப் பொருத்தமான சொல் எது?

நான் ஒரு சிறந்த கவிஞன் ______________

1) அன்று 2) அல்ல 3) அல்லை 4) இல்லை 5) அல்லர்

(........)

37. தோட்டக்காரன் பாம்பு கடித்து செத்துப் போனான். இவ் வாக்கியத்தில் இணைக்கப்பட்ட துணை நிலை வாக்கியத் தொடர்

1) செய்து எச்சத் தொடர் 2) செய்ய எச்சத் தொடர்

3) நிபந்தனை எச்சத் தொடர் 4) நிரப்பித் தொடர்

5) வாக்கியத் தொடர் (........)

38. பின்வருவனவற்றுள் எழுவாய் அற்ற வாக்கியம்

1) பாடசாலைக்குச் சென்றான்

2) கண்ணனைக் காணவில்லை

3) அழகாக வீழ்ந்தது அருவி

4) எனக்கு கண்ணனைத் தெரியும்

5) அவன் எனது உறவினன் (........)

39. பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்

1) நான் அப்பாவுடன் ஊருக்குப் போனேன்

2) நானும் அப்பாவும் ஊருக்குப் போனோம்

3) நான் மாமாவைப் பார்க்க கொழும்புக்கு போனேன்

4) நாய் கண்ணனுடன் வந்தது

5) நான் கண்ணனுடன் கொழும்புக்குப் போகப்போகிறேன்

(........)

40. பின்வருவனவற்றுள் பெயரடையாக வந்த சொற்றொடர்

1) வேகமாக ஓடினான் 2) இனிமையாக பேசினான்

3) இனிய பேச்சு 4) கவனமாகப் படித்தான்

5) என்னோடு படித்த மாணவன் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. *பின்வருவனவற்றுள் தனி வாக்கியம்*

1) கண்ணனும் வாணியும் கோவிலுக்குப் போனார்கள்
2) ஒரு இட்டலியும் தோசையும் சாப்பிட்டேன்
3) அவன் என்னை தூங்கவைத்தான்
4) அவனுக்கு கோப்பியும் தேநீரும் பிடிக்கும்
5) கண்ணன் நாயுடன் வந்தான் (........)

42. *எனக்கு கண்ணனைத் தெரியும். இவ் வாக்கியத்தின் எழுவாய்.*

1) எனக்கு 2) கண்ணன்
3) தோன்றா எழுவாய் 4) எழுவாய் இல்லை 5) நான் (........)

43. *எனது பேனையைக் காணவில்லை. இவ் வாக்கியத்தின் எழுவாய்*

1) எனது 2) பேனை 3) நான்
4) அறியா எழுவாய் 5) காணவில்லை (........)

44. *கண்ணன் வந்தான் என்பது*

1) பெயர்ச் சொற்றொடர் 2) வினைமுற்றுத் தொடர்
3) எழுவாய் தொடர் 4) பெயரெச்சத் தொடர்
5) முற்றெச்சத் தொடர் (........)

45. *நாளை பாடசாலை விடுமுறை. நான் ஊருக்குச் செல்ல வில்லை. இவ்விரு வாக்கியங்களை இணைப்பதற்கு பொருத்தமான இணைப்பிடைச் சொல்*

1) ஆகவே 2) ஆனால் 3) ஆவது
4) ஆகையால் 5) எனவே (........)

46. *பின்வருவனவற்றுள் இலக்கண வழுவுடைய வாக்கியம்*

1) விளம்பரங்களில் உண்மைகளே கூறப்படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
2) விளம்பரங்களில் உண்மைகளையே கூறப்படவேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும்.
3) விளம்பரங்களில் உண்மைகளே கூறப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) விளம்பரங்களில் உண்மைகளையே கூறவேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

5) விளம்பரங்களில் உண்மைகளைக் கூறுவதை வலியுறுத்த வேண்டும். (........)

47. *பின்வருவனவற்றுள் இலக்கண வழு இல்லாத வாக்கியம்*

1) தாம் பிறந்த நாட்டையும் தம் தாய்மொழியையும் நேசிக்காதவன் மனிதனேயல்லன்.

2) தாம் பிறந்த நாட்டையும் தம் தாய்மொழியையும் நேசிக்காதவன் மனிதரேயல்ல.

3) தான் பிறந்த நாட்டையும் தன் தாய்மொழியையும் நேசிக்காதவன் மனிதனன்று.

4) தான் பிறந்த நாட்டையும் தன் தாய்மொழியையும் நேசிக்காதவன் மனிதனேயல்ல.

5) தாம் பிறந்த நாட்டையும் தன் தாய்மொழியையும் நேசிக்காதவன் மனிதனல்ல. (........)

48. *பின்வருவனவற்றில் வாக்கியம் அல்லாதது*

1) என் செய்வோம் 2) பொய் பேசாதே

3) கவிஞனைப் போற்றுங்கள் 4) கட்டறுத்த மாடு

5) கண்ணா வருக (........)

49. *நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர். இவ் வாக்கியத்தின் வழு*

1) திணை வழு 2) பால் வழு 3) எண் வழு

4) இட வழு 5) சொல் வழு (........)

50. *அப்பா வந்திருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. இதில் வரும் துணை நிலை வாக்கியத் தொடர்*

1) முற்றுத் தொடர் 2) செயவென் எச்சத் தொடர்

3) நிபந்தனை தொடர் 4) வினைத் தொடர்

5) நிரப்பித் தொடர் (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 11. 2 | 21. 1 | 31. 1 | 41. 5 |
| 02. 5 | 12. 2 | 22. 2 | 32. 4 | 42. 4 |
| 03. 4 | 13. 3 | 23. 3 | 33. 5 | 43. 4 |
| 04. 4 | 14. 4 | 24. 3 | 34. 3 | 44. 3 |
| 05. 2 | 15. 3 | 25. 4 | 35. 3 | 45. 2 |
| 06. 1 | 16. 5 | 26. 3 | 36. 2 | 46. 4 |
| 07. 5 | 17. 4 | 27. 4 | 37. 1 | 47. 4 |
| 08. 4 | 18. 5 | 28. 2 | 38. 4 | 48. 4 |
| 09. 3 | 19. 1 | 29. 2 | 39. 3 | 49. 4 |
| 10. 3 | 20. 1 | 30. 3 | 40. 3 | 50. 5 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையியல்

01. யாரும் வரவில்லை – இதில் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) முற்று 2) எச்சம் 3) ஐயம்
4) தெரிநிலை 5) பிரிநிலை (........)

02. கூட்டத்தை நடாத்துவதற்கு ஐந்து பேராவது வேண்டும். இங்கு ஆவது என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எண்ணிக்கை 2) திடக்குறிப்பின்மை
3) குறைந்த பட்சம் 4) வரையறை 5) முற்று
(........)

03. அந்த நடுநிசியில் மனிதர் ஒருவரும் நடமாடவில்லை. இவ் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள 'உம்' இடைச்சொல்லுக்குப் பதிலாக இடம்பெறத்தக்க வேறு இடைச்சொற்கள்

1) ஏ, ஆ 2) தான், ஓ 3) மட்டும், ஏ
4) கூட, ஆவது 5) தான், ஆல் (........)

04. அவரது தொனியில் ஆவேசமும் முகத்தில் இயலாமையும் விரக்தியும் மாறிமாறி மின்னலடித்தன. இதில் இடம்பெறும் 'உம்' இடைச்சொல்

1) எண்ணும்மை 2) எச்ச உம்மை
3) முற்றும்மை 4) எதிர்மறை உம்மை
5) இணைப்பு உம்மை (........)

05. உலகமே எதிர்த்து வந்தாலும் நினைத்ததை முடிப்பேன். இதில் வரும் உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) உறுதிப்பாடு 2) ஐயம் 3) எச்சம்
4) எதிர்மறை 5) தெரிநிலை (........)

06. இத்தாலிய வீரர்களில் முசோலினியே சிறந்தவன். இதில் ஏகாரம் உணர்த்தும் பொருள்

1) வினா 2) பிரிநிலை 3) தெளிவு
4) தெரிநிலை 5) சிறப்பு (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. குறவரும் மருளும் குன்றம். இதில் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எதிர்மறை 2) இழிவுச் சிறப்பு

3) உயர்வுச் சிறப்பு 4) ஐயம் 5) முற்று

(........)

08. ஆட்டுப்பால் மருந்தும் ஆயிற்று. இதில் வரும் 'உம்' இடைச் சொல் உணர்த்தும் பொருள்.

1) ஆக்கம் 2) சிறப்பு 3) அளவை 4) எச்சம் 5) ஐயம்

(........)

09. பின்வருவனவற்றுள் 'உம்' இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் வழங்கும் வாக்கியம்

1) யார் சொன்னாலும் அவன் கேட்கமாட்டான்

2) நீங்கள் வரும்வரையில் நான் காத்திருப்பேன்

3) அமைச்சரும் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

4) களவெடுத்தாலும் பொய் சொல்லாதே

5) வெய்யிலும் வெக்கையும் தாங்க முடியவில்லை (........)

10. ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ. இதில் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எதிர்மறை 2) உயர்வு சிறப்பு

3) இழிவுச் சிறப்பு 4) முற்று 5) ஐயம்

(........)

11. பின்வருவனவற்றுள் 'உம்' இடைச்சொல் எச்சப் பொருளில் இடம்பெற்ற வாக்கியம்

1) மழை பெய்தும் நிலம் நனையவில்லை

2) மழை பெய்தாலும் பெய்யும்

3) மழையும் வெய்யிலும் மாறிமாறி வந்தன

4) நாளைக்கும் மழை பெய்யும்

5) அனைத்துக்கும் மழையே ஆதாரம் (........)

12. அணங்கு கொல் ஆய்மயில் கொல். இதில் கொல் என்னும் இடைச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது.

1) வியப்பு 2) ஐயம் 3) வினா

4) இசைநிறை 5) எதிர்மறை (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மன்னவனும் நீயோ வளநாடும் நின்னதோ? இதில் உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எச்சம் 2) உயர்வுசிறப்பு

3) இழிவுச் சிறப்பு 4) ஐயம் 5) முற்று

(........)

14. கண்ணே வேண்டினும் ஈயக் கடவேன். இதில் ஏகார இடைச் சொல் உணர்த்தும் பொருள்

1) முற்று 2) ஐயம்

3) இசைநிறை 4) பிரிநிலை 5) எச்சம்

(........)

15. பின்வருவனவற்றுள் 'தோறும்' இடைச்சொல் இணைந்து வர முடியாத பெயர்ச்சொல்

1) ஊர் 2) நாடு 3) இலங்கை

4) வருடம் 5) வீடு (........)

16. நீ யாரோ ஒருவரோடு போவதைக் கண்டேன். இதில் ஒகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) பிரிநிலை 2) திடக்குறிப்பின்மை 3) ஐயம்

4) எதிர்மறை 5) தெரிநிலை (........)

17. கண்ணனைப் பார்த்து ஆசிரியர் படிக்கவோ வந்தாய் என்று கேட்டார். இதில் ஒகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எதிர்மறை 2) வினாப் பொருள்

3) தெரிநிலை 4) ஒழியிசை 5) பிரிநிலை

(........)

18. யாதும் ஊரே யாவரும் கேளிர். இதில் 'உம்' இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) எண் 2) தெரிநிலை 3) முற்று

4) ஐயம் 5) வேற்றுமை (........)

19. தான் என்ற சொல் இடைச் சொல்லாக வரும் வாக்கியம்

1) கண்ணன் தான் போவதாக கூறினான்

2) கண்ணன் தானும் போவதாக கூறினான்

3) கண்ணன் தனக்கு நேரமில்லை என்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) கண்ணன் தான் என்னிடம் சொன்னான்

5) கண்ணன் தான் பேனையை தொலைத்ததாக கூறினான்

(........)

20. பாடநூல் வாங்குவதற்குக் கூட என்னிடம் வசதியில்லை. இதில் 'கூட' என்னும் இடைச்சொல் உணர்த்தும் பொருள்

1) வரையறை 2) எதிர்மறை

3) குறைந்தபட்சம் 4) திடக்குறிப்பின்மை 5) எச்சம்

(........)

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01. 1 | 05. 1 | 09. 4 | 13. 3 | 17. 4 |
| 02. 3 | 06. 2 | 10. 1 | 14. 4 | 18. 3 |
| 03. 4 | 07. 3 | 11. 4 | 15. 3 | 19. 4 |
| 04. 5 | 08. 1 | 12. 2 | 16. 2 | 20. 3 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணரியல்

*01.* உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்

1) நாயை 2) மாயை 3) காயை 4) தீயை 5) பேயை (........)

*02.* பின்வருவனவற்றுள் கெடுதல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்

1) மரங்கள் 2) மரவேர் 3) மரஞ்செடி
4) மரக்கொப்பு 5) மாமரம் (........)

*03.* பின்வருவனவற்றுள் வேற்றுமைப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்

1) வீடு வளவு 2) தோட்டந்துரவு
3) ஆற்றங்கரை 4) காடுமேடு
5) இராப்பகல் (........)

*04.* நிலைமொழி ஈற்றுமெய் இரட்டித்துப் புணர்ந்த சொல்.

1) வெண்ணுரை 2) பண்ணிசை 3) கண்ணீர்
4) நன்னூல் 5) பன்னீர் (........)

*05.* குற்றியலுகரம் கெட்டுப் புணர்ந்த சொல்

1) குருத்தோலை 2) கடுக்காய்
3) எண்ணுப் பெயர் 4) பட்டுச்சேலை
5) பண்ணிசை (........)

*06.* பின்வருவனவற்றுள் பகுதி விகாரப்பட்டு புணர்ந்த சொல்

1) செய்தேன் 2) இருந்தேன் 3) வந்தேன்
4) நடந்தேன் 5) கிடந்தேன் (........)

*07.* இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்

1) தேங்காய் 2) பாலாடை
3) தலைக்கவசம் 4) மரப்பலகை
5) பலாவிலை (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. *பின்வருவனவற்றுள் உயிர்முன் உயிர் புணர்ந்த சொல்*

1) மாங்காய் 2) மலைமேடு

3) பலாவிலை 4) மரப்பலகை 5) முட்செடி

(........)

09. *பின்வருவனவற்றுள் குற்றியலுகரப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்*

1) சேர்க்கை 2) நோக்கை 3) வாழ்க்கை

4) படுக்கை 5) கூகை (........)

10. *வருமொழி முதலில் வரும் வல்லினம் மிகாது புணரக் கூடிய சொல்*

1) செய்ய 2) அடங்கா 3) எந்த 4) புதிய 5) அப்படி

(........)

11. *தோன்றல் விகாரம் இடம்பெற்று புணர்ந்த சொல்*

1) மக்களை 2) மண்ணால்

3) பழஞ்சோறு 4) மரவேர் 5) படங்கள்

(........)

12. *புறப்புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்*

1) எங்கள் 2) எங்களை 3) எங்களூர்

4) எங்களுக்கு 5) எங்களிடம் (........)

13. *அல்வழிப் புணர்ச்சி இடம்பெற்ற சொல்*

1) வீட்டுக்கு வீடு 2) வீட்டுக்கூரை

3) வீட்டுவாசல் 4) வீடு வாசல் 5) மண்வீடு

(........)

14. *வருமொழி முதலில் உயிர் வரும்போது நிலைமொழி ஈற்று மெய் இரட்டித்துப் புணரும் சொல்*

1) பால் 2) காண் 3) கண் 4) வேல் 5) மடல்

(........)

15. *உடம்படுமெய் பெற்று புணர்ந்த சொல்*

1) மரத்துக்கு 2) அவரால் 3) பனையை

4) பணத்தோடு 5) வீட்டிலிருந்து (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. *இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொற்றொடர்*

1) காலடி 2) காற்சிலம்பு

3) கண்ணிமை 4) காலாற்படை 5) மரவேர் (........)

17. *விகாரப் புணர்ச்சி இடம்பெறும் சொல்*

1) மாணிழை 2) ஒருபழம் 3) ஒண்பூ

4) பூமாலை 5) மட்குடம் (........)

18. *வேற்றுமைப் புணர்ச்சி இடம்பெற்ற சொற்றொடர்*

1) பாடம் படித்தான் 2) வேகமாக நடந்தான் 3) நீயார்

4) உலகம் சுழல்கின்றது 5) மரம் முறிந்தது (........)

19. *சாரியை பெற்றுப் புணர்ந்த சொல்*

1) மாங்காய் 2) தேங்காய்

3) புளியங்காய் 4) பாகற்காய்

5) வாழைக்காய் (........)

20. *உடம்படு மெய் தோன்ற புணர்ந்த சொற்றொடர்*

1) கைப்பிடி 2) கையிருப்பு 3) கைந்நூல்

4) கைத்தடி 5) கைம்மாறு (........)

21. *உயிர்முன் மெய் புணர்தல்*

1) கல் + ஐ 2) கிளி + அழகு

3) மண் + குடம் 4) அப்பா + ஓடு

5) மணி + மகுடம் (........)

22. *எண்ணுப் பெயரின்முன் வருமொழி முதலில் உயிர் வந்து புணர்வதற்கு உதாரணம்*

1) பதிற்றுப்பத்து 2) இருபது

3) தொண்ணூறு 4) பத்தாயிரம் 5) அறுநூறு

(........)

23. *தவறான புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்*

1) நவீன கவிதை 2) நவீனக் கவிதை

3) புதுக்கவிதை 4) நல்ல கவிதை

5) சிறந்த கவிதை (........)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பின்வருவனவற்றுள் கெடுதலும் தோன்றலும் இடம்பெற்ற சொல்

1) மரக்கொப்பு 2) பற்பொடி 3) மட்குடம்
4) நதிக்கரை 4) மரவேர் (........)

25. வேற்றுமைத் தொகை சொற்களில் உயிரீற்றை அடுத்துவரும் வல்லினம் மிகும் என்பதற்கு உதாரணம்

1) மாறாக் காதல் 2) ஆறாத் துயரம்
3) பட்டுச்சேலை 4) அந்தப் புத்தகம் 5) இக்காலம்
(........)

26. தனிக் குற்றெழுத்தை அடுத்து சொல் இறுதியில் வரும் மெய் வருமொழி முதலில் உயிர் வரின் இரட்டிக்கும் என்பதற்கு உதாரணம்

1) பொன்னை 2) காதை
3) காற்றோட்டம் 4) பாலை 5) நாட்டை
(........)

27. உடம்படு மெய் தோன்றிப் புணர்ந்த சொல்

1) கலைமான் 2) கலைக்கூடம் 3) மரவடி
4) அரிசியில்லை 5) மெய்ஞ்ஞானம் (........)

28. மகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்று புணர் வதற்கு உதாரணம்

1) மரவேர் 2) மரத்தை
3) சங்கப்பலகை 4) மரப்பலகை 5) மகுடவாசம்
(........)

29. மையீற்றுப் பெயருடன் இன்னொரு பெயர் சேர்ந்து கூட்டுப் பெயரானமைக்கு உதாரணம்

1) அறிவாளி 2) புத்துயிர் 3) பாசிலை
4) வானவில் 5) பொய்யன் (........)

30. நிலைமொழி ஈற்றுமெய் இரட்டித்து புணர்ந்தமைக்கு உதாரணம்

1) பாலாடை 2) பொன்னாடை 3) மெய்ஞானம்
4) மரக்கொப்பு 5) குளக்கரை (........)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| *01. 4* | *07. 2* | *13.4* | *19. 3* | *25.3* |
| *02. 2* | *08. 3* | *14.4* | *20. 2* | *26. 1* |
| *03. 3* | *09. 2* | *15.3* | *21. 5* | *27. 4* |
| *04. 2* | *10. 4* | *16. 1* | *22. 4* | *28. 2* |
| *05. 1* | *11. 2* | *17.5* | *23. 2* | *29. 3* |
| *06. 3* | *12. 3* | *18.1* | *24. 1* | *30. 2* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகுறிப்பு எழுதுதல்

01. எழுத்துகளின் பிறப்பிடங்கள்.

மனிதரது ஒலிக்கவேண்டும் என்னும் முயற்சியால் உடலில் உள்ளே நின்று காற்று எழுப்ப எழுகின்ற ஒலி, மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி, உதடு, நா, பல், மேல்வாய் ஆகியவற்றின் முயற்சி வேறுபாட்டால் பல்வகைப்பட்ட ஒலிகளாக தோன்றுதல் எழுத்தின் பிறப்பாம்.

எழுத்துகள் முதல் எழுத்து, சார்பெழுத்து என இரு வகைப்படும்.

முதலெழுத்துகளின் பிறப்பிடம் :

உயிரெழுத்துகளும் இடையின மெய்யெழுத்துகளும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கும். மெல்லின மெய் யெழுத்துகள் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும். வல்லின மெய்யெழுத்துகள் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும்.

சார்பெழுத்துகளின் பிறப்பிடம் :

ஆய்த எழுத்து தலையை இடமாகக் கொண்டு பிறக்கும். ஏனைய சார்பெழுத்துக்கள் தத்தம் முதலெழுத்துக்களைப் போலவே பிறக்கும்.

02. தமிழ்மொழியின் மூல ஒலி வடிவங்கள்

தமிழ்மொழிக்கு மூலமான ஒலி வடிவம் முப்பதாகும். இதனை அடிப்படை ஒலியன்கள் என்றும் கூறுவர். இவை முதலெழுத்துகள் எனப் பெயர் பெறும். இவை இரு பிரிவு களாக உள்ளன.

முதற்பிரிவு - உயிரெழுத்து

இரண்டாம் பிரிவு - மெய்யெழுத்து

“எழுத்தெனப்படுப அகர முதல் னகர இறுவாய் முப்பஃது எனப” என தொல்காப்பியம் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரெழுத்து :

தமிழில் உயிரெழுத்துகள் பன்னிரண்டாகும். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன அவையாகும். இவ்வெழுத்துகள் தனித்து நின்று இயங்கவல்லன. அதனால் இவற்றை உயிர் என்றும் ஆவி என்றும் கூறுவர்.

மெய்யெழுத்து :

மெய்யெழுத்து தனித்து நின்று இயங்காது. மெய் என்பது உடம்பு. உயிர் உடலைவிட்டு பிரிந்தபின்பு அந்த உடலுக்கு இயக்கம் இல்லை. அதனால் மெய்யெழுத்து உடல் போன்றது என்பர். மெய்யெழுத்துகள் வருமாறு.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்

இவை ஒற்றெழுத்துகள் என்றும் அழைக்கப்படும்.

03. முதலெழுத்துகளின் கால அளவு :

முதல் எழுத்துகளான உயிரெழுத்தையும் மெய்யெழுத்தையும் ஒலிப்பதற்கான கால அளவு உண்டு. இந்தக் கால அளவு மாத்திரை என்று வழங்கப்படுகின்றது. மாத்திரையின் கால அளவு கண்ணிமைப் பொழுது அல்லது கைநொடிப் பொழுதாகும்.

ஒரு மாத்திரைக்குரிய உயிரெழுத்து - அ, இ, உ, எ, ஒ
இரு மாத்திரைக்குரிய உயிரெழுத்து - ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஐ, ஔ

ஒலி அளவைக் கருத்திற் கொண்டே உயிரெழுத்துகளில் குறில், நெடில் என்ற பாகுபாடு தோன்றியது. ஒரு மாத்திரைக் குரியவை குறில் என்றும் இரு மாத்திரைக் குரியவை நெடில் என்றும் வகுக்கப்பட்டது.

04. மெய்யெழுத்துகளுக்கான மாத்திரை :

மெய்யெழுத்துகள் யாவற்றிற்கும் தனித்தனி மாத்திரை அளவு அரையாகும். ஒலியளவில் வேறுபாடு இன்மையினால் இங்கு குறில் நெடில் பாகுபாடு இல்லை. உச்சரிக்கும் முறையில் வேறுபாடு உள்ளது. சில எழுத்துகள் அழுத்தமாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில எழுத்துக்கள் மென்மையாகவும் சில எழுத்துக்கள் அழுத்தமும் மென்மையும் இல்லாமலும் ஒலிக்க வேண்டியுள்ளது.

i. வன்மையாக அழுத்தமாக ஒலிக்கும் எழுத்துக்கள் : க், ச், ட், த், ப், ற். இவை வல்லினம் என்று கூறப்படும்.

ii. மென்மையாக ஒலிப்பன : ங், ஞ், ண், ந், ம், ன். இவை மெல்லினம் என்று கூறப்படும்.

iii. அழுத்தமும் மென்மையும் இல்லாமல் இடைப்பட்டனவாக ஒலிப்பன - ய், ர், ல், வ், ழ், ள். இவை இடையினம் என்று கூறப்படும்.

## 05. இன எழுத்துக்கள்

ஒலி, வடிவம் முதலியவற்றால் ஒன்றுக்கொன்று சம்பந்தம் உடைய எழுத்துக்கள் இன எழுத்துக்கள் எனப்படும். உயிர், மெய் ஆகிய இரு வகை எழுத்துக்களிலும் ஒலி ஒற்றுமை காரணமாக இடையின மெய் ஆறையும் தவிர்த்து ஏனையவற்றிற்கு ஒன்றிற்கு ஒன்று இன எழுத்துக்கள் உள்ளன.

உயிர்இன எழுத்துக்கள் வருமாறு :

அ - ஆ, இ - ஈ, உ - ஊ, எ - ஏ, ஒ - ஓ, ஐ - இ, ஔ - உ

மெய் இன எழுத்துக்கள் வருமாறு :

க் - ங் ; ச் - ஞ், ட் - ண், த் - ந், ப் - ம், ற் - ன்

## 06. சுட்டெழுத்துக்கள்

உயிர் எழுத்துக்களைப் பயன்படு முறையின் அடிப்படையில் சுட்டெழுத்துக்கள் என்றும் வினாவெழுத்துக்கள் என்றும் இரு வகையாகப் பிரித்துள்ளனர்.

அ, இ, உ இம் மூன்று உயிரெழுத்துக்களும் மொழிக்கு முதலில் நின்று ஒரு பொருளைச் சுட்டிக் காட்டுகையில் சுட்டெழுத்துக்கள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அ' என்பது தூரத்தில் உள்ள பொருளையும், 'இ' என்பது சமீபத்தில் உள்ள பொருளையும், 'உ' என்பது நடுவில் உள்ள பொருளையும், பின்னிற்கும் பொருளையும் மேல் நிற்கும் பொருளையும் சுட்டுவதற்கு வரும்.

அவன், அம்மாடு, இவன், உவன்

இச் சுட்டெழுத்துகளை அகச்சுட்டு, புறச்சுட்டு என்றும் வகைப்படுத்துவர்.

சுட்டெழுத்துகளை தனியே பிரித்து எடுக்க முடியாத அளவிற்கு அச் சொற்களின் அங்கங்களாக அமைந்துள்ளன. சொல் வேறு, சுட்டு வேறு எனப் பிரித்துக் காண முடியாதவாறு சொல்லினுள்ளே சுட்டும் அடங்கியுள்ளது. இதுவே அகச் சுட்டாகும். சுட்டெழுத்தையும் சுட்டப்படும் பொருளையும் பிரித்து அறியமுடியாவிடின் அதுவே அகச்சுட்டு. உ - ம் : அது, இது.

சுட்டு வேறு, சொல் வேறு என பிரித்துக் காட்டமுடியுமாயின் அது புறச்சுட்டு எனப்படும். இப்பொழுது, அவ்வூர் முதலான சொற்றொடர்களில் உள்ள சுட்டுக்களையும் சொற்களையும் தனித்தனியே பிரித்தறிய முடியும்.

## 07. வினாவெழுத்துகள்

எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய இவ்வைந்து எழுத்துகளும் வினாப்பொருளைத் தரும்போது வினா எழுத்துகள் எனப் பெயர்பெறும்.

இவற்றுள் எ, யா என்பன சொல்லின் முதலில் வினாப் பொருளில் வரும்.

எ - எவன்?

யா - யார்? யாது?

ஆ, ஓ என்பன சொல்லின் இறுதியில் வினாப்பொருளில் வரும்.

ஆ - அவனா? தந்தையா?

ஓ - யாரோ? எவனோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாரம் ஈரிடத்தும் வினாப்பொருளில் வரும்.

ஏ - ஏன்? ஏது? - மொழி முதல்.

- மானே? - மொழி இறுதி.

வினா அகவினா, புறவினா என இரு வகைப்படும். சொல்லின் உள்ளேயே வினாவெழுத்து இருந்து ஒரு பொருளை வினவுவது அகவினா எனப்படும்.

உ-ம் : என்ன? எப்படி

சொல்லுக்குப் புறத்தில் வினா எழுத்து இருந்து ஒன்றை வினாவுவது புறவினா எனப்படும்.

உ-ம் - எம்மலை?, எவ்வீடு?

## 08. போலி

ஒரு சொல்லில் ஓர் எழுத்து உள்ள இடத்தில் அதற்கு ஈடாக வேறு எழுத்து நிற்பினும் பொருள் வேறுபடாமல் ஒத்திருக்குமாயின் அவ்வாறு நிற்கும் எழுத்து போலி எனப்படும். (போலி - போல நிற்பது) அப்போலி முதற் போலி, இடைப் போலி, கடைப் போலி என மூவகைப்படும்.

முதற்போலி :

சொல்லின் முதலிலே போலி எழுத்து நிற்பது முதற் போலி எனப்படும்.

உ - ம் : மஞ்சு - மைஞ்சு; மயல் - மையல்

(இவற்றில் அகரத்திற்கு ஐகாரம் போலியாயிற்று)

இடைப்போலி :

சொல்லின் இடையிலே போலி எழுத்து நிற்பது இடைப் போலி எனப்படும்.

உ - ம் : இலஞ்சி - இலைஞ்சி

(அகரத்திற்கு ஐகாரம் போலி)

கடைப்போலி :

சொல்லின் இறுதியில் போலி எழுத்து நிற்பது இறுதிப் போலி எனப்படும்.

உ - ம் : பலம் - பலன்; கலம் - கலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அஃறிணைப் பெயரின் ஈற்றில் உள்ள மகரத்திற்கு னகரம் போலி)

சாம்பல் - சாம்பர்; பந்தல் - பந்தர்

(லகரத்திற்கு ரகரம் போலி)

## 09. சார்பெழுத்துகள்

சார்பெழுத்து எனப்படுவது முதல் எழுத்துகளைச் சார்ந்து வருவனவாகும்.

உயிர்மெய் எழுத்துகளும், ஆய்தமும், சந்தர்ப்பம் சூழ்நிலைகளுக்கேற்ப தமது மாத்திரைகளில் இருந்து கூடியும் குறைந்தும் ஒலிக்கும் எழுத்துகளே சார்பெழுத்துகள் எனப்பட்டன. அவை பத்து வகை என்றும் அவற்றின் தொகை முந்நூற்று அறுபத்தொன்பது என்றும் நன்னூல் கூறும்.

i. உயிர்மெய் - உயிரும் மெய்யும் சேர்ந்து வருவது.

ii. ஆய்தம் - மூன்று புள்ளி வடிவால் ஆகிய எழுத்து.

iii. உயிரளபெடை - தமக்குரிய மாத்திரையில் இருந்து கூடியொலிக்கும் உயிர் நெட்டெழுத்துக்கள்.

iv. ஒற்றளபெடை - தமக்குரிய மாத்திரையில் இருந்து கூடியொலிக்கும் ஒற்றெழுத்துக்கள்.

v. குற்றியலுகரம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் வல்லினமெய்யில் ஏறிவரும் உகரம்.

vi. குற்றியலிகரம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் இகரம்.

vii. ஐகாரக்குறுக்கம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் ஐகாரம்.

viii. ஔகாரக்குறுக்கம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் ஔகாரம்.

ix. மகரக்குறுக்கம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் 'ம்' என்னும் எழுத்து.

x. ஆய்தக்குறுக்கம் - தன் மாத்திரையில் குறைந்தொலிக்கும் ஆய்த எழுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10.** குற்றியலுகரம்

உகரம் சில இடங்களில் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலும் குறைந்து ஒலிப்பதுண்டு. அவ்வாறு ஒலியளவு குறைந்த உகரத்தையே குற்றியலுகரம் என்று கூறுவர்.

தனி நெட்டெழுத்திற்குப் பின்னும், இரண்டு எழுத்துக் களுக்குப் பின்னும், சொல்லின் இறுதியில் வல்லின மெய்யில் ஏறி நிற்கும் உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

சொல்லின் இறுதியில் உள்ள உகரத்தின் அயல் எழுத்தை நோக்க குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

*i.* ஈற்றுக்கு அயல் எழுத்து நெடிலாக அமைவது நெடிற் றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : ஆடு, காசு

*ii.* ஈற்றுக்கு அயல் எழுத்து ஆய்த எழுத்தாக அமைந்தால் அது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : அஃது, கஃசு

*iii.* ஈற்றுக்கு அயல் எழுத்து உயிர்மெய்யாக அமைந்தால் அது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : படகு, தராசு

*iv.* ஈற்றுக்கு அயல் எழுத்து வல்லின மெய்யாக அமைவது வன்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : பட்டு, கொக்கு

*v.* ஈற்றுக்கு அயலெழுத்து மெல்லின மெய்யாக அமைவது மென்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : சங்கு, பஞ்சு

*vi.* ஈற்றுக்கு அயலெழுத்து இடையின மெய்யாக அமைவது இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

உ-ம் : நல்கு, எய்து.

**11.** உயிரளபெடை :

எழுத்துகள் தமக்கு இயல்பாகவுள்ள மாத்திரை அளவில் இருந்து கூடியொலித்தல் பொதுவாக அளபெடை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராகமும், அழைத்தலும் பண்டமாற்றலும், முறையிடுதலும், புலம்பலும் வருமிடத்து எழுத்துகள் தத்தமக்குரிய அளவைக் கடந்து ஒலிக்கின்றன.

உயிர் எழுத்துகளில் நெட்டெழுத்துக்கள் ஏழும் தமக் குரிய மாத்திரையை விட நீண்டொலித்தல் உயிரளபெடை எனப்படும். உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று.

செய்யுளில் ஓசை குறையுமிடத்து நெட்டெழுத்துக்கள் ஏழும் சொல்லுக்கு முதலிலும், இடையிலும், கடையிலும் நின்று அவ்வோசையை நிறைத்தற்பொருட்டு தம் மாத்திரை யிலிருந்து கூடி ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமைக்கு அடையாளமாக அவற்றிற்கு இனமான குறில் எழுத்து அயலில் எழுதப்படும்.

ஓஒதல் வேண்டும் - முதலில் அளபெடுத்தது
தெய்வம் தொழஅள் - இடையில் அளபெடுத்தது
படாஅ பறை - கடையில் அளபெடுத்தது.

இயல்பாக நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தல் செய்யுளிசை அளபெடை என்றும், சாதாரணமாக குறில் நெடிலாக அளபெடுப்பது இன்னிசை அளபெடை என்றும், சொல் தன் உருச்சிதைந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை என்றும் கூறுவர்.

பிறர்க்குறூஉம் வெங்குன்று
எடுப்பதூஉம் எல்லாம் மழை } இன்னிசை அளபெடை

இன்னிசை தரும் பொருட்டு குறில் நெடிலாகி அளபெடுத்தது.

தழீஇ இருந்தனர்
குன்றுமுட்டிய குரீஇப் போல் } சொல்லிசை அளபெடை

இங்கே தழுவி, குருவி என்பன சொற்கள் சிதைந்து அளபெழுத்தன.

உயிரளபெடை இருபத்தொன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையுமிடத்து மெல்லின எழுத்துக் கள் ஆறும், ர், ழ் தவிர்ந்த இடையினம் நான்கும், ஆய்தமும் தமக்குரிய மாத்திரையில் இருந்து கூடி ஒலித்தல் ஒற்றளபெடையாகும். இதற்குரிய மாத்திரை ஒன்றாகும்.

இவை குறிலிணையின் கீழும், ஒரு குறிலின் கீழும், சொல்லுக்கு இடையிலும், கடையிலும் அளபெடுக்கும். ஒற்றுக்கள் அளபெடுத்தமைக்கு அறிகுறியாக அந்த அந்த ஒற்றுக்களே அவற்றின் அயலில் எழுதப்படும்.

இலங்ங்கு வெண்பிறை - குறிலிணைக் கீழ் அளபெடுத்தது.

(இலங்கு - விளங்குகின்ற)

எங்ங்கிறைவன் - ஒரு குறிலின் கீழ் அளபெடுத்தது.

ஒற்றளபெடைகளின் எண்ணிக்கை நாற்பத்திரண்டாகும்.

## 13. முதனிலை எழுத்துகள்

முயற்சி எளிமையும் உச்சரிக்கும் இனிமையும் நுணுக்க மாக கவனிக்கப்பட்டதனால் தமிழில் எல்லா எழுத்துக்களும் மொழி முதலாவதில்லை.

'பன்னீருயிரும் மொழி முதலாகும்' என்பதற்கமைய உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மொழி முதலாகும்.

அன்பு, ஆசை, இனிமை, ஈதல், உலகம், ஊமை, எறும்பு, ஏணி, ஐயம், ஒன்று, ஓரம், ஔவை.

மெய்யெழுத்துக்கள் தனியாக நின்று மொழி முதலாவ தில்லை. உயிர் மெய்யாகவே மொழி முதலில் வரும். உயிரேறிய க், ச், த், ப், ந், ம், வ், ய், ஞ் என்னும் ஒன்பது மெய் யெழுத்துக்களும் மொழி முதலாக வரும். இவற்றுள் க், ச், த், ப், ம், ந் ஆகிய ஆறும் மெய்களும் பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாகும்.

க் - கண், கால், கிளி, கீரி, குயில், கூடு, கெடுதி, கேடு, கை, கொக்கு, கோட்டம், கௌரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச் - சட்டி, சாடி, சினம், சீற்றம், சுந்தரம், சூது, செவி, சேவல், சைவம், சொல், சோலை, சௌபாக்கியம்

த் - தமிழ், தாய், தினம், தீமை, துன்பம், தூது, தெளிவு, தேட்டம், தையல், தொடு, தோட்டம், தௌவல் (இளமை)

ப் - பட்டம், பாட்டு, பிரம்பு, பீடை, புயல், பூமி, பெண், பேதை, பையன், பொட்டு, போர், பௌர்ணமி

ந் - நரி, நாரி, நிலம், நீலம், நுகம், நூல், நெல், நேற்று, நைதல், நொண்டி, நோய், நௌவி (மான்)

ம் - மகன், மான், மின்னல், மீன், முயல், மூன்று, மென்மை, மேன்மை, மையல், மொய்ம்பு, மோர், மௌனம்.

சில மெய்யெழுத்துக்கள் குறிப்பிட்ட உயிர் எழுத்துக் களுடன் மட்டும் மொழிக்கு முதலாகின்றன.

உ, ஊ, ஒ, ஓ தவிர்ந்த ஏனைய எட்டு உயிரோடும் வகரம் மொழி முதலாகும்.

வழி, வாழ்க, விழி, வீரம், வெற்றி, வேல், வையகம், வௌவால்.

யகரமெய் - அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறு உயிரெழுத்துக்களுடன் மொழி முதலாகும்.

யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்

ஞகரமெய் - அ, ஆ, எ, ஒ ஆகிய நான்கு உயிர்களுடன் மொழி முதலாகும்.

ஞமலி (நாய்), ஞாலம், ஞெண்டு (வண்டு), ஞொள்கல் (அலைதல், மெலிதல்)

தற்காலத்தில் இலக்கண நூலார் கூறாத பல மெய் யெழுத்துக்கள் மொழிக்கு முதலாகின்றன.

ரகர மெய் - ரதி, ராதை, ரிடபம், ரீங்காரம், ருசி, ரூபா, ரெட்டியார், ரேகை, ரொக்கம், ரோமம், ரௌத்திரம்.

லகர மெய் - லட்டு, லாபம், லிங்கம், லீலா, லுங்கி, லூதர், லெனின், லேகியம், லௌகீகம்

டகர மெய் - டமாரம், டாம்பீகம், டீசல், டுபாய், டோலக்.

றகர மெய் - றப்பர், றாத்தல், றீகல், றேந்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. மொழி இறுதி நிலை எழுத்துகள்

எல்லா எழுத்துக்களும் மொழிக்கு முதலாகாதவாறு போல எல்லா எழுத்துக்களும் மொழிக்கு இறுதியாவதும் இல்லை.

ஔ தவிர்ந்த பதினோருயிர்களும் மொழிக்கு இறுதியில் வரும் என தொல்காப்பியனார் கூறுவர். பன்னிரண்டு உயிர் களும் மொழிக்கு இறுதியாகும் என நன்னூலார் கூறுவர். எகரம் தவிர்ந்த பதினொரு உயிர்களும் மொழிக்கு இறுதி யாகும் என நாவலர் கூறுவர்.
இன்றைய வழக்கில் எ, ஒ, ஔ தவிர்ந்த ஏனைய உயிர்கள் மொழிக்கு இறுதியல் வருகின்றன.
உ - ம் : பல, பலா, நரி, நீ, சுடு, பூ, சே, கை, கோ.

மெய்யெழுத்துக்களில் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய பதினொரு மெய்யெடுத்துக்கள் மொழி இறுதியில் வரும்.
உரிஞ் (உராய்தல்), மண், பொன், மரம், வெரிந் (முதுகு), நோய், பார், கால், தெவ் (பகை), யாழ், நான்.

தற்கால வழக்கில் உரிஞ், வெரிந், தெவ் போன்ற சொற்கள் வழக்கொழிந்து போயின.

## 15. இடைநிலை மெய்ம்மயக்கம்

சொற்களுக்கிடையில் மெய்யெழுத்துக்கள் மயங்கி வரும் முறைமை இடைநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். அது உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம் மயக்கம் என இரண்டு வகைப்படும்.

**உடனிலை மெய்ம்மயக்கம் :**

ஒரு மெய்யெழுத்து தன்னோடு தானே மயங்கிவருவது உடனிலை மெய்ம்மயக்கமாகும்.

க், ச், த், ப் ஆகிய நான்கு மெய்யெழுத்துக்களும் உடனிலை மெய்ம்மயக்கமாக மட்டுமே வரும்.
அக்கா - க்க், பச்சை - ச்ச், பத்து - த்த், அப்பம் - ப்ப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுநிலை மெய்ம்மயக்கம் :

ஒரு மெய்யெழுத்து பிறிதொரு மெய்யெழுத்துடன் சேர்ந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கமாகும்.

ர், ழ் ஆகிய மெய்யெழுத்துக்கள் பிற மெய்யெழுத்துக் களோடு மட்டும் மயங்கி வரும்.

சோர்வு - ர்வ், வாழ்வு - ழ்வ்

மேலே குறிப்பிட்ட ஆறு மெய்யெழுத்துக்கள் தவிர்ந்த ஏனைய பன்னிரண்டு மெய்யெழுத்துக்களும் உடனிலையாகவும் வேற்று நிலையாகவும் வரும்.

| | |
|---|---|
| பட்டம் - ட்ட் | வெட்கம் - ட்க் |
| அன்னம் - ன்ன் | கன்று - ன்ற் |
| விஞ்ஞானம் - ஞ்ஞ் | பஞ்சம் - ஞ்ச் |

"கசதப வொழித்த வீரேழன் கூட்டம்
மெய்ம்மயக் குடனிலை ரழ வொழித்த தீரெட்
டாகுமிவ் விருபான் மயங்கு மொழியிடை
மேவு முயிர்மெய் மயக்கள வின்றே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. பகுபதம், பகாப்பதம்

ஓர் எழுத்து தனித்தேனும் இரண்டு முதலாகப் பல எழுத்துகள் தொடர்ந்தேனும் ஒரு பொருளைத் தெரிவிப்பது பதம் எனப்படும். அது பகாப்பதம், பகுபதம் என இரு வகைப்படும்.

**பகாப்பதம் :** பகுதி, விகுதி முதலியனவாக பிரிக்கமுடியாத பதம் பகாப்பதம் எனப்படும். அது பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களிலும் வரும்.

பொன், மண் - பெயர்ப் பகாப்பதம்
உண், வா - வினைப் பகாப்பதம்
மற்று, கொல் - இடைப் பகாப்பதம்
உறு, நனி - உரிப் பகாப்பதம்

**பகுபதம் :** பகுதி, விகுதி முதலான ஆக்கக்கூறுகளாக பிரிக்கப்படக் கூடிய பதம் பகுபதமாகும். அது பெயர், வினை, என இரு வகைப்படும். இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.

அறிஞன் - அறி + ஞ் + அன் - பெயர்ப் பகுபதம்
உண்டான் - உண் + ட் + ஆன் - வினைப் பகுபதம்

"எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள் தரின்
பதமாம்; அது பகாப்பதம், பகுபதமென
இருபாலாகி இயலும் என்ப"

\- நன்னூல்

## 2. பகுதி

பகுபதத்தின் முதல் நிலையாகிய பகாப்பதங்களே பகுதியாகும். 'தத்தம், பகாப்பதங்களே பகுதியாகும்' என்று நன்னூலார் கூறுவர். எவ்வாறாயினும் ஒரு பகுபதத்தின் அடிச் சொல்லையே பகுதி என்று கூறலாம்.

தெரிநிலை வினைப் பகுபதங்களுக்கு வினையடிகளே பகுதி களாக அமையும்.

சிறுபான்மை பெயர்ச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்பன வும் பகுதிகளாக வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டான் - பகுதி உண் (வினையடி)

காதலித்தான் - பகுதி காதல் (பெயரடி)

போன்றான் - பகுதி போல் (இடையடி)

சான்றான் - பகுதி சால் (உரியடி)

செயப்பாட்டு வினை, பிறவினை போன்றவற்றின் பகுதிகள் வடிவ அமைப்பில் வேறுபடுவதுண்டு. உதாரணம்,

கொல்லப்பட்டான் - பகுதி கொல்ல

செய்வித்தான் - பகுதி செய்ய

தற்கால வழக்கில் தெரிநிலை வினைச்சொற்கள் கூட்டுப் பகுதிகளாக அமைகின்றன. உதாரணம்,

ஓடிக் கொண்டிருந்தான் - பகுதி - ஓடிக்கொண்டிரு

## 3. விகுதிகள்

விகுதி என்பது பகுபதங்களின் இறுதியில் வந்து இலக்கண வேறுபாட்டை உணர்த்துவதற்குப் பயன்படும் சொல்லாக்க கூறாகும். திணை, பால், எண், இடம் இவற்றைப் பெரும்பாலும் உணர்த்திக்கொண்டு சொல்லின் இறுதியில் இருப்பது விகுதியாகும்.

தெரிநிலை வினைமுற்று விகுதிகள் - அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ

தன்மை ஒருமை விகுதி - ஏன்

தன்மை பன்மை விகுதி - அம், ஆம், எம், ஏம், ஓம்

முன்னிலை ஒருமை விகுதி - ஐ, ஆய், இ

முன்னிலைப் பன்மை விகுதி - இர், ஈர், கள், மின்

தொழிற்பெயர் விகுதி - தல், அல், அம் எனப் பத்தொன்பது விகுதிகள்

பண்புப் பெயர் விகுதிகள் - மை, ஐ, சி, பு, அம்

பெயரெச்ச விகுதிகள் - அ, உம்

வினையெச்ச விகுதிகள் - உ, இ, ய், அ, ஆல்

பிறவினை விகுதிகள் - வி, பி, விப்பி, கு, சு, டு, து, பு, று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இடைநிலைகள்

பகுபதங்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவதால் இடைநிலை எனப்பட்டது. இடைநிலைகள் மூன்று வகைப்படும்.

கால இடைநிலை
பெயர் இடைநிலை
எதிர்மறை இடைநிலை

**கால இடைநிலை :**

வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு கால இடைநிலை எனப்படும். இவ்வகையில் இறந்த காலம், நிகழ்காலம், எதிர் காலம் என்பன வற்றுக்கு தனித்தனி இடைநிலைகள் உள்ளன.

இறந்தகால இடைநிலைகள் - த், ட், ற், இன், இ, ன், ந்த், த்த்
நிகழ்கால இடைநிலைகள் - கின்று, கிறு
எதிர்கால இடைநிலைகள் - ப், வ், ப்ப்

எடுத்துக்காட்டு :

செய் + த் + ஆன் - த் - இறந்தகால இடைநிலை
செய் + கின்று + ஆன் - கின்று - நிகழ்கால இடைநிலை
செய் + வ் + ஆன் - வ் - எதிர்கால இடைநிலை

**பெயரிடை நிலை :**

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறப்படுவதால், ஒரு பெயர்ச்சொல்லில் (வினையாலணையும் பெயர் தவிர்ந்த) பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது பெயரிடை நிலை எனப்பட்டது.

அறிஞன் - அறி + ஞ் + அன் - ஞ் - பெயரிடை நிலை
ஓதுவான் - ஓது + வ் + ஆன் - வ் - பெயரிடை நிலை
இடைச்சி - இடை + ச் + இ - ச் - பெயரிடை நிலை
பெறுநர் - பெறு + ந் + அர் - பெயரிடை நிலை

**எதிர்மறை இடைநிலை :**

எதிர்மறை வினைச்சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறைப் பொருளை உணர்த்தும் உறுப்பு எதிர்மறை இடைநிலையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மறை இடைநிலைகள் - ஆ, ஆத், மாட்டு

செய் + ஆத் + உ - ஆத் - எதிர்மறை இடைநிலை

## 5. சாரியை

பகுபத உறுப்புக்களில் இடைநிலைக்கும் விகுதிக்கு மிடையில் வரும் பகுபத உறுப்பே சாரியை என்பது பொதுவான வழக்கு. சாரியை பகுதியையும் விகுதியையும் இணைப்பதற்கும் பயன்படும். கூட்டுப் பெயராக்கத்தில் இரண்டு சொற்களை இணைப்பதற்கும் பயன்படும்.

உண்டனன் - உண் + ட் + அன் + அன்

இங்கு விகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இணைப்பதற்கு சாரியை பயன்பட்டுள்ளது.

மரத்தை - மரம் + அத்து + ஐ

இங்கு பகுதியையும் விகுதியையும் இணைப்பதற்கு அத்து சாரியை பயன்பட்டுள்ளது.

புளி + காய் - புளி + அம் + காய் - புளியங்காய்

இங்கு கூட்டுப் பெயராக்கத்திற்கு 'அம்' சாரியை பயன்பட்டுள்ளது.

பொருள் வேறுபாட்டை உணர்த்துவதிலும் சாரியைகள் முதன்மை பெறுகின்றன.

புளி + பழம் - புளிப்பழம் - இது புளித் தன்மையுள்ள எல்லாப் பழங்களையும் குறிக்கும்.

புளி + அம் + பழம் - புளியம்பழம் என வரும்போது தனியே ஒரு வகையான பழத்தையே குறிக்கும்.

பழந்தமிழில் இருபதிற்கும் அதிகமான சாரியைகள் பயன் பட்டிருந்தன. இன்று அம், அன், இன், அத்து, அற்று முதலான சாரியைகளே வழக்கில் உள்ளன.

## 6. மூவகை மொழிகள்

தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மொழிகள் மூவகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மொழி யொருபொரு ளனவாந் தொடர்மொழி
பல பொரு ளனபொது விருமைய் மேற்பன

என நன்னூலார் கூறுவர். (நன் – 260)

**தனிமொழி :** ஒரு சொல் ஒரு பொருளைத் தருவது தனிமொழி எனப்படும். இதனை ஒருமொழி என்றும் கூறுவர்.

உ–ம் : நீர், நிலம், காற்று

**தொடர்மொழி :** தனிமொழிகள் இரண்டு முதலியனவாக தொடர்ந்து நின்று ஒவ்வொரு சொல்லுக்கு ஒவ்வொரு பொருளாகப் பல பொருள்களைத் தருவன தொடர்மொழியாம்.

உ–ம் : நிலங் கடந்தான், நிலங் கடந்த நெடுமால் (சொற்றொடர்களும் வாக்கியங்களும் தொடர்மொழிகள் எனப்படும்)

**பொதுமொழி :** ஒரு மொழியாய் நின்று ஒரு பொருளைத் தந்தும், அம்மொழியே தொடர்மொழியாய் நின்று பல பொருளைத் தந்தும் இரண்டிற்கும் பொதுவாய் வருவது பொதுமொழி எனப்படும்.

உ–ம் : தாமரை, வேங்கை

தாமரை ஒரு மொழி என பொருளைத் தரும்.

தா + மரை (தாவுகின்ற மரை) என தொடர் மொழியாகவும் பொருள்தரும்.

## 7. பெயர்ச் சொல்லின் தனித்துவமான பண்புகள்

பொருள் முதலியனவற்றுள் யாதேனும் ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். இவற்றின் தனித்துவமான பண்புகள் வருமாறு.

1. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும். காலம் காட்டுவதில்லை என்பது இலக்கணகாரரின் கூற்றுக் களாகும். ஆனால் வினையடியாகப் பிறக்கும் தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் போன்றன காலங் காட்டு கின்றன.

   உ–ம் : கண்ணன் – கண்ணனை, கண்ணனால் போன்றன வேற்றுமை உருபை ஏற்றுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தமை, செய்கின்றமை - தொழிற்பெயர் காலம் காட்டுதல்.

செய்தவன், செய்கின்றவன், செய்பவன் - வினையாலணையும் பெயர் காலம் காட்டுதல்.

2. எல்லாப் பெயர்ச் சொற்களும் பெயரடைகளைப் பெற்று வரும்.

உ-ம் : நல்ல பிள்ளை

3. பெயர்ச் சொற்கள் திணை, பால், எண், இடம் என்பனவற்றை உணர்த்தும்.

உ-ம்: பொன்னன் - உயர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கைப் பெயர்.

4. பெயர்ச்சொற்கள் எண் அடைகள், சுட்டு அடைகள், வினா அடைகளைப் பெற்றுவரும்.

ஒரு மரம் - எண் அடை

அந்த மரம் - சுட்டு அடை

எந்த மரம் - வினா அடை

5. பெயர்ச்சொற்கள் வாக்கியத்தில் எழுவாயாக வரும்.

கண்ணன் வந்தான்.

6. பெயர்ச்சொற்கள் பதிலீட்டுப் பெயர்களாகவும் வரும்.

கண்ணன் வந்தான். அவன் இடையில் மயங்கி விழுந்தான். அவன் என்பது கண்ணனுடைய பதிலீட்டுப் பெயர்.

## 8. மூவிடப் பெயர்கள்

இடம் என்பது சொற்கள் வழங்கும் ஸ்தானம். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். இவற்றிலிருந்து தோன்றியவையே மூவிடப் பெயர்கள் ஆகும்.

பேசுவோரை சுட்டும் பெயர் தன்மைப் பெயராகும். இலக்கணகாரர், நான், யான், நாம், யாம், நாங்கள் ஆகியன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை தன்மைப் பெயர் என்பர். இவற்றுள் யான், யாம் என்பன வழக்கொழிந்த வடிவங்கள் ஆகும். நான் தன்மை ஒருமை யாகவும் நாம், நாங்கள் தன்மைப் பன்மையாகவும் வழங்கி வருகின்றன.

நாம், நாங்கள் தன்மைப் பன்மையை உணர்த்துவதாயினும் இவையிரண்டிற்கும் இடையே வேறுபாடு உண்டு.

நாம் என்ற தன்மைப் பன்மை பேசுவோனையும் கேட்போனை யும் உளப்படுத்தி வருவதால் அது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.

உ - ம் : இது நம்முடைய பாடசாலை.

நாங்கள் பேசுவோனை மட்டுமே சுட்டிவரும்.

உ - ம் : இது எங்கள் பாடசாலை.

கேட்பவரைச் சுட்டுமிடம் முன்னிலை எனப்படும். நீ, நீர், நீங்கள், நீயிர், நீவிர், எல்லீர் என்பன முன்னிலைப் பெயர்களென இலக்கண நூல்கள் கூறும். இவற்றுள் நீ, நீர், நீங்கள் என்பனவே வழக்கில் உள்ளன. நீ, நீர் ஒருமையையும் நீங்கள் பன்மையையும் உணர்த்தும். நீங்கள் மரியாதை ஒருமையில் வழங்கிவருகின்றது.

பேசப்படுவதை அல்லது பேசப்படுவோரை சுட்டும் பெயர் படர்க்கைப் பெயராகும். படர்க்கை இடப்பெயர்கள்

உ - ம் : அவன், இவன், அது, இது

தன்மை முன்னிலைப் பெயர்களில் திணை, பால் வேறுபாடு இல்லை. ஒருமை, பன்மை மாத்திரமே உணர்த்தும். தன்மை முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது வடிவம் மாறும். படர்க்கைப் பெயர்கள் வடிவம் மாறா.

நான் + ஐ - என்னை; நீங்கள் + ஐ - உங்களை, அவள் + ஐ - அவளை

## 9. இடுகுறிப் பெயரும் காரணப் பெயரும்

**இடுகுறிப் பெயர் :**

ஒரு காரணமுமின்றி ஒரு பொருளுக்கு தொன்றுதொட்டு இட்டு வழங்கிவரும் பெயர் இடுகுறிப் பெயராம்.

உ - ம் : கல், மண், மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுகுறிப் பெயரில் பொதுப்பெயர் சிறப்புப் பெயர் என இரு வகைப் பெயர்கள் உள.

மரம் - இடுகுறிப் பொதுப்பெயர் (இடுகுறியாய் எவ்வளவு வகை மரங்களுக்கும் பொதுவாக நிற்றலால்)

வேம்பு - இடுகுறிச் சிறப்புப்பெயர் (இடுகுறியாய் ஒரு வகை மரத்தையே குறிப்பதால்)

**காரணப் பெயர் :**

ஏதாவது ஒரு காரணத்தால் வரும் பெயர் காரணப் பெயராம்.

பறவை - பட்சி (பறப்பதால்)

அணி - ஆபரணம் (அணிந்து கொள்ளப்படுவதால்)

காரணப் பெயரிலும் பொதுப் பெயர், சிறப்புப் பெயர் என இரு வகைப் பெயர்கள் உள.

பறவை - காரணப் பொதுப் பெயர் (பறக்கும் காரணத்தால் பல்வகைப்பட்ட பட்சிகளுக்கும் பொதுவாக வழங்குவதால்)

மீன்கொத்தி - காரணச் சிறப்புப் பெயர் (மீன்களை கொத்தும் காரணம் பற்றி ஒரு வகைப் பறவைக்கே சிறப்பாக வழங்குவதால்)

## 10. காரண இடுகுறிப் பெயர்

காரணம் கருதிய பொழுது அக்காரணத்தை உடைய பல பொருள்களுக்குச் செல்வதாயும், காரணம் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒரு பொருளையே குறிப்பதாயுள்ள பெயர் காரண இடுகுறிப் பெயராகும்.

காற்றாடி - காற்றில் ஆடும் காரணத்தால் காற்றில் ஆடும் எல்லாப் பொருள்களையும் குறிப்பதாயினும் இடுகுறியளவாய் நின்று சிறுவர் விளையாடும் பட்டத்தையே குறிப்பதால் காரண இடுகுறிப் பெயராயிற்று.

## 11. ஆக்கப் பெயர்

பெயர் அல்லது வினைச் சொற்களுடன் விகுதிகள் சேர்ந்து ஆக்கப்படுவதனால் ஆக்கப் பெயர்கள் உருவாகின்றன. இப் பெயராக்கத்தில் பயன்படும் விகுதிகள் ஆக்கப்பெயர் விகுதி கள் என்று அழைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரோடு விகுதி சேரும்போது புதிய ஆக்கப்பெயர் உருவாகின்றது.

முதல் + ஆளி - முதலாளி

புத்தி + சாலி - புத்திசாலி

இதுபோல வினையோடு விகுதி சேரும்போது புதிய ஆக்கப் பெயர்கள் உருவாகின்றன.

மலர் + ச்சி - மலர்ச்சி

நுகர் + ச்சி - நுகர்ச்சி

வினை அடிகளுடன் பெயர்ச் சொற்கள் சேர்ந்தும் ஆக்கப் பெயர் அமைகின்றன.

ஆடுகளம், ஓடுதளம், அடக்குமுறை

ஆக்கப் பெயர்களின் ஆக்கம் மிக ஒழுங்காக காணப்படுவதில்லை. எவ்வினை எவ்வாறு பெயராக்கம் பெறுகின்றது என்பதை அறுதியிட்டு ஒரு வரன்முறைக்குள் கொண்டுவர முடியாதுள்ளது. ஆட்டம், வாட்டம், கொலை, பார்வை போன்றன வினையடியாகப் பிறக்கும் தொழிற்பெயர்கள் போலவே தென்படுகின்றன. நன்னூலாரும் இவற்றை தொழிற்பெயராக கொள்வர்.

## 12. கூட்டுப் பெயர்

பல சொற்கள் இணைந்து உருவாக்கப்படும் பெயர்ச் சொற்கள் கூட்டுப்பெயர் எனப்படும்.

தற்காலத்தில் பெரும்பாலான கூட்டுப் பெயர்கள் இரண்டு சொற்களால் ஆக்கப்பட்டவையாக உள்ளன. சில புறநடைகளும் உள.

உ-ம் : வானொலி, மின்சாரம், புகையிரதம், பல்கலைக்கழகம்.

கூட்டுப் பெயர்கள் பெரும்பாலும் இரண்டு வகையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

ஒரு பெயர்ச்சொல் பிறிதொரு பெயர்ச்சொல்லுடன் இணைந்து கூட்டுப்பெயராக அமையும். தனித்தனிப் பெயர்ச் சொற்களாக அமைந்து கூட்டுப் பெயரானதும் அவை தம் தனித் தன்மையை இழந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் : கடல் + கரை - கடற்கரை

வான் + ஒலி - வானொலி

ஒரு வினைச்சொல்லுடன் ஒரு பெயர்ச்சொல் சேர்வதன் மூலமும் கூட்டுப்பெயர் ஆக்கப் பெறுகின்றது.

உ-ம் : ஏவு + கணை - ஏவுகணை

சுடு + சோறு - சுடுசோறு

பெரும்பாலும் கூட்டுப் பெயர்களை தொகைச் சொற்களாக கருதலாம்.

## 13. மாற்றுப் பெயர்கள்

ஒரு பெயர்ச்சொல்லுக்கோ ஒரு பெயர்த் தன்மை தொடருக்கோ பதிலாக இன்னொரு பெயரை இட்டுக் கூறும் பெயரை மாற்றுப் பெயர் என்று கூறுவர்.

கண்ணன் வந்தான். அவன் நல்லவன். இதில் அவன் என்பது கண்ணனைக் குறிப்பதால் அது மாற்றுப் பெயர் எனப்படும். இதனை இருவகையாக வகைப்படுத்துவர்.

1. மூவிடப் பெயர்
2. பிறமாற்றுப் பெயர்

மூவிடப் பெயர்களில்,

தன்மை மாற்றுப் பெயர் :

தன்மைப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது ஏற்படும் மாற்றங்களை அவதானிக்கும்போது இதனை அறியலாம்.

நான் + ஐ - என்னை (நான் > என்)

நாங்கள் + ஐ - எங்களை (நாங்கள் > எங்கள்)

முன்னிலை மாற்றுப் பெயர் :

நீ + ஐ - உன்னை (நீ > உன்)

நீங்கள் + ஐ - உங்களை (நீங்கள் > உங்கள்)

படர்க்கை மாற்றுப் பெயர்கள் :

அவன், அவள், அவர், அது, அவை.

தமிழில் சுட்டுப் பெயர்களே படர்க்கை மாற்றுப் பெயராக உள்ளமை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மாற்றுப் பெயர்களில் யார், யாவர், எவன், எவள், எது, என்ன, எவை ஆகியவை வினா மாற்றுப் பெயர்களாகும். வினா மாற்றுப் பெயர்கள் திணை, பால், எண் காட்டுவதும் வேற்றுமை உருபு ஏற்பதும் குறிப்பிடத்தக்கது.

தான், தாம், தாங்கள் என்பன படர்க்கை தற்சுட்டு மாற்றுப் பெயர்களாகும். தமிழில் எழுவாய் பெயரை சுட்டப் பயன்படுகின்றன.

## 14. உயர்திணை ஆண்பாற் பெயர்கள்

'னஃகானொற்றே ஆடூஉ அறிசொல்' என தொல் காப்பியம், னகர மெய்யை இறுதியாக உடையன எல்லாம் உயர்திணை ஆண்பால் பெயர் என்று கூறும். இவற்றினை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) இடைச் சொற்களைப் பகுதியாகக் கொண்டு எழும் சுட்டு வினாப்பெயர்கள்

உ-ம் : அவன், இவன், எவன்

2) விகுதிகள் பெற்றுவரும் ஆண்பாற் பெயர்கள்

அன் விகுதி - கண்ணன்
ஆன் விகுதி - நல்லான்
மன் விகுதி - வடமன்
மான் விகுதி - கோமான்

3) திணைப் பொதுப் பெயர் முன் ஆண் என்ற அடைமொழி பெற்று வரும் பெயர்

உ-ம் : ஆண் பிள்ளை, ஆண் குழந்தை

4) வழக்கு நோக்கி உணர்வன

உ-ம் : குரிசில், தோன்றல், அண்ணல்

## 15. உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்

'ளஃகா னொற்றே மகடூஉ அறிசொல்' என்பர் தொல்காப்பியர். ளகர ஒற்றுடன் இகர விகுதியையும் சேர்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவணந்தியார் கூறுவர். பெரும்பாலும் ஆண்பாற் சொற்களைப் போலவே பெண்பாற் சொற்களுமாகின்றன.

1. இடைச் சொற்களைப் பகுதியாகக் கொண்டு எழும் சுட்டு வினாப்பெயர்களும் பிறவும்.

   உ-ம் : அவள், இவள், எவள், பிறள்

2. விகுதிகள் பெற்றுவரும் பெண்பாற் பெயர்கள்

   இகர விகுதி - பொன்னி, செல்வி, வசந்தி

   அள் விகுதி - பூணள்

   ஆள் விகுதி - அடியாள்

   ஐ விகுதி - ஆசிரியை, பண்டிதை

3. திணைப் பொதுப்பெயர் முன் பெண் என்ற அடைமொழி கொடுத்து வருவன.

   உ-ம் : பெண்பிள்ளை, பெண்புலவர்

4. வழக்கு நோக்கி உணர்வன

   உ-ம் : தோழி, செவிலி, நங்கை

## 16. இரு திணைப் பொதுப் பெயர்

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாக வழங்கி வரும் பெயர் இரு திணைப் பொதுப் பெயராகும். இது திணை விரவுப் பெயர் என்றும் கூறப்படும். இப்பொதுப் பெயர்கள் கொண்டு முடியும் வினைச் சொற்களாலும் அடைமொழி களாலும் திணைப் பொதுமை நீங்கும்.

'பொதுப் பெயர் வினைகளின் பொதுமை நீங்கும்
மேல்வரும் சிறப்புப் பெயர் வினை தாமே"

(நன்னூல் - 359)

கொண்டு முடியும் வினைச் சொற்களாலும் அடைமொழி களாலும் திணைப் பொதுமை நீங்குவதற்கு உதாரணம்

சாத்தன் உழுதான் - உயர்திணை

சாத்தன் உழுதது - அஃறிணை

அடைமொழிகளைக் கொண்டு பொதுமை நீங்க உதாரணம்

பள்ளிப் பிள்ளை - உயர்திணை

கீரிப் பிள்ளை - அஃறிணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை முன்னிலைப் பெயர்களும் இரு திணைப் பொதுப் பெயர்களாகும். நான், நாங்கள், நீ, நீங்கள் முதலிய சொற்களுக்கு திணையோ பாலோ கூறமுடியாது. பேசுபவர் யார் யாரிடம் பேசுகின்றார் போன்றவற்றைக் கொண்டே இவற்றின் திணை பாலை ஊகித்து அறியலாம்.

தொல்காப்பியர் இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற் பெயர், தான், தாம், எல்லாம் என்பனவும் இரு திணைப் பொதுப் பெயர் எனக் கூறுவர்.

## 17. உயர்திணை ஆண் பெண் பொதுப் பெயர்

உயர்திணையில் காணப்படும் சில பெயர்கள் ஆண் பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவாக உள்ளன. ஆண் பாலையும் பெண் பாலையும் உணர்த்தாது மனித குலம் என்ற ஒன்றையே சுட்டி நிற்கும் ஒருமை காட்டும் பெயர்களை இருபாற் பொதுப்பெயர் என்பர். பல்துறைகளிலும் தொழில் நிலையங் களிலும் ஆண், பெண் சமத்துவமாகப் பழகுவதால் இவ் வகைப் பெயர்கள் பல்கிப் பெருகுகின்றன.

அர் விகுதி - கணக்காளர், ஆய்வாளர், பதிவாளர், அதிபர், பிரதமர்
இ விகுதி - சாரதி, விமானி, கூத்தாடி
இ/பதி விகுதி - நீதிபதி, மடாதிபதி
இ/சாலி விகுதி - புத்திசாலி
இ/ஆளி விகுதி - நோயாளி, கடனாளி
இ/வாதி விகுதி - பிரதிவாதி, நியாயவாதி, அரசியல்வாதி

## 18. உயர்திணை மரியாதை ஒருமைப் பெயர்

தற்காலத் தமிழில் உயர்திணை ஒருமை பரவலாக காணப்படுகின்ற ஓர் இலக்கணக் கூறு. மனித குலத்தில் ஒரு ஆணையோ, பெண்ணையோ மரியாதை காரணமாக உயர்வாக கூறுவது மரியாதை ஒருமை என்பர். இவற்றுள் விகுதி பெற்று வருவனவும் உள்ளன. விகுதி பெறாமல் வருவனவும் உள்ளன. அர், ஆர் விகுதிகள் பெற்ற உயர்திணைப் பெயர்களை பலர்பாற் பெயர்கள் என்றே தமிழ் இலக்கண நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அவர், அரசர், கலைஞர், பெரியார் போன்ற சொற்கள் பழந்தமிழில் மரியாதைப் பொருளில் ஒருமையில் வந்துள்ளதை, "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி" எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. மேலும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு.

அர் - பேராசிரியர், ஆசிரியர்

ஆர் - புதல்வியார், தாயார், மாமனார்

வர் - புலவர், முதல்வர்

ஞர் - கலைஞர், அறிஞர்

நர் - இயக்குநர், பாடுநர்

காரர் - பணக்காரர்

ஐயா, அம்மா, அம்மணி போன்றன விகுதி பெறாமல் வரும் ஒருமைப் பெயர்களாகும்.

## 19. உயர்திணைப் பலர்பாற் பெயர்கள்

உயர்திணையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை குறிக்கும் பெயர்கள் பலர்பாற் பெயர்கள் எனப்படும். ரகர மெய்யீறும் 'கள்' விகுதியும் பெற்று வருவன உயர்திணைப் பலர்பாற் பெயர்களாகும்.

அர் விகுதி பெற்று வருவன : இருவர், மூவர், இலங்கையர்

ஆர் விகுதி - உற்றார், ஊரார்

இர் விகுதி - மகளிர், பெண்டிர்

ஓர் விகுதி - பெரியோர், முதியோர்

கள் விகுதி - (அர் மரியாதை கருதும் விகுதியாக மாறவே கள் விகுதி பெறவேண்டியதாயிற்று) ஆண்கள், பெண்கள்

அர்கள் - அரசர்கள், ஆசிரியர்கள்

ஆர்கள் - ஊரார்கள், நல்லார்கள்

மார் - மாமன்மார், தம்பிமார்

## 20. பால் பகா அஃறிணைப் பெயர் அல்லது அஃறிணை விரவுப் பெயர்

அஃறிணை ஒருமை விகுதியாகிய 'து' விகுதியையும் அ, வை, கள் எனப்படும் பன்மை விகுதிகளையும் பெறாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஃறிணைப் பெயர்கள் பால் பகா அஃறிணைப் பெயர் என்று அழைக்கப்படும். தொல்காப்பியர் காலத்தில் அஃறிணைப் பெயர்கள் எல்லாம் ஒன்றன்பாலுக்கும் பலவின்பாலுக்கும் பொதுவாகவே இருந்தன.

கிளி, பூனை, பறவை, பசு முதலானவை அஃறிணை இயற் பெயர்களாகவே கொள்ளப்பட்டன. இவை முடிக்கும் வினைச் சொற்களாலும் அடையாக வரும் எண்ணுப் பெயர்களாலும் பாற் பொதுமை நீங்கி ஒன்றன்பாலையோ பலவின் பாலையோ சுட்டும்.

உதாரணம்:

பசு வந்தது - ஒருமை; பசு வந்தன - பன்மை

கண் நொந்தது - ஒருமை; கண் நொந்தன - பன்மை

ஒரு மாடு - ஒருமை; பத்து மாடு - பன்மை

பால் பகுக்க முடியாத இவ்வியற் பெயர்களை பால் பகா அஃ றிணைப் பெயர் என்று நன்னூலார் கூறுவர். கள் விகுதி பன்மையை உணர்த்துவதாயினும் பேச்சு வழக்கில் இன்றும் ஒருமை வினை கொடுத்துப் பேசுவதே வழக்கமாக உள்ளன.

மாடுகள் ஓடுது

கண்கள் நோகுது என்றும் எழுத்து வழக்கில் கண் பார்க்கும், காது கேட்கும் என்றே எழுதப்படுகின்றன.

## 21. தொழிற் பெயர்

வினை அடியாகப் பிறந்து தொழிலுக்குப் பெயராக அமைவதே தொழிற் பெயராகும். இவை தொழிலுக்கே என்றும் பெயராயும், தொழிலுக்குரிய பொருளுக்கும் பெயராக நிற்கின்றன.

| தொழிற் பெயர் | தொழிற் பொருட் பெயர் |
|---|---|
| போர்த்தல் | போர்வை |
| கறத்தல் | கறவை |
| பாடல் | பாடல் (பாட்டு) |

தொழிற் பெயர்கள் பின்வருமாறு ஆக்கப்படுகின்றன.

1) வினையடிகளே தொழிற் பெயராக நிற்பதுண்டு. இவை முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

உ-ம் : பொலி, திரை, அலை, அணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) வினை அடியுடன் தொழிற் பெயர் விகுதிகளில் ஒன்று சேர்ந்து ஆக்கப்படுதல் இன்னொரு வகை. உதாரணம்

ஓடு + அம் : ஓட்டம்

ஆடு + அல் : ஆடல்

பாடு + தல் : பாடுதல்

3) சில தொழிற் பெயர்கள் வினை அடியுடன் கால இடைநிலையும் து, மை விகுதி பெற்று வருவதும் உண்டு. இவை காலங் காட்டும் தொழிற்பெயர் எனப்படும். உதாரணம்

செய் + த் + (அ) + து : செய்தது

போ + ன் + (அ) + து : போனது

போ + கின்று + (அ) + து : போகின்றது

போ + ன் + (அ) + மை : போனமை

4) சில தொழிற் பெயர்கள் எதிர்மறை இடைநிலை பெற்று து, மை விகுதி பெற்று வருவதுண்டு.

இவை எதிர்மறை தொழிற்பெயர் எனப்படும். உதாரணம்

செய் + ஆத் + (அ) + து - செய்யாதது

போ + ஆ + (மை) - போகாமை

## 22. வினையாலணையும் பெயர்

ஒரு வினைமுற்று பெயர்த் தன்மை அடைவது வினையாலணையும் பெயர் எனப்படும். வினைமுற்றுக்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது பெயராகி விடுகின்றன.

உ-ம் : கொடுத்தானுக்கு குறைவில்லை.

கொடுத்தவனுக்கு குறைவில்லை.

கொடுத்தான் என்பது வினைமுற்று. கொடுத்தானுக்கு என்பதில் கொடுத்தான் கொடுத்த மனிதனைக் குறிக்கின்றது. இது தெரிநிலை வினையாலணையும் பெயர் எனப்படும்.

வல்லானுக்குப் புல்லும் ஆயுதம்

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்

வல்லான் குறிப்பு வினைமுற்று. வல்லவன் குறிப்பு வினையாலணையும் பெயர்.

வினையாலணையும் பெயர் வினையடியாகப் பிறந்தாலும் அவை காலம் காட்டும் இயல்புடையன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் : வந்தவன் - இறந்த காலம்
வருகின்றவன் - நிகழ்காலம்
வருபவன் - எதிர்காலம்

## 23. தொழிற்பெயர் - வினையாலணையும் பெயர் வேறுபாடு

இரு பெயர்களும் வினையடியாகப் பிறப்பதனாலும் இரண்டும் பெயர் என்ற முறையில் வேற்றுமை உருபை ஏற்பதனாலும் இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு அறியப்பட வேண்டும்.

வினைமுற்றுக்களே வினையாலணையும் பெயராக ஆகின்றன. ஆதலால் இவை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும்.

உ-ம் : வந்தவன், வந்தவள், வந்தவர், வந்தது, வந்தவை

ஆனால் தொழிற் பெயர்கள் படர்க்கையிடத்திற்கு மட்டுமே உரியன.

தொழிற்பெயர்கள் சிறுபான்மை காலம் காட்டும். ஆனால் வினையாலணையும் பெயர் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ எப்பொழுதும் காலம் காட்டும்.

உ-ம் : வந்தவன், வருகின்றவன், வருபவன்

வினையாலணையும் பெயர் பால் காட்டும் விகுதிகளை கொண்டிருப்பதால் எண்ணிக்கையில் வரையறையுள்ளதாக அமைய தொழிற்பெயர் காலத்திற்கு காலம் பல்கிப் பெருகுவன.

## 24. பெயர்ச் சொற்கள் வேற்றுமை ஏற்கும் முறை

பெயர்ச் சொற்கள் உருபு ஏற்றோ, ஏற்காமலோ பொருளை வேறுபடுத்தினால் அது வேற்றுமை எனப்படும். முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் தவிர்ந்த ஏனைய வேற்றுமைகள் உருபுகளை ஏற்கும்போது பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றன.

மூவிடப் பெயர்களில் தன்மை முன்னிலைப் பெயர் தவிர்ந்த ஏனைய படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது இயல்பாக அமைகின்றன. உதாரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் + ஆல் - அவனால்

அவன் + ஐ - அவனை

தன்மை முன்னிலைப் பெயர்கள் உருபேற்கும்போது முதல் நெடில் குறுகி விகாரமடைகின்றன. உதாரணம்

நான் + ஐ - என் + ஐ - என்னை

நீங்கள் + ஐ - உங்கள் + ஐ - உங்களை

நெடிற்றொடர் குற்றியலுகரப் பெயர்கள் ஏற்று இரட்டித்து உருபை ஏற்கின்றன. உதாரணம்

நாடு + ஐ - நாட்டு + ஐ - நாட்டை

ஆறு + ஐ - ஆற்று + ஐ - ஆற்றை

சில பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது தவிர்க்க இயலாத வகையில் சாரியைகளைப் பெறுகின்றன. உதாரணம்

அது + அன் + ஐ - அதனை

மரம் + அத்து + ஐ - மரத்தை

உருபுகளை தவிர சொற்களும் உருபுகளாக வருகின்றன. உதாரணம்

கொண்டு : தடி கொண்டு தாக்கினான்.

உடைய : அவனுடைய புத்தகம்.

## 25. முதலாம் வேற்றுமை/ எழுவாய் வேற்றுமை

பெயர்ச்சொல் அல்லது பெயர்த் தன்மைப்பட்ட சொல் உருபு எதுவும் பெற்றுக்கொள்ளாமல் பயனிலை கொண்டு முடியும் அமைப்பு முதலாம் வேற்றுமை எனப்படும். இதற்கென தனியான உருபுகள் எதுவும் இல்லை. எழுவாய் தொடரமைப்பில் பயனிலையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் குறிப்பிட்ட ஒரு பெயர்ச் சொல் வினை முதலாகி எழுவாயாக மாறுகின்றது. இவ் வேற்றுமை பெயரையும் வினாவையும், வினையையும் கொண்டு முடியும். உதாரணம்

கண்ணன் ஓர் ஆசிரியன் - பெயர்ப் பயனிலை

நீ யார் - வினாச் சொல் பயனிலையாக வந்தது

கண்ணன் வந்தான் - வினைப் பயனிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எழுவாய் உருபு திரிவில் பெயரே
வினை பெயர் வினாக் கொளல் அதன் பயனிலையே"
என்று நன்னூலார் கூறுவர்.

## 26. இரண்டாம் வேற்றுமை/ செயப்படுபொருள் வேற்றுமை

இதன் உருபு 'ஐ' என்பதாகும். இதன் பொருள் செயப்படுபொருளாகும். ஒரு வாக்கியத்தில் வினையின் பயனுக்கு உட்படும் பெயர்ச் சொல் செயப்படு பொருளாகும். நன்னூல் இரண்டாம் வேற்றுமைப் பொருளாக ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலானவற்றைக் கூறும்.

வீட்டைக் கட்டினான் - ஆக்கல்
பகைவரை அழித்தான் - அழித்தல்
ஊரை அடைந்தான் - அடைதல்
குடும்பத்தை விட்டான் - நீக்கல்
தந்தையைப் போன்றான் - ஒக்கல்
பொன்னை உடையான் - உடைமை

இரண்டாம் வேற்றுமையைப் பொறுத்தவரையில் தொகைத் தொடர்களே அதிகம் பயிலுகின்றன.
உ-ம் : படம் வரைந்தான்.

## 27. மூன்றாம் வேற்றுமை/ கருவி, உடனிகழ்ச்சி வேற்றுமை

ஆல், ஆன், ஒடு, ஓடு இவ் வேற்றுமையின் உருபுகள் என்றும், கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி அதன் பொருள்கள் எனவும் பவணந்தியார் கூறுவர். பவணந்தியார் கூறாது விட்ட சில பொருள்களையும் ஆல் உருபு உணர்த்துவதைக் காணமுடியும்.

நான் சாவியால் கதவைத் திறந்தேன். கதவு திறப்பதற்கு சாவி கருவியாயிற்று.

சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் பாடப்பட்டது. இளங்கோ அடிகள் கருத்தாப் பொருளில் வந்துள்ளது.

பெரும் மழையால் பயிர்கள் அழிந்தன. பயிர்கள் அழிவதற்கு மழை காரணமாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆல் உருபு சிறுபான்மை நீங்கற் பொருளிலும் வருகின்றது.
உ-ம் : மரத்தால் விழுந்தான். இங்கு ஆல் உருபு நீங்கற் பொருளை யே உணர்த்திற்று.

ஓடு உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வருகின்றது. இரண்டு அல்லது பல பெயர்ச்சொற்கள் ஒரே சமயத்தில் ஒரு வினை நிகழ்வுக்கு உள்ளாவது உடனிகழ்ச்சியாகும்.
உ-ம் : மாணவரோடு ஆசிரியர் வந்தார்.
ஓடு உருபு தற்காலத்தில் கலப்புறு பொருளிலும் காரணப் பொருளிலும் வருகின்றது.

பாலோடு தண்ணீர் கலந்து விற்கிறார்கள். இங்கு கலப்புறு பொருள் வந்துள்ளது.

தழிழோடு மாய்கிறான், அறிவோடு பொலிகிறான் என்ற இடங்களில் தமிழ், அறிவு என்பன காரணப் பொருளிலேயே வந்துள்ளன.

தற்காலத்தில் ஆன் உருபும் ஒடு உருபும் வழங்கொழிந்து போயின. அதற்குப் பதிலாக கொண்டு, உடன் என்ற சொல்லுருபு கள் பயன்பாட்டில் உள்ளன.
உ-ம் : வாணி மலர் கொண்டு மாலை தொடுத்தாள்.
தந்தையுடன் மகன் சென்றான்.

## 28. நான்காம் வேற்றுமை/ கொடை வேற்றுமை

நான்காம் வேற்றுமைக்கு உருபு 'கு' என்பதாகும். கோடல் (கொள்ளுதல், ஏற்றல்) அதன் பொருள். இக் கோடற் பொருளை கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை ஆதியாகப் பிரித்துக் காட்டுவார் பவணந்தியார். நான்காம் வேற்றுமை உருபு ஏற்பதன் முன்னர் சாரியை பெறுவதும் ஒரு வழக்கமாகும்.
உ-ம் : நாடு + இன் + கு - நாட்டிற்கு
அது + அன் + கு - அதற்கு
கொடை என்பது ஒருவர் கொடுத்ததை பிறிதொருவர் ஏற்றுக் கொள்ளுதலைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம்:

கொடை - ஏழைக்கு உணவு கொடு

பகை - எலிக்குப் பகை பூனை

நேர்ச்சி - பாரிக்கு நண்பர கபிலர்

தகவு - அரசர்க்கு உரியது முடி

அதுவாதல் - வளையலுக்குப் பொன்

பொருட்டு - கூலிக்கு வேலை செய்

முறை - வாணிக்கு மாலா தங்கை.

தற்காலத்தில் 'கு' உருபு எல்லைப் பொருளில் வருவதும் அவதானிக்கத்தக்கது.

உ-ம் : இலங்கைக்கு வடக்கே இந்தியா உள்ளது.

சில இடங்களில் உருபுடன் ஆக, பொருட்டு, நிமித்தம் போன்ற சொல்லுருபுகளும் பயன்பாட்டில் உள்ளன.

கண்ணன் பணத்துக்கு (ஆக) வேலை செய்தான்.

கண்ணன் என்பொருட்டு வேலை செய்தான்.

## 29. ஐந்தாம் வேற்றுமை/ நீங்கல் வேற்றுமை

'ஐந்தாவதனுருவு இல்லும் இன்னும், நீங்கல், எல்லை, ஒப்பு, ஏதுப்பொருளே' என்று நன்னூல் ஐந்தாம் வேற்றுமைக்கு விளக்கம் தரும்.

நீங்கல் - இது ஓரிடத்திலிருந்து விலகுவதைக் குறிக்கும். இது பருப்பொருள் சார்ந்ததாக இருக்கும். பருப்பொருள் சாராத தாகவும் இருக்கும்.

உ-ம்: மரத்தில் இருந்து தேங்காய் விழுந்தது - பருப்பொருள் சார்ந்தது.

உன்னை என் ஞாபகத்திலிருந்து நீக்கிவிட்டேன் - பருப்பொருள் சாராதது.

எல்லை - ஓரிடத்தின் இட எல்லை காட்டுவதற்குப் பயன்படும்.

உ-ம் : கரவெட்டியின் வடக்கு வதிரி.

ஒப்பு - இரு பொருளை ஒப்பிட்டு உயர்வு தாழ்வை குறிப்பது. "இதனின் இற்றிது என்னும் அதுகே" என தொல்காப்பியம் கூறும்.

உ-ம் : மல்லிகையின் நாறும் மருக்கொழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏது - ஒன்றின் உயர்வு அல்லது தாழ்வு போன்றவற்றிற்கு காரணமாய் அமைவது.

உ-ம் : கல்வியிற் பெரியன் கம்பன்.

குணத்தில் இழிந்தவன் சகுனி.

நின்று, இருந்து என்பது இதன் சொல்லுருபாகும்.

மரத்தினின்று இறங்கினான்.

வீட்டிலிருந்து புறப்பட்டான்.

## 30. ஆறாம் வேற்றுமை/ உடைமை வேற்றுமை

ஆறாம் வேற்றுமைத் தொடரமைப்பு ஏனைய வேற்றுமைகளில் இருந்து இரு வகையில் வேறுபட்டுள்ளது.

1. இவ் வேற்றுமையில் ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு உருபுகள் உண்டு. முடிக்கும் சொல் ஒருமையாயின் 'அது' என்பதும் பன்மையாயின் 'அ' என்பதும் உருபுகளாகும். அஃறிணைப் பொருள் தரும் முடிக்கும் சொற்களுக்கே இவ்வரையறை பொருந்தும்.

   உ-ம் : எனது கை

   என கைகள் (என் கைகள்)

   முடிக்கும் சொற்கள் உயர்திணையாயின் 'உடைய' என்ற சொல்லுருபைப் பெறும்.

   உ-ம் : என்னுடைய மகன்

   (இங்கு முறைப் பொருளில் அமைந்துள்ளது)

2. ஏனைய வேற்றுமைகள் பெயருக்கும் வினைக்கும் இடையே உள்ள உறவைச் சுட்ட ஆறாம் வேற்றுமை இரு பெயர்ச் சொற்களுக்கிடையே உள்ள உறவை சுட்டி நிற்கின்றது.

   உ-ம் : கண்ணன் வந்தான் - முதல் வேற்றுமை

   கண்ணனை அடித்தான் - இரண்டாம் வேற்றுமை

   கண்ணனது புத்தகம் - ஆறாம் வேற்றுமை

## 31. ஆறாம் வேற்றுமைப் பொருள்

ஆறாம் வேற்றுமைக்குரிய பொருள் உடைமையாகும். உடைமையை கிழமை என்ற பெயராலும் வழங்குவர். கிழமை இரு வகைப்படும். அவை தற்கிழமை, பிறிதின் கிழமை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தற்கிழமை :**

தன்னிலிருந்து வேறாக்க முடியாத உடைமைப் பொருள். அது ஆறு வகைப்படும். உதாரணம்
இராமனது கண் - உறுப்புத் தற்கிழமை
பாலினது வெண்மை - பண்புத் தற்கிழமை
குழந்தையினது வருகை - தொழிற் தற்கிழமை
நெல்லினது குப்பை - ஒன்றன் கூட்டத் தற்கிழமை
படைகளினது அணி - பலவின் கூட்டத் தற்கிழமை
மஞ்சளது பொடி - ஒன்றுதிரிந்து வேறான தற்கிழமை

**பிறிதின் கிழமை :**

தன்னிலிருந்து வேறான தனக்கு உடைமையாய் உள்ள பொருள். அது மூன்று வகைப்படும். உதாரணம்
எனது புத்தகம் - பொருட் பிறிதின் கிழமை
தமிழரது நிலம் - இடப்பிறிதின் கிழமை
கண்ணனது நாள் - காலப் பிறிதின் கிழமை

## 32. ஏழாம் வேற்றுமை/ இட வேற்றுமை

இல், கண், இடம் முதலியன ஏழாம் வேற்றுமை உருபுகளாகும். இதன் பொருள் இடப் பொருளாகும். இதில் தற்கிழமை, பிறிதின் கிழமை என்ற இரண்டும் பொருள், இடம், காலம், திணை, குணம், தொழில் என்ற ஆறும் இடமாக வரும்.

1. மணியில் ஒலி - பொருள் இடமாயிற்று - தற்கிழமை
   மரத்தில் கிளி - பொருள் இடமாயிற்று - பிறிதின் கிழமை
2. ஊரில் வீடு - இடம் இடமாயிற்று - தற்கிழமை
   வானத்திற் குருவி - இடம் இடமாயிற்று - பிறிதின் கிழமை
3. வாரத்தில் நாள் - காலம் இடமாயிற்று - தற்கிழமை
   கோடையில் மாம்பழம் - காலம் இடமாயிற்று - பிறிதின் கிழமை
4. கையின் கண் விரல் - உறுப்பு இடமாயிற்று - தற்கிழமை
   கையின் கண் வளை - உறுப்பு இடமாயிற்று - பிறிதின் கிழமை
5. கருமையில் அழகு - குணம் இடமாயிற்று - தற்கிழமை
   இளமையில் வறுமை - குணம் இடமாயிற்று - பிறிதின் கிழமை
6. ஆட்டத்தில் அபிநயம் - தொழில் இடமாயிற்று - தற்கிழமை
   ஆட்டத்தில் பாட்டு - தொழில் இடமாயிற்று - பிறிதின் கிழமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏழன் உருபு கண்ணாதியாகும் :
பொருள் முதல் ஆறும் ஓர் இரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன் பொருள் என்ப"
-நன்னூல்

## 33. எட்டாம் வேற்றுமை - விளி வேற்றுமை

இதற்கென உருபுகள் எதுவும் இல்லை. பேசுவோன் படர்க்கையில் உள்ளோரை முன்னிலைப்படுத்தி அழைத்துப் பேசுவதே விளி வேற்றுமை எனப்படும். விளி ஏற்கும்போது திரிபடையாது நிற்பதற்கு உதாரணம் : தம்பி வா.

திரிபடைவதற்கு உதாரணம் :

கந்தன் - கந்தா - ஈறுகெட்டு 'த' விலுள்ள உயிர் நீண்டது.
- கந்தனே - ஏகாரம் தோன்றியது.

ஐயன் - ஐயா - ஈறுகெட்டு 'ய' விலுள்ள உயிர் நீண்டது.

மக்கள் - மக்காள் - ஈற்றயல் திரிதல்.

விளிப் பெயர்கள் முன்னிலையாரையும் படர்க்கையாரையுமே சுட்டிவருவன. எனவே தன்மைப் பெயர்கள் விளி ஏற்காமை இயல்பே. இவற்றுடன் வினாப் பெயர்களும், சுட்டுப் பெயர்களும் தான், தாம் முதலான படர்க்கை பெயர்களும் விளி ஏற்கா.

## 34. வேற்றுமை மயக்கம்

ஒரு வேற்றுமையின் உருபு நிற்கவேண்டிய இடத்தில் பிறிதொரு வேற்றுமை உருபு நிற்றல் வேற்றுமை மயக்கம் எனப்படும். இது இரண்டு வகைப்படும்.

1) பொருள் மயக்கம்
2) உருபு மயக்கம்

பொருள் மயக்கம் :

ஒரு வேற்றுமை உருபு தன் பொருளையும் உணர்த்திக் கொண்டு பிறிதொரு வேற்றுமைப் பொருளையும் உணர்த்துவது பொருள் மயக்கம் எனப்படும். உதாரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூணில் சார்ந்திருந்தான் - இங்கு இல் உருபு ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளை உணர்த்திற்று. சார்ந்திருப் பதற்கு தூண் கருவியாக அமையுமாயின் அது மூன்றாம் வேற்றுமைப் பொருளையும் உணர்த்தியது எனலாம்.

உருபு மயக்கம் :

ஒரு வேற்றுமை உருபு தன் பொருளை உணர்த்தாது பிறிதொரு வேற்றுமைப் பொருளை உணர்த்துவது உருபு மயக்கம் எனப்படும். உதாரணம்

தெருவால் போனான் : இங்கு 'ஆல்' உருபு மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருளை உணர்த்தவில்லை. ஆல் உருபு ஏழாம் வேற்றுமைக்குரிய இடப் பொருளையே உணர்த்தியது. போவதற்கு தெரு இடமாகவே இருந்தது.

## 35. ஆகுபெயர்

சொற்கள் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் தருவன. சொல்லின் இயல்பான பொருள் வெளிப்படைப் பொருள். அது ஒரு சொற்றொடரில் அமையும்போது முன்பின் உள்ள சொற்களின் தாக்கத்தினால் வேறு பொருள் தருவது குறிப்பு. இவ்வாறு ஒரு சொல் குறிப்பாக பொருள் தரும் முறை களில் ஆகுபெயரும் ஒன்று.

ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு சம்பந்தமுடைய வேறொரு பொருளுக்கு பெயராகித் தொன்றுதொட்டு வருவது ஆகுபெயராகும். ஒரு பெயர் தனியே நின்று ஆகுபெயராக முடியாது. கொண்டு முடியும் வினைச் சொற்களாலேயே குறிப்புப் பொருளைத் தந்து ஆகுபெயராகின்றது. ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

1. பொருளாகு பெயர் : தாமரை சூடினாள். இங்கு சூடினாள் என்ற வினையைக் கொண்டுதான் தாமரைப் பூ என்பது பெறப்படும். இங்கே முதற் பொருளின் பெயர் அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்ததால் பொருளாகு பெயராயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இடவாகு பெயர் : ஊர் சிரித்தது. ஊர் என்னும் இடப்பெயர் அங்குள்ள மக்களுக்கு ஆகி வந்துள்ளதால் இடவாகு பெயராயிற்று.

3. காலவாகு பெயர் : கார்த்திகை பூத்தது. கார்த்திகை என்னும் காலப் பெயர் அக்காலத்தில் பூக்கும் ஒரு பூவிற்கு ஆகி வந்தமையால் காலவாகு பெயராயிற்று.

4. சினையாகு பெயர் : வெற்றிலை நட்டான். வெற்றிலை என்னும் சினையின் பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வந்ததால் சினையாகு பெயராயிற்று.

5. குணவாகு பெயர் : வெள்ளை அடித்தான். வெள்ளை என்னும் குணப்பெயர் அந்நிறமுடைய சுண்ணாம்பிற்கு ஆகி வந்தமையால் குணவாகு பெயராயிற்று.

6. தொழிலாகு பெயர் : வற்றல் உண்டேன். வற்றல் என்னும் தொழிலின் பெயர் அத் தொழிலை உடைய உணவுக்கு ஆகி வந்தமையால் தொழிலாகு பெயராயிற்று.

7. எண்ணலளவை ஆகுபெயர் : ஒன்று கொடுத்தால் எல்லாம் சரிவரும். இங்கு ஒன்று என்னும் எண்ணுப் பெயர் அவ் அளவைக் கொண்ட அடிக்கு ஆகி வந்ததால் எண்ண லளவை ஆகு பெயராயிற்று.

8. எடுத்தலளவை ஆகுபெயர் : இரண்டு கிலோ வாங்கினேன். இங்கு கிலோ என்னும் எடுத்தல் அளவைப் பெயர் அந்நிறை யுள்ள பொருளுக்கு ஆகி வந்துள்ளதால் எடுத்தலளவை ஆகுபெயராயிற்று.

9. முகத்தலளவையாகுபெயர் : விளக்கெரிக்க ஒரு லீற்றர் போதும். இங்கு லீற்றர் என்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவுள்ள எண்ணெயைக் குறித்ததால் முகத்தலளவை ஆகுபெயராயிற்று.

10. நீட்டலளவையாகு பெயர் : இரு மீற்றர் சட்டைக்குப் போதும். இங்கு மீற்றர் என்னும் நீட்டலளவைப் பெயர் அதனொடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடைய துணியைக் குறித்ததால் நீட்டலளவை யாகுபெயராயிற்று.

11. சொல்லாகு பெயர் : இந்நூலுக்கு உரை செய்தான். இங்கு உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகி வந்தமையால் சொல்லாகு பெயராயிற்று.

12. தானியாகு பெயர் : விளக்கு முறிந்தது. விளக்கு என்னும் தானியின் பெயர் அதற்கு இடமாகிய தண்டுக்கு ஆகி வந்ததால் தானியாகு பெயராயிற்று. (தானி - இடத்திலுள்ள பொருள்)

13. கருவியாகு பெயர் : திருவாசகம் படித்தான். இதில் வாசகம் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலுக்கு ஆகி வந்தமையால் கருவியாகு பெயராயிற்று.

14. காரியவாகு பெயர் : அலங்காரம் கற்றான். அலங்காரம் என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்துவதற்கு கருவியான நூலுக்கு ஆகிவந்தமையால் காரியவாகு பெயராயிற்று.

15. கருத்தாவாகு பெயர் : கம்பனைப் படித்தான். கம்பன் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆகி வந்தமையால் கருத்தாவாகு பெயராயிற்று.

16. உவமையாகு பெயர் : காளை வந்தான். இங்கு காளை என்னும் உவமையின் பெயர் அதனைக் கொண்ட ஆடவனுக்கு ஆகி வந்தமையால் உவமையாகு பெயராயிற்று.

ஆகுபெயருக்கும் அன்மொழித் தொகைக்கும் இடையிலான வேறுபாடு.

இரண்டும் குறிப்பாக பொருள் உணர்த்துவதாயினும் அவற்றுக்கிடையே சில வேறுபாடுகள் உள்ளன.

1) ஆகுபெயர் ஒரு மொழியிடத்து அமையும். அன்மொழித் தொகை இரண்டு முதலிய பல சொற்களுடன் சேர்ந்து வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ-ம் : ஊர் சிரித்தது - ஆகு பெயர் (ஊர் ஒரு மொழி)

பொற்றாலி வந்தாள் - அன்மொழித் தொகை (பொற்றாலி - பொன் + தாலி)

2) ஆகுபெயர் அறுவகைப் பெயர் சம்பந்தமாக வரும். அன்மொழித்தொகை வேற்றுமைத் தொகை முதலான ஐந்தொகை வழியாகப் பிறக்கும்.

உ-ம் : ஊர் சிரித்தது - இடவாகு பெயர்

பொற்றாலி வந்தாள் - வேற்றுமைத் தொகையிடத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

3) ஆகுபெயர் பெரும்பாலும் நியதிப் பெயராய் வரும். அன் மொழித் தொகை நியதிப் பெயராய் வராது.

உ-ம் : வெள்ளை அடித்தான் - தொடர்பு நிரந்தரமானது. அதாவது நியதியானது.

சங்கு வளையல் இங்கே வா - இங்கு சங்கு வளையலுக்கும் அதனை அணிந்த பெண்ணுக்கும் உள்ள தொடர்பு நிரந்தரமானதல்ல.

4) ஆகுபெயர் தொன்றுதொட்டு வரும். அன்மொழித் தொகை யாதாயினும் ஒரு காரணம் பற்றி புதிது புதிதாக உண்டாக்கப் பட்டு வரும்.

## 36. இயற்சொல்

எவ்வித சிரமமும் முயற்சியும் இன்றி இயல்பாக பொருளை உணர்த்தும் சொல் இயற்சொல் எனப்பட்டது. ஒரு மொழி வழங்கும் நிலப்பரப்பில் குறிப்பிட்ட அம்மொழியில் ஒரு சொல் எப்பொழுதும் ஒரே பொருளையே குறிப்பிட்டால் அச் சொல் இயற்சொல் எனப்பட்டது.

இயற்சொல் பெயர், வினை, இடை, உரி நான்கோடும் சேர்ந்து பெயரியற் சொல், வினையியற் சொல், இடை இயற் சொல், உரியியற் சொல் என நான்கு வகைப்படும்.

பெயரியற் சொல் - மண், பொன்

வினையியற் சொல் - வந்தான், படித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையியற் சொல் - ஐ, ஆல்

உரியியற் சொல் - அழகு, இளமை

இயற் சொல் செந்தமிழ் நிலத்து வழக்கொடு பொருந்தியதாய் கொடுந்தமிழ் நிலத்தும் பொருள் வழுவாமல் உணர்த்துவதாகும். இதனை நன்னூலார் மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

"செந்தமிழாகித் திரியாது யார்க்கும்
தம் பொருள் விளக்கும் தன்மைய இயற்சொல்"
(நன் - 271)

## 37. திரிசொல்

பொருளில் திரியாமல் உருவத்தில் திரிந்த சொல் திரி சொல் என இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனை செய்யுள் ஆக்கச் சொல் என்றும் குறிப்பிடுவர். யாப்பிலக்கணத்தின் கடுமையான கட்டுப்பாட்டிற்குள் செய்யுள் வருவதால், ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களும், பல பொருளைக் குறிக்கும் ஒரு சொல்லும் அதிகம் வேண்டப் படுவதாயிற்று.

"ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும்
பல பொருள் குறித்த வொரு சொல்லாகியும்
அரிதுணர் பொருளன திரிவுசொல்லாகும்"
(நன் - 272)

என நன்னூலார் கூறுகின்றார்.

கிள்ளை, சுகம், தத்தை - கிளி என்னும் ஒரு பொருள் குறித்த பல பெயர்த் திரிசொல்.

வாரணம் என்பது சேசரி, சங்கு, யானை முதலாகிய பல பொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

## 38. வடசொல்

தமிழில் உருவம் பெற்ற ஆரியச் சொற்களே வட சொற்கள் என்பதை தெளிவாக தொல்காப்பியனார் புலப்படுத்தி யுள்ளார். தொல்காப்பியர் காலத்திலிருந்தே ஆரிய மொழிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கள் தமிழிற் கலந்தனவாயினும், தமிழ் ஒலி மரபை ஏற்று அதற்கேற்ற வகையில் உருவம் பெற்று தமிழில் கலந்தன. இவையே வடசொற்கள் எனப்படுகின்றன.

வடசொற்கள் இரு வகையாக பகுக்கப்பட்டுள்ளன.

வடசொல் தனக்குரிய உச்சரிப்போடு தமிழில் வந்து யாதொரு விகாரமும் இன்றி வழங்குவது தற்சமம் எனப்படும். (தத் + சமம் - அதற்குச் சமமானது)

அமலம், கமலம், காரணம்

வடசொல் தமிழ் நடைக்கு பொருந்த விகாரமடைந்து தமிழ் உச்சரிப்போடு தமிழில் வந்து வழங்குவது தற்பவம் எனப்படும். (தத் + பவம் - அதினின்று பிறந்தது)

சிறப்பெழுத்து திரிந்த எழுத்தால் வந்தன - பத்தி, முத்தி.

பொதுவும் சிறப்புமாகிய ஈரெழுத்தால் இயைந்தன - அரன், அரி, சலம்

வடசொல் தொடர்பாக நன்னூலார்,

"பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானும்
ஈரெழுத்தானு மியைவன வடசொல்"

(நன் – 274)

எனக் கூறியுள்ளார்.

## 39. திசைச்சொல்

நாகரிகம், தனிமனித செல்வாக்கு, குடியேற்றவாதம், மொழி வளம், உலக மயமாதல் போன்று பல்வேறு காரணங் களால் ஒவ்வொரு மொழியிலும் பிறமொழிச் சொற்கள் கலந்து விடுகின்றன. இவ்வாறு தமிழிற் கலந்துள்ள வேற்றுமொழிச் சொற்களே திசைச் சொற்கள் என அழைக்கப்படுகின்றன.

"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழ்மொழி நிலத்தினும்
நங்குறிப்பினவே திசைச் சொலெனப"

(நன் – 273)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும் பதினெட்டு மொழிகளிலே தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு நிலங்களிலுமுள்ளோர் திசைகளில் இருந்து கலந்துவந்த சொற்களே திசைச் சொற்கள் எனப்படும். இன்று வரை தமிழில் கலந்துள்ள திசைச் சொற்கள் சில வருமாறு.

அரேபியா - கோப்பி, தகவல்

ஆங்கிலம் - பென்சில், சீமெந்து

இந்தி - கோடி, ஆசாமி

போர்த்துக்கேயம் - அலுமாரி, சப்பாத்து

ஒல்லாந்தம் - இலாச்சி, உலாந்தா

பிரெஞ்சு - குசினி, பீரோ

மராட்டி - அட்டவணை, சாவடி

பாரசீகம் - சர்க்கார், சிப்பந்தி

## 40. இடைச் சொல்

வாக்கியத்தில் பெயர், வினைகளைப் போல தனித்து நின்று பொருள் தராது பெயரோடும் வினையோடும் சார்ந்து நின்று பொருள் தருவனவே இடைச் சொற்களாகும். பெயர் வினைச் சொற்களுடன் சேர்ந்து தொடர்களை அமைக்க உதவும் எழுத்தோ சொல்லோ அனைத்தும் இடைச் சொற்கள் என்று கூறப்படுகின்றன.

"இடை யெனப்படுப பெயரொடும் வினையொடும்
நடை பெறலியலும் தமக்கியல் பிலவே"

எனத் தொல்காப்பியம் இடைச் சொல்லின் இயல்பை எடுத்துக் கூறுகின்றது.

இடைச் சொற்களைப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நன்னூலார் எண்வகைப்படுத்துவார்.

1) வேற்றுமை உருபுகள்
2) கால இடைநிலைகளும் விகுதிகளும்
3) சாரியைகள்
4) உவமை உருபுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) தத்தம் பொருள் உணர்த்துவன (உ-ம் ஏ, ஓ ஆகியன)
6) ஒலிக்குறிப்பு இடைச் சொற்கள்
7) இசை நிறைப்பன
8) அசை நிறைகள்

இடைச் சொல் இல்லாமல் மொழிப் பயன்பாடு இல்லை என்று சொல்லுமளவிற்கு இவை முக்கியமானவை.

## 41. உரிச்சொல்

பெயரோடும் வினையோடும் சேர்ந்து நின்று பெயர் குறிக்கும் பொருளுக்குரிய பண்பையும், வினை குறிக்கும் தொழிலுக்குரிய பண்பையும் விளக்கும் சொற்களே உரிச் சொற்களாகும். பொருளுக்கு உரிமை பூண்டு நிற்கும் பண்பை உணர்த்துவதாகும். இவ்வுரிச் சொற்கள் ஒரு குணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி வருவதாகும்.

ஒரு குணத்தைக் காட்டும் உரிச்சொற்கள் - சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பன, மிகுதி என்னும் ஒரு குணத்தை உணர்த்துவன.
சாலச் சிறந்தது (மிகச் சிறந்தது)
உறு புனல் (அதிக நீர்)
தவ மேன்மை (மிக்க மேன்மை)
நனி பேதை (பெரு மடையன்)
கூர் இருள் (மிக்க இருள்)
கழி பேருவகை (மிகப் பெருமகிழ்ச்சி)

ஒரு சொல் பல குணம் உணர்த்துவதற்கு உதாரணம்:

| | |
|---|---|
| கடி நகர் - காவல் | கடி வாள் - கூர்மை |
| கடி மலர் - வாசனை | கடி முரசு - ஒலி |
| கடிப்பேய் - அச்சம் | |

உரிச் சொல் தொடர்பாக நன்னூலார்,

“பல்வகைப் பண்பும் பகர் பெயராகி
ஒரு குணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட்குரியன உரிச்சொல்”

என்று கூறுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையியல்

## தெரிநிலை வினை

"வினை யெனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்"

என்று தொல்காப்பியம் வினைச்சொல் பற்றி கூறுகின்றது. வினைச் சொல் காலம் காட்டும். காலத்தை வெளிப்படையாக உணர்த்துவதே தெரிநிலை வினையாகும்.

பெரும்பாலும் தெரிநிலை வினைச்சொற்கள் இடைநிலைகள் கொண்டே காலத்தை உணர்த்துகின்றன.

உண்டான் - உண் + ட் + ஆன் - இதில் 'ட்' என்பது இறந்தகால இடைநிலை.

உண்கின்றான் - உண் + கின்று + ஆன் - இதில் 'கின்று' என்பது நிகழ்கால இடைநிலை.

உண்பான் - உண் + ப் + ஆன் - இதில் 'ப்' என்பது எதிர்கால இடைநிலை.

தெரிநிலை வினைகள் சில சமயங்களில் பகுதி ஒற்று இரட்டித்து இறந்த காலத்தை மட்டும் காட்டுவதும் உண்டு. உதாரணமாக,

பெறு - பெற்று - பெற்றான்
தொடு - தொட்டு - தொட்டான்
நகு - நக்கு - நக்கான்

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அஃறிணை வினைமுற்றுக்கள் சில விகுதியால் காலம் காட்டவல்லன.

உண்ணும் - உண் + உம் - இதில் 'உம்' என்பது எதிர்காலம் காட்டும் விகுதியாகும்.

## குறிப்பு வினை

செயலும் காலமும் வெளிப்படையாக தெரிய நிற்கும் வினைச் சொல் தெரிநிலை வினை எனப்படும்.

உ - ம் : செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலையும் காலத்தையும் குறிப்பாக உணர்த்தும் சொல் குறிப்பு வினையாகும். உ-ம் செல்வன்.

(இவன்) செல்வமுடையவனாய் இருந்தான் - செல்வன்

(இவன்) செல்வமுடையவனாக இருக்கின்றான் - செல்வன்

(இவன்) செல்வமுடையவனாய் இருப்பான் - செல்வன்

இங்கு செல்வன் என்ற சொல்லுக்குள் உடைமையோடு இருத்தல் என்ற செயலும் அதற்குரிய காலங்களும் அடங்கியுள்ளன. பெயரடியாகப் பிறந்து வினையிலிருந்து அறியக்கூடிய செயலும் காலமும் குறிப்பாக அறியக் கிடப்பதால் குறிப்பு வினையாயிற்று.

குறிப்பு வினைகள் பெயரடிகளுடன் வினை முதல் விகுதிகள் சேர்ந்து அமைகின்றன. அதிலும் கூடுதலாக பண்புப் பெயரடி களில் இருந்தே குறிப்பு வினைகள் பிறக்கின்றன. உ-ம் வல்லன், நல்லன், அல்லன். குறிப்பு வினைகள் முக்காலத்திற்கும் பொதுவானது.

> "பொருள் முதல் ஆறிலும் தோற்றி முன் ஆறனுள்
> வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே"
>
> (நன்-வினை - 2)

என்று நன்னூலார் குறிப்பிடுகின்றார்.

## தெரிநிலை - குறிப்பு வினை வேறுபாடு

நன்னூலார் கருத்துப்படி வினைச்சொற்கள் யாவும் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆறையும் உணர்த்த குறிப்பு வினை செய்பவனை மட்டுமே உணர்த்துகின்றது.

உ-ம் : உண்டான் - தெரிநிலை வினை

செய்பவன் - அவன்

கருவி - உண்பதற்குப் பயன்பட்ட கருவி

நிலம் - உண்ட இடம்

செயல் - உண்ணுதல்

காலம் - இறந்தகாலம்

செய்பொருள் - உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு வினை - செல்வன் - இதில் வினை முதலுக்கான விகுதி கொண்டு கருத்தாவை மட்டுமே அறியமுடிகின்றது. தெரிநிலை வினைகள் வெளிப்படையாக கால இடைநிலை பெற்று கால முணர்த்தும்.

உண்டான் - ட் - இறந்தகால இடைநிலை

உண்கின்றான் - இன்று - நிகழ்கால இடைநிலை

உண்பான் - ப் - எதிர்கால இடைநிலை

குறிப்பு வினைகள் சொல்லுவோனுடைய குறிப்பைப் பொறுத்து காலம் உணரமுடிகின்றது.

(இவன்) செல்வமுடையவனாய் இருந்தான் - செல்வன்

(இவன்) செல்வமுடையவனாய் இருக்கின்றான் - செல்வன்

(இவன்) செல்வமுடையவனாய் இருப்பான் - செல்வன்

தெரிநிலை வினைகள் பெரும்பாலும் வினையடியாகவே பிறக்கும். குறிப்பு வினைகள் பெயரடியாகவே பிறக்கும்.

உ - ம் : நடந்தான், வந்தான் - தெரிநிலை வினை

நல்லன், வல்லன், அரிது - குறிப்பு வினை

தற்காலத்தில் குறிப்பு வினைகளை பெயர்ப் பயனிலை என்று கூறுவர்.

## பெயரெச்சம்

திணை, பால், எண், இட விகுதி பெறாத குறை வினைச் சொற்கள் எச்சம் என்று அழைக்கப்படும். இந்த எச்சவினை பெயரைக் கொண்டு முடிந்தால் அது பெயரெச்சம் எனப்படும். ஆகவே பெயரெச்சம் செயலையும் காலத்தையும் காட்டும் என்பது பெறப்படும். பெயரெச்சங்கள் அ, உம் என்ற இரண்டு விகுதி களைப் பெற்றுவரும்.

பெயரெச்சம் பின்வரும் வகையில் ஆக்கப்படும்.

இறந்தகாலப் பெயரெச்சம் :

வினைப் பகுதியுடன் இறந்த கால இடைநிலையும் 'அ'கர விகுதியும் பெற்று வரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய் + த் + அ - செய்த

உண் + ட் + அ - உண்ட

ஓடு + இன் + அ - ஓடின

சில இறந்த காலப் பெயரெச்சம் இடைநிலை பெறாது பகுதி இரட்டித்து காலம் காட்டுவதும் உண்டு.

தொடு - தொட்ட

பெறு - பெற்ற

விடு - விட்ட

*நிகழ்காலப் பெயரெச்சம் :*

விளைப் பகுதியுடன் நிகழ்கால இடைநிலையும் 'அ'கர விகுதியும் பெற்று வருவன.

செய் + கின்று + அ - செய்கின்ற

செய் + கிறு + அ - செய்கிற

*எதிர்காலப் பெயரெச்சம் :*

வினைப் பகுதியுடன் 'உம்' என்ற விகுதி நேரடியாக இணைந்து எதிர்காலத்தை உணர்த்தும்.

செய் + உம் - செய்யும்.

## தெரிநிலை வினைமுற்று

பிறிதொரு சொல்லை எஞ்சி நிற்காமல் பொருள் முடிவை உணர்த்தி, காலத்தை வெளிப்படையாக காட்டுவது தெரிநிலை வினைமுற்று எனப்படும். இது ஒரு வாக்கியத்தில் பயனிலை யாகவே வரும். தெரிநிலை வினைமுற்றின் அமைப்பில் மூன்று கூறுகள் காணப்படும்.

i. வினையடி

ii. கால இடைநிலை

iii. திணை பால் எண் இட விகுதி

உதாரணம் : உண்டான் - உண் + ட் + ஆன்

தெரிநிலை வினைமுற்று இட அடிப்படையில் மூன்று பிரிவுக்குள் அடக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. தன்மை வினைமுற்று
ii. முன்னிலை வினைமுற்று
iii. படர்க்கை வினைமுற்று

தன்மை வினைமுற்று :

ஒருமையில் 'ஏன்' விகுதியையும் பன்மையில் 'ஓம்' விகுதியையும் பெற்று வருவதே தற்கால வழக்காகும்.

நடந்தேன் - ஏன் விகுதி
நடந்தோம் - ஓம் விகுதி

முன்னிலை வினைமுற்று :

ஒருமையில் 'ஆய்' விகுதியும் பன்மையில் 'ஈர்கள்' விகுதியும் பெற்று தற்காலத்தில் வழங்கி வருகின்றன.

நடந்தாய் - ஆய் விகுதி
நடந்தீர்கள் - ஈர்கள் விகுதி

படர்க்கை வினைமுற்று :

உயர்திணையில் அன், ஆன், அள், ஆள், அர், ஆர் விகுதி பெற்றுவரும்.

நடந்தான் - ஆன் விகுதி
நடந்தாள் - ஆள் விகுதி
நடந்தார் - ஆர் விகுதி

அஃறிணையில் து, று, அ விகுதி பெற்று வரும்.

ஓடியது - து விகுதி
ஓடின - அ விகுதி

தமிழில் தெரிநிலை வினைமுற்றுக்களின் எண்ணிக்கை இருபத்தேழு என தமிழ் இலக்கண நூல்கள் கூறும்.

## எதிர்மறை வினைமுற்று

செயல் நிகழ்வதைக் குறிப்பது உடன்பாட்டு வினைமுற்று. செயல் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை வினைமுற்று.

செய்தான் - உடன்பாட்டு வினைமுற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திலன்
செய்யவில்லை
செய்யான்
செய்யமாட்டான்

} செய்தான் என்பதன் எதிர்மறை வடிவங்கள்

பழந்தமிழில் அல், இல், ஆ என்பன எதிர்மறை இடைநிலைகளாக பயின்றுவந்தன. தற்காலத்தில் 'அல்' என்பது வழக்கொழிந்த வடிவமாகும்.

செய்திலன் - செய் + த் + இல் + அன்
செய்யான் - செய் + ஆ + ஆன்

தற்காலத்தில் ஆத், மாட்டு என்ற இடைநிலைகள் எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றன.

செய் + ஆத் + ஏ - செய்யாதே

'மாட்டு' என்ற எதிர்மறை இடைநிலை வடிவத்தில் வரும்போது சில மாற்றங்களை அவதானிக்கலாம்.

உ-ம் : அடிச்சொல் செயவென் வாய்பாட்டில் அமையும்.

செய்ய + மாட்டு + ஏன் - செய்யமாட்டேன்.

இல்லை என்ற வினைக்குறிப்பு தற்காலத்தில் பெரு வழக்காக உள்ளன.

உ-ம் : செய்தான் - செய்யவில்லை
படித்தான் - படிக்கவில்லை

## எதிர்மறைப் பெயரெச்சம்

செயல் நிகழ்வதைக் காட்டுவது உடன்பாடு. அது நிகழாமையை உணர்த்துவது எதிர்மறை. எதிர்மறைப் பெயரெச்சம் பின்வருமாறு ஆக்கப்படும்.

வினைப்பகுதி + எதிர்மறை இடைநிலை + 'அ' விகுதி என்ற அமைப்பினைப் பெற்று ஆக்கப்படும்.

செய் + ஆ + அ - செய்யாத (தகர மெய் எழுத்துப் பேறு)
உண் + ஆ + அ - உண்ணாத (தகர மெய் எழுத்துப் பேறு)

தற்கால மொழியியலாளர் 'ஆத்' என்ற எதிர்மறை இடைநிலை பெற்று எதிர்மறைப் பெயரெச்சம் ஆக்கப்படும் என்பர்.

செய் + ஆத் + அ - செய்யாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில சந்தர்ப்பங்களில் தகர எழுத்துப் பேற்றை இழந்தும் எதிர்மறைப் பெயரெச்சம் அமைவதுண்டு.

வாடாத மலர் - வாடாமலர்

அஞ்சாத நெஞ்சம் - அஞ்சா நெஞ்சம்

இதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர்.

## குறிப்பு வினைப் பெயரெச்சம்

பண்புப் பெயர்களும் சினைப் பெயர்களும் 'அ' விகுதியோடு புணர்ந்து குறிப்பு வினைப் பெயரெச்சங்கள் தோன்றும். முற்று விகுதி பெறாத குறை குறிப்பு வினைமுற்றுக்கள் பெயரோடு முடிவுறும்போது குறிப்பு வினைப் பெயரெச்சம் என்பர்.

உ-ம் : கரிய குயில், பெரிய யானை, அரிய செல்வம், நல்ல பிள்ளை

## எதிர்மறை குறிப்பு வினைப் பெயரெச்சம்

அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றி ஆகாரச் சாரியையும் தகர எழுத்துப் பேற்றோடு கூடிய அகர விகுதியையும் பெற்று வரும்.

அல் + ஆ + அ - அல்லாத (தகர மெய் எழுத்துப்பேறு)

இல் + ஆ + அ - இல்லாத (தகர மெய் எழுத்துப்பேறு)

## வினை எச்சம்

திணை, பால், எண், இட விகுதி பெறாத வினைக் குறைச் சொல் வினையுடன் முடிந்தால் அது வினையெச்சம் எனப்படும்.

உ - ம் : நடந்து போனான்.

வினையுடன் முடியும் வினைக்குறைச் சொல்லாகிய வினையெச்சம் செயலையும் காலத்தையும் தெளிவாகக் காட்டுகின்றது. கால அடிப்படையில் வினையெச்சங்களை பகுத்து வாய்பாடு கூறுவார் நன்னூலார்.

"செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான் பான் பாக்கின வினையெச்சம் பிற
ஐந்தொன்றாறு முக்காலமு முறைதரும்"

(நன் - வினை - 5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பிரகாரம்;

இறப்பு : செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென.

நிகழ்வு : செய

எதிர்வு : செயின், செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு.

இவற்றுள் செய்து, செய, செயின் (செய்தால்) என்ற மூன்றுமே வழக்கில் உள்ளன.

செய்து எச்சம் ஆகுமாறு :

1) வினைப் பகுதியுடன் இறந்தகால இடைநிலைகளில் ஒன்றினைப் பெற்று 'உ'கர விகுதியுடன் ஆக்கப்படும்.
உண் + ட் + உ - உண்டு
கல் + ற் + உ - கற்று
செய் + த் + உ - செய்து

2) சில வினைப் பகுதிகளுடன் குறிப்பாக குற்றியலுகர, முற்றியலுகரப் பகுதிகளுடன் 'இ'கர விகுதி சேர்ந்தும் ஆக்கப்படும்.
ஓடு + இ - ஓடி
பாடு + இ - பாடி
மருவு + இ - மருவி

3) தனி நெடில் ஏவற் பகுதி 'ய' கர மெய் பெற்று வினையெச்சமாவது உண்டு.
உ-ம் : போ + ய் - போய்

4) கு, டு, று என்னும் எழுத்துக்களை இறுதியாக கொண்ட குறிலிணைப் பகுதிகள் ஒற்று இரட்டித்து வினை எச்சமாகின்றன.
புகு - புக்கு
பெறு - பெற்று
தொடு - தொட்டு

## செய்ய என்ற வினையெச்சம்

வினைப் பகுதியுடன் அகர விகுதி சேர்வதால் இவ்வெச்சம் ஆக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண் + அ - காண (இயல்பு)

உண் + அ - உண்ண (ஈற்றுமெய் இரட்டித்தது)

ஓடு + அ - ஓட

## செயின் என்னும் வினையெச்சம் : (செய்தால்)

இவ் வினையெச்சம் வினையடியுடன் இறந்தகால இடை நிலைகளில் ஒன்றினைப் பெற்று 'ஆல்' விகுதி சேர்ந்து ஆக்கப்படு கின்றது. இவ்வினையெச்சம் இறந்த கால இடைநிலையைப் பெற்றிருந்தாலும் எதிர்காலப் பொருளையே உணர்த்துகின்றது.

செய் + த் + ஆல் - செய்தால்

ஓடு + இன் + ஆல் - ஓடினால்

உண் + ட் + ஆல் - உண்டால்

இவ்வினையெச்சம் இன்று செய்தால் என்ற வினை எச்சமாகவே வழங்கப்படுகின்றது.

## எதிர்மறை வினையெச்சம்

தொழில் நிகழாமையை புலப்படுத்தும் வினை எச்சம் எதிர் மறை வினை எச்சம் எனப்படும். தற்கால வழக்கில் இவ் வினை எச்சம் 'உ', 'மல்' ஆகிய இரு விகுதிகளுடன் மட்டுமே வழக்கில் உள்ளது. எதிர்மறை வினையெச்சம் பின்வருமாறு ஆக்கப்படும்.
வினையடி + எதிர்மறை இடைநிலை + 'உ' விகுதி அல்லது மல் விகுதி

செய் + ஆத் + உ - செய்யாது (செய்து என்பது உடன்பாடு)
உண் + ஆத் + உ - உண்ணாது (உண்டு என்பது உடன்பாடு)
செய் + ஆ + மல் - செய்யாமல்
உண் + ஆ + மல் - உண்ணாமல்

செய்தால் என்ற வாய்பாட்டு வினையெச்சம் தற்காலத்தில் 'விட்டால்' என்ற எதிர்மறை நிபந்தனை வினையெச்ச விகுதி பெற்று ஆக்கப்படுகின்றது.

உ-ம் : நடந்தால் - நடக்காவிட்டால்

படித்தால் - படிக்காவிட்டால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்பு வினையெச்சம்

பண்புப் பெயரின் அடியாகத் தோன்றி அகர விகுதியைப் பெற்று வருவன குறிப்பு வினையெச்சமாகும்.

உ-ம் : மெல்ல நடந்தான்.

தற்கால வழக்கில் குறிப்பு வினைமுற்றுக்கள் ஆய் விகுதி பெற்று குறிப்பு வினையெச்சமாக வழங்கிவருகின்றது.

நன்று, அரிது, எளிது என்பன குறிப்பு வினைமுற்றுகள்.

நன்றாய் பேசினான்

எளிதாய் இருந்தது

அரிதாய் முடிந்தது

இவை குறிப்பு வினை எச்சங்களாகும். இவற்றினை வினையடை என்று சொல்லும் வழக்கம் இன்று உள்ளது.

## எதிர்மறை குறிப்பு வினையெச்சம்

அல், இல் என்னும் எதிர்மறைகளை பகுதிகளாகக் கொண்டு உ, மல், பே போன்ற விகுதிகளைப் பெற்றுவரும்.

உ-ம் : அல்லாது, அல்லாமல், இல்லாது, இல்லாமல்

அல் + ஆ + த் + உ - அல்லாது (தகர மெய் எழுத்துப் பேறு)

இல் + ஆ + மல் - இல்லாமல்

## ஏவல் வினைமுற்று

முன்னிலையில் உள்ள ஒருவரை அல்லது பலரை ஒரு செயலை செய்யும்படி அல்லது செய்யாமல் இருக்கும்படி சொல்வதற்கு பயன்படும் வினை வடிவமே ஏவல் வினை எனப்படும். முன்னது உடன்பாட்டு ஏவல் வினை, பின்னது எதிர்மறை ஏவல். இது கட்டளைப் பொருளில் வரும் வினைமுற்று. இது ஏவல் ஒருமை என்றும் ஏவல் பன்மை என்றும் இரு வகைப்படும்.

ஏவல் ஒருமை வினைமுற்று

ஏவல் பன்மை வினைமுற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏவல் ஒருமை வினைமுற்று**

வினையடிகளும் வினையடிகளுடன் ஆய், இ என்னும் விகுதிகளைப் பெற்றும் ஏவல் ஒருமை வினைமுற்று வரும்.

உ-ம்: நட, வா என்பன வினையடியாக நின்றன.

வாராய், கூறுதி என்பன ஆய், இ விகுதி பெற்று வந்தன.

**எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று**

எதிர்மறை இடைநிலைகளைப் பெற்று 'ஏ' என்னும் விகுதி பெற்று வரும்.

உ-ம் : உண்ணாதே, போகாதே.

**ஏவல் பன்மை வினைமுற்று**

இது பழங்காலத்தில் மின், உம், ஈர் என்னும் விகுதிகளைப் பெற்று வந்தது.

உ-ம் : உண்மின், உண்ணும், உண்ணீர்.

தற்காலத்தில் ங்கள், உங்கள் என்னும் விகுதிகளைப் பெற்று வருகின்றது.

உ-ம் : போங்கள், உண்ணுங்கள், நில்லுங்கள்.

**எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று**

இது எதிர்மறை இடைநிலை பெற்று ஈர், ஈர்கள் என்னும் விகுதிகளைப் பெற்று வரும்.

உ-ம் : உண்ணாதீர், உண்ணாதீர்கள்.

**வியங்கோள் வினைமுற்று**

வியம் என்பது ஏவல் எனவும், கோள் என்பது கொள்ளுதல் என்பதையும் குறிப்பதால் வியங்கோள் வினையை மரியாதை ஏவல் வினை என்றும் கூறுவர்.

வினை அடியுடன் க, இய, இயர் ஆகிய விகுதிகளைப் பெற்று வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டிக் கோடல் என்னும் பொருளை உணர்த்தி வருவது வியங்கோள் வினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க, வளர்க - வாழ்த்துதற் பொருள்
வீழ்க, ஒழிக - வைதற் பொருள்
செய்க, எழுதுக - விதித்தல் பொருள்
அருள்க, உண்க - வேண்டிக் கோடற் பொருள்.

பால் காட்டும் விகுதியையோ, ஒருமை பன்மை விகுதியையோ இது பெற்றுக்கொள்ளாததால் இது இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவானது எனலாம்.

தற்காலத்தில் இய, இயர் என்னும் விகுதிகள் செய்யுள் வழக்கில் மட்டுமே உள்ளன. இன்று 'அட்டும்' என்னும் சொல் வினையடியோடு சேர்ந்து வியங்கோள் வினையாக வருகின்றது.

வாழ்க : வாழட்டும், பொழிக : பொழியட்டும் என தற்கால வழக்கில் பயின்று வருகின்றன.

## ஏவல் - வியங்கோள் வேறுபாடு

ஏவல் வினையின் மரியாதை வடிவமே வியங்கோள் வினையாகும். எனினும் இரண்டிற்கும் இடையே வேறுபாடுகள் சில உள்ளன.

1) ஏவல் வினைமுற்று கட்டளைப் பொருளில் மட்டும் வரும்.
உ-ம் : தம்பி, இங்கே வா.
இதில் 'வா' என்பது கட்டளைப் பொருளாகும்.

வியங்கோள் வினைமுற்று வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டிக் கோடல் என்னும் பொருள்களிலும் வரும்.

நாடு வாழ்க - வாழ்த்துதல்
தீமைகள் ஒழிக - வைதல்
விரைந்து கூறுக - விதித்தல்
உதவி புரிக - வேண்டிக்கோடல்

2) ஏவல் வினைமுற்று ஒருமையிலும் வரும். பன்மையிலும் வரும்.
உ-ம் : தம்பி, வா - ஒருமை
மக்களே வாருங்கள் - பன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியங்கோள் வினைமுற்றில் ஒருமை பன்மை வேறுபாடற்றது.

நீ வாழ்க

நீங்கள் வாழ்க

3) ஏவல் வினை முன்னிலை இடத்திற்கு மட்டுமே உரியது. ஆனால் வியங்கோள் வினை இரு திணை ஐம்பால் மூவிடங் களுக்கும் பொதுவானது.

நீ வாழ்க

நாங்கள் வாழ்க

அவர்கள் வாழ்க

## தனி வினை, கூட்டு வினை

வினையடிகளை அடிப்படையாக வைத்து வினைச் சொற்கள் தனிவினை, கூட்டுவினை என வகைப்படுத்தலாம்.

## தனி வினை

தனியாக ஒரு சொல் நின்று வினைச்சொல்லாக வருமானால் அது தனி வினை எனப்படும். பொதுவாக பகாப்பதமாக அமையும் வினையடிகளை தனிவினை என்று கூறலாம்.

வா, போ, இரு, நில்

போன்றவை தனிவினைகளாகும்.

## கூட்டு வினை

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து நின்று வினைச்சொல்லாக வருமானால் அது கூட்டுவினை எனப்படும். கூட்டு வினையடிகள் கொண்ட வினைச் சொற்கள் கூட்டு வினை எனப்படும்.

ஆசைப்படு, தந்தியடி, கைவிடு

போன்றவை கூட்டு வினைகளாகும்.

## கூட்டுவினை ஆக்கம்

கூட்டு வினைகள் பல்வேறு வகைகளில் உருவாக்கம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பெயரும் சில வினைகளும் சேர்ந்து வரல்.

தந்தியடி, தோல்வியடை, துப்பறி, உத்தரவிடு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

2. வினையுடன் வினை சேர்ந்து வரல்.

கண்டுபிடி, விட்டுக்கொடு, தட்டிக்கேள் போன்றவற்றை உதாரணம் காட்டலாம்.

3. இடைச் சொற்களுடன் வினை சேர்ந்து வரல்.

முன்னேறு, பின்தங்கு, பின்பற்று, சரிக்கட்டு போன்றவற்றை உதாரணம் காட்டலாம்.

## செயப்படு பொருள் குன்றிய வினை, குன்றா வினை

வாக்கியத்தில் செயப்படு பொருளை ஏற்றுவராத வினை செயப்படுபொருள் குன்றிய வினையாகும். வா, போ, நில் போன்ற வினைகள் செயப்படு பொருளை ஏற்பதில்லை.

கண்ணன் வந்தான்

கண்ணன் போனான்

கண்ணன் நின்றான்

செயப்படு பொருளை அதாவது ஐ வேற்றுமை உருபை ஏற்கும் எல்லா வினைகளும் செயப்படு பொருள் குன்றா வினைகளாகும்.

கண்ணன் இராமனை அடித்தான்

கண்ணன் பாடம் படித்தான்

கண்ணன் படம் பார்த்தான்

## தன்வினை - பிறவினை

ஒரு செயலை எவருடைய இயக்குதலும் இன்றி தானே செய்வதாயின் அது தன்வினை எனப்படும். கருத்தா தானே செய்கின்ற வினை தன்வினை எனப்படும். தானே செய்தல் என்பது செயலின் பயன் செய்தவனையே சென்று சேரவேண்டும்.

கண்ணன் உணவை உண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு செயலைச் செய்பவரும் செயலின் பயனை அடைபவரும் கண்ணன் என்பது குறிப்பிடத்தக்கது.

செயலின் பயன் செய்தவனைச் சாராது பிறிதொன்றினைச் சேருமாயின் அது பிறவினை எனப்படும்.

கண்ணன் குழந்தைக்கு உணவை ஊட்டினான்.

இங்கு உணவை ஊட்டியது கண்ணன். ஆனால் அச் செயலின் பயனை அடைந்தது கண்ணன் அன்று. உண்டது குழந்தையே யன்றி கண்ணன் அல்ல. பிறவினையை இதனால் இயக்கு வினை என்பர்.

## தன்வினையிலிருந்து பிறவினை ஆக்கப்படுதல்

பிறவினைகள் பொதுவாக செயப்படு பொருளை ஏற்று வரும் வினைகளாகவே அமைகின்றன.

தன்வினை பிறவினையாக மாறும்போது அந்த மாற்றத்தை உணர்த்த அதனோடு ஏதேனும் ஓர் எழுத்துச் சேர்கிறது. இதனைப் பிறவினை விகுதி என்பர் இலக்கண நூலார்.

எடுத்துக்காட்டு :

| தன்வினை | பிறவினை | விகுதி |
|---|---|---|
| செய் | செய்வி | வி |
| கல் | கற்பி | பி |
| போ | போக்கு | கு |
| நட | நடத்து | து |
| காய் | காய்ச்சு | சு |
| சுருள் | சுருட்டு | டு |
| எழு | எழுப்பு | பு |
| பயில் | பயிற்று | று |

தன்வினையில் உள்ள மெல்லொற்றுகள் வல்லொற்றுக்களாக மாறி பிறவினைகள் அமைவது உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு :

| தன்வினை | பிறவினை |
|---|---|
| அழுந்து | அழுத்து |
| நீங்கு | நீக்கு |
| திரும்பு | திருப்பு |

சில தன்வினைகள் பிறவினைகளாக மாறும்போது வல்லொற்று இரட்டிப்பதும் உண்டு.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| உருகு | உருக்கு |
| கூடு | கூட்டு |
| ஓடு | ஓட்டு |
| ஆகு | ஆக்கு |

வினையடி விகாரப்படாமல் காலம்காட்டும் இடைநிலைகளைப் பெற்றும் பிறவினை ஆக்கப்படுகின்றது.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| கெட்டான் | கெடுத்தான் |
| விட்டான் | விடுத்தான் |

**காரண வினை**

பிறவினை வடிவங்களில் சிலவற்றைத் தற்கால மொழியியலாளர் காரணவினை என வகைப்படுத்தியுள்ளனர். ஒருவன் காரணமாக இருந்து மற்றொருவனைக் கொண்டு ஒரு தொழிலை செய்யச் செய்வதைக் குறிக்கும் வினையே காரணவினை என்று கூறுவர்.

தம்பி பானையை நிலத்தில் உருட்டுவித்தான்.

இவ்வாக்கியத்தில் எழுவாயாக இருக்கும் தம்பி அடிப்படை வினையாக உள்ள உருளுதலை செய்யவில்லை. ஆனால் பானை உருளுவதற்கு காரணமாகவே உள்ளான். காரணவினை, வி, பி, விப்பி முதலான விகுதிகளாலும், செய், வை, பண்ணு முதலான துணை வினைகளாலும் ஆக்கப்படுகின்றன.

செய் + வி - செய்வி - செய்வித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடு + பி - எடுப்பி - எடுப்பித்தான்
செய் + விப்பி - செய்விப்பி - செய்விப்பித்தான்
ஓடப்பண்ணு - ஓடப்பண்ணினேன்
படிக்கவை - படிக்கவைத்தான்
ஓடச்செய் - ஓடச்செய்தான்

**செய் வினை - செயப்பாட்டு வினை**

செய்பவனுக்கு முதன்மை அளிக்கும் வினை செய்வினை எனப்படும். பொதுவாக எழுவாயை கருத்தாவாகக் கொள்ளும் வினை செய்வினை எனப்படும்.

தம்பி கதவை மூடினான்.

இங்கு எழுவாயாகி நின்ற தம்பியே செயலை செய்பவனாக இருப்பதால் இது செய்வினை எனப்படும்.

செயப்படு பொருளுக்கு முதன்மை அளிக்கும் வினையை செயப்பாட்டு வினை என்று கூறலாம். செயப்படு பொருளை எழுவாயாக கொள்ளும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.

கதவு தம்பியால் மூடப்பட்டது.

இவ் வாக்கியத்தில் அவதானிக்கப்பட வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

செய்வினையில் செய்பவன் எழுவாயாக வரும். செயப்பாட்டு வினையில் செய்யப்படுபவன் எழுவாயாக இருக்கும்.

பயனிலையாக வரும் வினையின் குறையெச்சத்துடன் (செய என்ற வாய்பாட்டு வினை எச்சம்) படு, பெறு போன்ற துணை வினைகள் இணைந்து செயப்பாட்டு வினை ஆக்கம் பெறும்.

கதவு தம்பியால் மூடப்பட்டது.

சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றது.

கோவலன் பொற்கொல்லனால் கொலையுண்டான்.

**செய்வினையிலிருந்து செயப்பாட்டு வினைக்கு மாறும்போது ஏற்படும் நிகழ்வுகள்**

செய்வினை வாக்கியத்தில் செயப்படு பொருளாக நிற்கும் சொல், செயப்பாட்டு வினை வாக்கியத்தில் எழுவாயாக மாறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வினையில் எழுவாயாக நிற்குஞ் சொல் செயப்பாட்டு வினையில் மூன்றாம் வேற்றுமைக்குரிய 'ஆல்' உருபு ஏற்கும்.

செயப்படு பொருள் எழுவாயாக மாறுவதால் பயனிலையும் அதற்கேற்ப மாறும். அப்போது பயனிலையாக அமையும் வினைமுற்றுடன் படு, பெறு போன்ற துணைவினைகள் சேர்ந்து வரும்.

செயப்பாட்டு வினையில் பயனிலையாக அமையும் வினைச் சொல்லின் அடிச்சொல் செய என்ற வாய்பாட்டு வினை எச்ச வடிவில் இருக்கும்.

கதவு தம்பியால் மூடப்பட்டது (மூட + படு + அது)

## துணை வினை

கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை உணர்த்தாது வேறு இலக்கணப் பொருள் தருகின்ற வினையே துணை வினையென்று கூறப்படும். கூட்டு வினையின் முதல் உறுப்பாக அமைவது முதல் வினை எனப்படும்.

கண்ணன் நாளை வரப் போகின்றான். இதில் வா என்பது வருதல் தொழிலைக் காட்டும். ஆனால் போ என்பது போதல் என்னும் தொழிலைக் குறிக்காமல் வருதற்றொழிலை உறுதிப் படுத்துகின்றது. எனவே முதல் வினையுடன் துணையாக நின்று துணைப் பொருளை தருவதால் இது துணை வினையாயிற்று.

துணை வினைகள் பெரும்பாலும் செய்து என்ற வாய்பாட்டு வினை எச்சத்தின் பின்னரும் செயவென் வாய்பாட்டு வினை எச்சத்தின் பின்னருமே அமைகின்றன.

கண்ணன் பாடிவிட்டான் (பாடி - செய்து என்னும் வினை)

கண்ணன் பாடப் போகிறான் (பாட என்பது செயவென் வாய்பாட்டு எச்சம்)

துணைவினைகள் பெயர் + வினை என்ற அமைப்பிலும், இடை + வினை என்ற அமைப்பிலும் வரும்.

தந்தி அடித்தான் (தந்தி + அடி - பெயர் + வினை)

முன்னேறினான் (முன் + ஏறு - இடை + வினை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் நாற்பது துணை வினைகள் உள்ளதாக இலக்கண காரர் கூறுவர்.

## மெல்வினை - வல்வினை - இடைவினை

தமிழ் வினைச் சொற்களில் காணப்படும் கால இடைநிலை களை அடிப்படையாக வைத்து அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிப்பர் தற்கால மொழியியலாளர். மூன்று காலங்களையும் உணர்த்தும் இடைநிலைகள் ஒழுங்காக வினைகள் முடியும் ஒலியன் அல்லது எழுத்து அடிப்படையில் அமையவில்லை. எனவே இவற்றை தெரிந்துகொள்ளவே வினைகளை வல்வினை - மெல்வினை - இடைவினை என வகுக்க வேண்டியிருந்தது என்று மொழியியலாளர் வருத்தனர்.

| வினைவகை | அடி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| வல்வினை | கொடு | கொடு+த்த்+ஆன் | கொடு+க்கிற்+ஆன் | கொடு+ப்ப்+ஆன் |
| இடைவினை | உண் | உண்+ட்+ஆன் | உண்+கிற்+ஆன் | உண்+ப்+ஆன் |
| மெல்வினை | செய் | செய்+த்+ஆன் | செய்+கிற்+ஆன் | செய்+வ்+ஆன் |

## இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாக வரும் குறிப்பு வினைமுற்றுக்கள்

இரு திணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக வரும் குறிப்பு வினைமுற்றுக்கள் என பின்வருவனவற்றைக் குறிப்பிட லாம். வேறு, உண்டு, இல்லை என்னும் குறிப்பு வினைமுற்றுக் களும், யார் என்னும் வினாக்குறிப்பு முற்றும் இவ் வகையைச் சார்ந்தனவாகும்.

அவன் வேறு; அவள் வேறு; அவர் வேறு,
அது வேறு; அவை வேறு,
நான் வேறு; நாம் வேறு,
நீ வேறு; நீங்கள் வேறு என்பனவற்றை எடுத்துக் காட்டுகளாக குறிப்பிடலாம். இவ்வாறு உண்டு, இல்லை, யார் என்பனவற்றையும் மேற்குறித்தவற்றோடு தொடர்ந்து வழங்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று, அல்ல என்னும் எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுக் கள் அஃறிணை ஒருமைப் பெயரையும், அஃறிணைப் பன்மைப் பெயரையும் கொள்பவை.

உ-ம் : அது அன்று, அவை அல்ல

இவையிரண்டினுள் அல்ல என்பது தற்காலத்தில் இரு திணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக வழங்கிவருகின்றது.

அவன் அல்ல, அவள் அல்ல, அவர் அல்ல,
நான் அல்ல, நீ அல்ல

என பெரும்பான்மை வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**குறிப்பு :**

இரு திணைப் பொதுவினைகள் :

தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று.

ஐம்பால் மூவிடப் பொதுவினைகள் :

வியங்கோள் வினைமுற்று, வேறு, உண்டு, இல்லை, தகும், படும், யார் என்னும் குறிப்பு வினைமுற்றுக்கள், வினையெச்சம், பெயரெச்சம் என்பன.

## முற்றெச்சம்

வினைமுற்று வினையெச்சப் பொருளில் வரும்போது முற்றெச்சம் என்று சொல்லப்படும். முற்றெச்சம் முற்றுப் போலக் காணப்படும். ஆனால் அது வினை எச்சப் பொருளையே தரும்.

உண்டான் உறங்கினான்.

உண்மையில் இது உண்டு உறங்கினான் எனப் பொருள் கொள்ளப் படும். உண்டான் என்பது முற்றுப் போல தோன்றினாலும் உண்டு என்ற எச்சப் பொருளைத் தருதலினால் அது முற்றெச்சம் எனப்பட்டது.

## செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று

உம் விகுதியைப் பெற்ற செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய நான்கு பால்களுக்கும் பொதுவாக வரும். இது தன்மை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிலைகளிலும் பலர்பாற் படர்க்கையிலும் வராது. இம் முற்று நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் காட்டும்.

1. வரதன் வரும் - ஆண்பால்
2. கோமளம் பாடும் - பெண்பால்
3. கிளி பேசும் - ஒன்றன்பால்
4. கிளிகள் பாடும் - பலவின்பால்

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற்
செல்லாது ஆகும் செய்யும்' என் முற்றே"

என நன்னூலார் கூறுவர்.

**பெயரடை**

ஒரு பெயர்ச் சொல்லை அவாவி நின்று அப் பெயர்ச் சொல் காட்டும் பொருளின் பண்பினைச் சுட்டுவது பெயரடை எனப்படும்.

நல்ல பையன்; குளிர்ந்த தண்ணீர்

அழகான பெண், இனிமையான பேச்சு

போன்றவற்றில் வரும் நல்ல, குளிர்ந்த, அழகான, இனிமையான ஆகியவை பெயரடைகளாகும்.

பெயரடையின் பண்புகள் என சிலவற்றைக் குறிப்பிடலாம்.

1. பெயரடைகள் பெயருக்கு அடையாக வரும்.
2. பெயரடைகள் பெயர்களின் பண்பைச் சுட்டிவரும். (நல்ல பையன்)
3. பெயரடைகள் மிகைப்பான்களை ஏற்றுவரும். (மிக, நன்கு, லேசா, கொஞ்சம்)
4. பெயரடைகள் எப்படிப்பட்ட என்ற வினாவிற்கு விடையாக வருவதாக இருக்கும்.

**பெயரடை வகைகள்**

பெயரடைகளின் ஆக்கத்தை வைத்து இவற்றைத் தனிப் பெயரடை என்றும் ஆக்கப் பெயரடை அல்லது கூட்டுப் பெயரடை என்றும் வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிப் பெயரடை

தனிப் பெயரடை என்பது தனியாக உள்ள சொற்கள் பெயரடையாக வந்து பெயர்களின் பண்புகளை காட்டுவன.

பெரிய பையன், பெரும் பலன், பேர் ஆசை.

அமைப்பு ரீதியில் அடிச் சொற்களுடன் அகர விகுதியையும் இய என்ற விகுதியையும் பெற்று வரும்.

நல் + அ - நல்ல
சிறு + இய - சிறிய

## கூட்டுப் பெயரடை அல்லது ஆக்கப் பெயரடை

இது இன்னொரு சொல்லில் இருந்து குறிப்பாகப் பண்புப் பெயர்களுடன் குறிப்பிட்ட சில விகுதிகள் சேர்ந்து ஆக்கம் பெறும். பண்புப் பெயர் + ஆன; பண்புப் பெயர் + உள்ள போன்றனவே கூட்டுப் பெயரடையின் அமைப்பாகும்.

அழகு + ஆன - அழகான
இனிமை + உள்ள - இனிமையுள்ள

பெயரடைகள் அடுக்கி வருவதும் உண்டு.

அழகழகான பூக்கள், வண்ண வண்ண சேலைகள், பென்னம்பெரிய வீடுகள், கன்னங்கரிய இருள் எனவும் பெயரடைகள் அமையும்.

## வினையடை

ஒரு வினைச்சொல்லை அவாவி நின்று வினை நிகழும் முறை, வினை நிகழும் இடம், வினை நிகழும் காலம் போன்றவற்றை உணர்த்துவதே வினையடை எனப்படும்.

வினை எவ்வாறு நிகழ்கின்றது என்பதை உணர்த்தும் வினையடைகள் முறை வினையடைகள் என்று கூறப்படும்.

கண்ணன் வேகமாக ஓடினான்.

இதில் கண்ணனது செயல் எவ்வாறு நிகழ்ந்தது என்பதை வேகமாக என்ற சொல் எடுத்துக் காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினை நடைபெறும் இடத்தை உணர்த்த பயன்படுவது இட வினையடை என்று கூறப்படும்.

கண்ணன் அங்கே போனான்.

இவ்வாக்கியத்தில் அங்கே என்பது இடத்தைக் குறிக்கின்றது.

ஒரு வினைச் சொல்லை அவாவி நின்று அவ்வினை நடந்த காலத்தைக் குறிப்பது கால வினை அடை எனப்படும்.

கண்ணன் நேற்று வந்தான்.

இங்கு நேற்று என்பது வினை நடந்துமுடிந்த காலத்தைக் குறிப்ப தால் இது கால வினை அடை என்பர்.

## வினை அடைகளின் வகைமைப்பாடு

வினை அடைகளை அவற்றின் அமைப்பு அடிப்படையில் தனி வினை அடை என்றும் கூட்டு வினை அடை அல்லது ஆக்க வினையடை என்றும் இரண்டாக வகைப்படுத்துவர்.

## தனிவினையடை

வினைச் சொல்லை அவாவி நின்று அவ்வினை நிகழும் காலம், இடம், முறை என்பவற்றை உணர்த்தி நிற்கும் பகாப்பதச் சொற்களையே தனி வினையடை என்பர்.

நேற்று வந்தான்
உள்ளே போனான்
அடிக்கடி வருகிறான்

மேலே தரப்பட்ட வாக்கியங்களில் நேற்று, உள்ளே, அடிக்கடி என்பன தனி வினை அடைகளாகும்.

## கூட்டு வினையடை

வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல், பெயர்ச் சொற்களுடன் ஆக, ஆய் விகுதிகள் பெற்றுவருவன கூட்டு வினையடை எனப்படும்.

வேகமாக வந்தான்
புதுமையாய் இருந்தது

இங்கு வேகமாக, புதுமையாய் என்பன கூட்டு வினை அடை களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்குச் சொற்கள் ஆக விகுதி பெற்று வினையடையாக வரும்.

பளபளப்பாக இருந்தது

ஒலிக்குறிப்புச் சொற்கள் என்று, என்னும் இடைச் சொல்லை அடுத்து வினையடையாக வரும்.

மடமடவென்று குடித்தான்.

## தொகை நிலைத்தொடர்

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உருபு வெளிப்படாத தொடர்களும், வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை ஆகிய அல்வழித் தொடர் களும், அன்மொழித் தொகையும் தொகை நிலைத் தொடர்கள் என்பர். சொற்றொடர்களில் காணப்பட வேண்டிய சில உறுப்புக்கள் அற்ற நிலையே தொகை எனப்படும்.

## வேற்றுமைத் தொகை

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உள்ள உருபுகள் தொக்க நிற்க சொற்கள் தொடர்வது வேற்றுமைத் தொகையாகும். பெயரும் முடிக்கும் சொல்லும் ஒன்றாயிணைவதால் வேற்றுமைத் தொடர்கள் ஆகின்றன. இடையில் உருபுகள் கொடுப்பின் அவை விரித் தொடராய்விடும்.

பால் குடித்தான் - பாலைக் குடித்தான் - இரண்டாம் வேற்றுமைத் தொகை.

தலை வணங்கினான் - தலையால் வணங்கினான் - மூன்றாம் வேற்றுமைத் தொகை.

வீடு சென்றான் - வீட்டிற்கு சென்றான் - நான்காம் வேற்றுமைத் தொகை.

ஊர் நீங்கினான் - ஊரில் நீங்கினான் - ஐந்தாம் வேற்றுமைத் தொகை.

என் கொள்கை - எனது கொள்கை - ஆறாம் வேற்றுமைத் தொகை.

மலை வாசி - மலையில் வாசி - ஏழாம் வேற்றுமைத் தொகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு :**

வேற்றுமை உருபோடு வேறு சில சொற்களும் தொக்கு வருவதுண்டு. பொற்குடம் என்பது பொன்னாலாகிய குடம் என விரியும். இங்கு ஆல் உருபோடு ஆகிய என்ற சொல்லும் மறைந்து வந்தது. இவ்வாறு வருவனவற்றை உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.

"இரண்டு முதலா மிடையா றுருபும்
வெளிப்பட லில்லது வேற்றுமைத் தொகையே"
நன்னூல்.

## வினைத்தொகை

இது காலங் காட்டும் இடைநிலையும் பெயரெச்ச விகுதியும் மறைந்து பகுதி மட்டும் நின்று பெயர் சொல்லோடு தொடர்வது வினைத்தொகை ஆகும். நன்னூலார் இதனைக் காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை என்று கூறுவர். ஏவல் வினைப் பகுதியுடன் பெயர்ச்சொல் இணைவது வினைத் தொகை என்று சிலர் கூறுவர்.

சுடு + சோறு - சுடுசோறு (சுட்ட, சுடுகின்ற, சுடும்)
கொல் + யானை - கொல்யானை (கொன்ற, கொல்கின்ற, கொல்லும்)
கால இடைநிலையற்றதால் முக்காலத்திற்கும் இவை வழங்கும்.

## பண்புத் தொகை

இது ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகள் இடையிலே மறைந்து நிற்க பண்புப் பெயரோடு தொடர்புபட்ட பெயர் தொடர்வது பண்புத் தொகை எனப்படும். பண்புகள் வண்ணம், வடிவம், அளவு, சுவை என்பன பண்புப் பிரிவுகளாகும்.

செந்தாமரை - வண்ணப் பண்பு
வட்டக்கல் - வடிவப் பண்பு
முக்குணம் (மும்மை + குணம்) - அளவுப் பண்பு
இன்மொழி (இனிமை + மொழி) - சுவைப் பண்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இப் பண்புத் தொகையில் 'ஆகிய' என்னும் பண்புருபு இடையிலே மறைந்து நிற்க பொதுப் பெயரோடு சிறப்புப் பெயரும். சிறப்புப் பெயரோடு பொதுப் பெயரும் ஒரு பொருளின் மேல் வந்து தொடரும். அது இரு பெயரொட்டுப் பண்புத் தொகை எனப்படும்.

சாரைப்பாம்பு - சிறப்புப் பெயரோடு பொதுப் பெயர் சேர்ந்த இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

மன்னன் கரிகாலன் - பொதுப் பெயரோடு சிறப்புப் பெயர் சேர்ந்த இரு பெயரொட்டுப் பண்புத் தொகை.

"பண்பை விளக்கு மொழி தொக்கனவும்
ஒரு பொருட் கிருபெயர் வந்தவுங் குணத்தொகை"

நன்னூல்

## உவமைத்தொகை

உவமை உருபுகள் மறைத்து நிற்க, உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வது உவமைத் தொகையாகும். இவ் வுவமை வினை, பயன், மெய், உரு என்பன பற்றி வரும்.

புலிக் கந்தன் - வினை உவமைத் தொகை

மழைக் கை - பயன் உவமைத் தொகை

துடி இடை - மெய் உவமைத் தொகை

பவள வாய் - உரு உவமைத் தொகை

"உவம வுருபில துவமத் தொகையே"

- நன்னூல்.

## உம்மைத் தொகை

எண்ணுப் பொருளில் வரும் 'உம்' என்னும் இடைச்சொல் இடையிலும் இறுதியிலும் மறைந்து நிற்க, பெயரோடு பெயர் தொடுவது உம்மைத் தொகைத் தொடராகும். இது எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவைகளில் வரும்.

ஒன்றே கால் - ஒன்றும் காலும் - எண்ணல் அளவை உம்மைத் தொகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழஞ்சே கால் - கழஞ்சும் காலும் - எடுத்தல் அளவை உம்மைத் தொகை.

சாணங்குலம் - சாணும் அங்குலமும் - நீட்டல் அளவை உம்மைத் தொகை.

நாழியாழாக்கு - நாழியும் ஆழாக்கும் - முகத்தல் அளவை உம்மைத் தொகை.

நாழி (கொத்து), ஆழாக்கு (அரைக்காற்படி)

உயர்திணைப் பெயர்களிடையே 'உம்' இடைச்சொல் தொகும் இடத்தில் அவற்றின் இறுதியில் வந்த பால் காட்டும் விகுதி பலர்பாலாக அமையும்.

உ-ம் : இராம லக்குமணர்.

"எண்ண லெடுத்தல் முகத்த னீட்டல்
என நான் களவையு ளும் மிலத்தொகை"

Class No:
Acc No
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணரியல்

சொற்கள் ஒன்றோடொன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். அவ்வாறு சொற்கள் சேரும்போது முன்னிற்கும் சொல் நிலை மொழி எனப்படும். அதனோடு வந்து சேரும் சொல் வருமொழி எனப்படும்.

நிலைமொழியும் வருமொழியும் சேர்ந்து ஒரு சொல்லாதல் இரு காரியங்களில் தங்கியுள்ளது. முதலாவது மயங்கும் மயங்கா எழுத்தொலிகள் பற்றிய அறிவு. இரண்டாவது அல்வழி வேற்றுமைப் பொருள் பற்றிய தெளிவு. இவ்வறிவும் தெளிவுந் தான் சொற் புணர்ச்சிக்கு வேண்டப்படுவன.

## இயல்புப் புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

**இயல்புப் புணர்ச்சி :**

நிலைமொழியும் வருமொழியும் எவ்விதமான மாற்றமும் இன்றி அப்படியே இணைந்து நிற்பது இயல்பு புணர்ச்சியாகும்.

பொன் + வண்டு - பொன் வண்டு

மரம் + வளரும் - மரம் வளரும்.

இங்கு நிலைமொழியும் வருமொழியும் இணைந்தபோது எவ்வித மாற்றங்களும் நிகழவில்லை. தனித்தனியே நின்றது போல் புணர்ந்த பின்பும் நின்றன.

கடல் + அலை - கடலலை

பழம் + இனியது - பழமினியது

இங்கு நிலைமொழிகள் மெய்யெழுத்துக்களை இறுதியாக உடையன. வருமொழிகள் உயிர் எழுத்துக்களை முதலாக கொண்டன. மெய்யெழுத்தில் வருமொழி முதல் உயிர் ஏறி கடலலை எனவும் பழமினியது எனவும் புணர்ந்துள்ளன. இங்கும் இயல்புக்கு மாறாக எதுவும் இடம்பெறவில்லை. மெய்யோடு உயிர் சேர்வது இயல்பானது.

"உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பே"

என்று நன்னூலார் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விகாரப் புணர்ச்சி:**

நிலைமொழியும் வருமொழியும் எல்லா இடங்களிலும் இயல்பாகச் சேரமுடியாது. நிலைமொழியிறுதியும் வருமொழி முதலும் மயங்கா எழுத்துக்களைக் கொண்டனவாய் வரும்போது மாற்றங்கள் நிகழ்கின்றன. மேலும் என்ன பொருளில் புணர்க்க வேண்டுமோ அதே பொருளைப் புணர்ந்த பின்னும் தருவதற்காகவும் மாற்றங்கள் நிகழலாம். இதனையே விகாரப் புணர்ச்சி என்பர். இந்த மாற்றம் நிலைமொழியிறுதியிலோ, வருமொழி முதலிலோ, ஈரிடத்திலுமோ மாற்றம் ஏற்படலாம். இம்மாற்றம் மூன்று நிலைகளில் நிகழலாம்.

i. நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் ஓர் எழுத்தோ, ஓர் இடைச்சொல்லோ (சாரியை) தோன்றுவது தோன்றல் விகாரம் எனப்படும்.

உ-ம் : முல்லை + சிரிப்பு - முல்லைச்சிரிப்பு
புளி + பழம் - புளியம்பழம்

ii. நிலைமொழியிறுதி எழுத்து கெடுதல், கெடுதல் விகாரம் எனப்படும்.

உ-ம் : மரம் + வேர் - மரவேர்
படம் + மாளிகை - படமாளிகை

iii. நிலைமொழி இறுதி ஒலி வேறு ஓர் ஒலியாக மாறுதல் திரிதல் விகாரம் எனப்படும்.

உ-ம் : பொன் + காலம் - பொற்காலம்
நூல் + பா - நூற்பா

சில இடங்களில் நிலைமொழியிறுதி, வருமொழி முதல், இருமொழிகளுக்கிடையில் எவ்வித விகாரமும் இல்லையாயினும் நிலைமொழி இறுதி இரட்டித்து வரின் அவையும் விகாரப் புணர்ச்சியாகும்.

நாடு + வளம் - நாட்டுவளம்
ஆறு + பாய்ச்சல் - ஆற்றுப்பாய்ச்சல்

"தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மொழி மூவிடத்தும் ஆகும்"
- நன்னூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்

வேற்றுமைப் பொருளில் வரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். இங்கு வேற்றுமை எனப்படுவது எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை தவிர்ந்த ஏனைய வேற்றுமை களையே குறிக்கும். இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையுள்ள ஆறு வேற்றுமை உருபுகளும், நிலை மொழி வருமொழிகளுக்கிடையில் மறைந்தோ வெளிப்பட்டோ வருவது வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

வீடு கட்டினான் - ஐ - வீட்டைக் கட்டினான்.

வான் எறிந்தான் - ஆல் - வானாலெறிந்தான்.

அல்வழிப் புணர்ச்சி என்பது வேற்றுமை அல்லாத இலக்கணக் கூறுகளுக்கிடையே நடைபெறும் புணர்ச்சியாகும். இதன் கண் எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை பெயரெச்சம், உம்மைத் தொடர், வினைத்தொகை போன்ற பல இலக்கணக் கூறுகள் அடங்கும். பொதுவாக அல்வழிப் புணர்ச்சியில் தொகை நிலைத் தொடர், தொகா நிலைத் தொடர் போன்றவை அடங்குகின்றன.

அல்வழிப் புணர்ச்சி என்பது வேற்றுமை அல்லாத இலக்கணக் கூறுகளிடையே நடைபெறும் புணர்ச்சியாகும். தொகா நிலைத் தொடர்களில் வேற்றுமைத் தொகை தவிர்ந்த ஐந்து தொடர்களும் தொகாநிலைத் தொடர்கள் ஒன்பதுமாக பதினான்கு தொடர்களும் நிலைமொழி வருமொழியாய் நின்று புணரும் புணர்ச்சியே அல்வழிப் புணர்ச்சி ஆகும்.

உ-ம் : பெய் மழை, குருவி பறந்தது, நெஞ்சே நினை.

சந்தி மாற்றத்தில் இவற்றிடையே குறிப்பிடத்தகுந்த வேறுபாடுகள் உள்ளமையால்தான் தமிழ் இலக்கணகாரர் இத்தகைய ஒரு பிரிவைக் கண்டனர்.

## உயிர்முன் உயிர் புணர்தல் (உடம்படு மெய்)

உயிரொலியும் உயிரொலியும் இணைந்து மயங்கா. எனவே இரு சொல்லும் இணையாவிடத்து ஏற்படும் ஓசையிடை வெளியைத் தடுக்க உடம்படு மெய்கள் தோன்றும் யகரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகரமுமே உடம்படு மெய்களாகும். இதில் மூன்று நிலைகளை அவதானிக்க முடிகின்றது.

*i.* இ, ஈ, ஐ என்னும் உயிரொலிகள் நிலைமொழியிறுதியிலும் வருமொழியில் எந்த உயிர் வந்தாலும் யகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

மணி + அழகு - மணி + ய் + அழகு - மணியழகு
தீ + எரிந்தது - தீ + ய் + எரிந்தது - தீயெரிந்தது
பனை + ஓலை - பனை + ய் + ஓலை - பனையோலை

*ii.* இ, ஈ, ஐ தவிர்ந்த ஏனைய உயிரெழுத்துக்களான அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆறும் நிலைமொழியிறுதியிலும், வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் வகரம் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

பல + ஆடுகள் - பல + வ் + ஆடுகள் - பலவாடுகள்
மா + இலை - மா + வ் + இலை - மாவிலை
மடு + ஓரம் - மடு + வ் + ஓரம் - மடுவோரம்
பூ + அழகு - பூ + வ் + அழகு - பூவழகு
கௌ + என்றான் - கௌ + வ் + என்றான் - கௌவென்றான்

*iii.* ஏகாரத்தின் முன் எந்த உயிர் வந்தாலும் யகரமும் வகரமும் உடம்படு மெய்யாகும்.

தே + ஆரம் - தே + வ் + ஆரம் - தேவாரம் (தே - தெய்வம்)
அவனே + அழகன் - அவனே + ய் + அழகன் - அவனேயழகன்

மயங்கா உயிரொலிகளை உடன்படுத்துதலின் உடம்படு மெய் எனப் பெயர் பெற்றது. உடன்படு என்பதன் மரூஉ உடம்பாடு என்பர். உயிர்களுக்கு இடையில் உடம்பாக (மெய்யாக) அடுக்கும் மெய்யெனவும் காரணம் காண்பர் இலக்கண ஆசிரியர்கள்.

"இ, ஈ, ஐ வழி யவ்வும் ஏனை
உயிர் வழி வவ்வும் ஏ முன் சவ் இருமையும்
உயிர்வரின் உடம்படு மெய் யென்றாகும்"
- நன்னூல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகப் புணர்ச்சி, புறப் புணர்ச்சி

ஒரு சொல்லின் உள்ளே அல்லது அகத்தே நடைபெறும் புணர்ச்சி அகப் புணர்ச்சி எனப்படும். ஒரு வேர்ச் சொல்லுடன் ஒன்று அல்லது பல ஒட்டுக்கள் சேர்ந்து எழுத்து நிலையில் ஒரு சொல்லாக அமைவதே அகப்புணர்ச்சியாகும்.

மரம் + கள் - மரங்கள்

உண் + ட் + ஆன் - உண்டான்

இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடொன்று இணைந்து சொற்றொடராகவோ, வாக்கியமாகவோ வருவது புறப் புணர்ச்சி எனப்படும்.

கண்ணன் வந்தான்.

இதில் எழுவாய் தொடரும் பயனிலைத் தொடரும் இணையும் நிலையில் காணப்படுகின்றது.

## குற்றியலுகரப் புணர்ச்சி

நிலைமொழி இறுதியில் குற்றியலுகரம் வர வருமொழியில் உயிர் வரும்பொழுது குற்றியலுகரம் நீங்க நின்ற உயிர்மேல் வருமொழி உயிர் ஏறி முடிவது பொதுவான இயல்பாகும்.

காற்று + ஓட்டம் - காற்ற் + ஓட்டம் - காற்றோட்டம்

பட்டு + ஆடை - பட்ட் + ஆடை - பட்டாடை

குற்றியலுகரத்தின் முன் யகரம் வருமாயின் உகரம் இகரமாக திரியும்.

நாகு + யாது - நாகியாது

சில முற்றியலுகரச் சொற்களும் குற்றியலுகரச் சொற்கள் போல புணர்ந்து முடியும்.

கதவு + அழகு - கதவ் + அழகு - கதவழகு

"உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றும் அற்று ஒரோவழி"
- நன்னூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யீற்றுப் புணர்ச்சி

நிலைமொழியீற்றில் மெய்யெழுத்தும் வருமொழி முதலில் உயிர் அல்லது மெய்யெழுத்து அமைய சொற்கள் புணர்வது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும்.

**மெய் முன் உயிர் புணர்தல் :**

நிலைமொழியிறுதியில் தனிக் குற்றெழுத்தை அடுத்து மெய்யெழுத்து நிற்கும்போது வருமொழி முதலில் உயிர் வரின் இரட்டித்துப் புணரும்.

கல் + ஐ - கல்ல் + ஐ - கல்லை

மண் + ஆல் - மண்ண் + ஆல் - மண்ணால்

நிலைமொழியிறுதியில் தனிக் குற்றெழுத்தைச் சாராது ஏனைய சொற்களின் இறுதியில் வரும் மெய்யெழுத்து வருமொழி முதலில் உயிர் வரும்போது இயல்பாகும்.

பால் + ஐ - பாலை

அவன் + ஆல் - அவனால்

மகர ஈற்றின் முன் உயிர் வரும்போது மகரம் கெட்டு புதிதாக ஓர் எழுத்து தோன்றுகின்றது.

அகம் + ஒழுக்கம் - அகவ் + ஒழுக்கம் - அகவொழுக்கம்

கடிதம் + உறை - கடித + உறை - கடிதவுறை

வைரம் + ஒளி - வைர + ஒளி - வைரவொளி

## மெய் முன் மெய் புணர்தல்

பதினெட்டு மெய்யெழுத்துக்களில் மொழியிறுதியில் சில எழுத்துக்கள் மட்டுமே வருவன. வல்லின மெய் ஆறும், மெல்லின மெய்களில் ங், ஞ், ந், வ் ஆகிய நான்கும் வருவதில்லை. எனவே நிலைமொழி இறுதியில் பத்து மெய்யெழுத்துக்கள் வரா.

எல்லா மெய்களும் வருமொழி முதலில் வருவதில்லை. வல்லின மெய்யில் ட், ற் என்பனவும் மெல்லின மெய்யில் ங், ண், ன் என்பனவும் இடையினத்தில் ய், ர், ழ், ள் என்பனவும் வருவதில்லை. இவை தவிர்ந்த ஒன்பது மெய்யெழுத்துக்கள் மட்டுமே வருமொழி முதலில் வரக்கூடியன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகர ஈறு**

தொகைநிலை சொல்லாக்கத்தில் மகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால் மரக ஈறு கெட்டு வல்லினம் மிகும்.

மரம் + காட்சி - மரக்காட்சி (வேற்றுமைத் தொகை)

சதுரம் + பெட்டி - சதுரப்பெட்டி (பண்புத் தொகை)

சில மகர ஈற்றுமெய் வல்லினம் வரும்போது மகரம் கெட்டு அதற்கான இன எழுத்து தோன்றும்.

மரம் + கொத்தி - மரங்கொத்தி

பழம் + சோறு - பழஞ்சோறு

மகரத்தின் முன் மகரம் வரும்போது நிலைமொழி ஈற்று மகரம் கெடும்.

இலக்கியம் + மரபு - இலக்கிய மரபு

மனம் + மகிழ்ச்சி - மனமகிழ்ச்சி

தனிக் குறிலை அடுத்து வரும் மகரம் வருமொழி முதலில் மகரம் வரும்போது மகரம் கெடாது.

நம் + முயற்சி - நம்முயற்சி

நிலைமொழியீற்றில் மகரமும் வருமொழி முதலில் நகரமும் வரும்போது சில இடங்களில் மகரம் கெடும்.

வைரம் + நகை - வைர நகை

மணம் + நாள் - மணநாள்

சில இடங்களில் மகரம் கெடாது.

மனம் + நொந்தது - மனம் நொந்தது

உள்ளம் + நிறைந்தது - உள்ளம் நிறைந்தது

மகர மெய்யுடன் வகரம் சேரும்போது சில இடங்களில் மகரம் கெட்டும் சில இடங்களில் கெடாமலும் புணரும். நிலைமொழியும் வருமொழியும் பெயராக இருப்பின் மகரம் கெடும்.

வனம் + வாசம் - வனவாசம்

வாணம் + வேடிக்கை - வாணவேடிக்கை

மரம் + வேர் - மரவேர்

நாம் + வேறு - நாம் வேறு (இயல்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ணகர, னகர ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழி இறுதியில் ண், ன் ஆகிய மெய்யெழுத்து நிற்கும்போது வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் வரின் முறையே ட், ற் ஆகத் திரியும் மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும்.

மண் + கலம் - மட்கலம்
பொன் + காசு - பொற்காசு } வல்லினம் வர ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவும் திரிந்தது.

மண் + மலை - மண்மலை

பொன் + மலை - பொன்மலை

மண் + வன்மை - மண்வன்மை

பொன் + வன்மை - பொன்வன்மை

மெல்லினமும் வல்லினமும் வர இயல்பாயின.

அல்வழிப் புணர்ச்சியில் மூவின மெய்களும் வர இயல்பாகும்.

உ-ம் :

மண் + பெரிது - மண்பெரிது

மண் + மாண்டது - மண்மாட்டது

மண் + வலிது - மண்வலிது

பொன் + பெரிது - பொன்பெரிது

பொன் + மாண்டது - பொன் மாண்டது

பொன் + வலிது - பொன்வலிது

நிலைமொழியில் ண், ன் ஆகியனவற்றின் முன் நகரம் வரின் நிலைமொழி ஈற்று மெய்கள் இரட்டிப்பாகும்.

கண் + நீர் - கண்ணீர்

மண் + நீர் - மண்ணீர்

பொன் + நிறம் - பொன்னிறம்

தென் + நாடு - தென்னாடு

நெட்டெழுத்துக்களைத் தொடர்ந்து ணகர, னகர மெய்களின் முன் நகரம் வருமாயின் நகரம் கெட்டுப் போய்விடும்.

தூண் + நன்று - தூண் + (ந்) அன்று - தூணன்று

வான் + நன்று - வான் + (ந்) அன்று - வானன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமொழியிறுதியில் ண், ன் ஆகிய மெய்யெழுத்துக் களின் முன் வருமொழியில் மகரம் வரின் இயல்பாகும்.

கண் + மலர் - கண்மலர்

மண் + மேடு - மண்மேடு

மான் + விழி - மான்விழி

பொன் + வயல் - பொன்வயல்

## லகர, ளகர வீற்றுப் புணர்ச்சி

தொகை நிலை சொல்லாக்கத்தில் லகர, ளகர ஒற்றுக் களின் முன் வல்லினம் வரின் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்.

வேல் + கை - வேற்கை (வேற்றுமைத் தொகை)

பால் + சொல் - பாற்சொல் (உவமைத் தொகை)

அருள் + பயன் - அருட்பயன் (வேற்றுமைத் தொகை)

வாள் + கண் - வாட்கண் (உவமைத் தொகை)

இரண்டாம் வேற்றுமைத்தொகை மூன்றாம் வேற்றுமைத்தொகை வரும் இடங்களில் இவை திரிபடையமாட்டா.

வால் + காட்டாதே - வால் காட்டாதே

தேள் + கொன்றான் - தேள் கொன்றான்

சொல் + போர் - சொற்போர்

முள் + குடை - முட்குடை

லகர, ளகர ஒற்றுக்களின் முன் மெல்லினம் வரின் அல்வழியிலும் வேற்றுமையிலும் லகரம் னகரமாகவும் ளகரம் ணகரமாகவும் திரியும்.

கல் + முனை - கன்முனை

முள் + முனை - முண்முனை

வேற்றுமையில் லகரம் னகரமாகியது.

கல் + மாண்டது - கன்மாண்டது

முள் + மாண்டது - முண்மாண்டது

அல்வழியிலும் அவை திரிந்தன.

லகர, ளகர ஒற்றுக்களின்முன் இடையினம் வரின் இரு வழியிலும் இயல்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரல் + வலிது - விரல் வலிது

வாள் + வலிது - வாள் வலிது

அல்வழியில் இடையினம் வர இயல்பாயின.

விரல் + வன்மை - விரல் வன்மை

வாள் + வன்மை - வாள் வன்மை

வேற்றுமையிலும் இயல்பாயின.

லகர, ளகர மெய்முன் வருமொழியில் தகரம் வந்தால் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாக மாறுவதோடு தகரமும் முறையே றகரமாகவும் டகரமாகவும் திரியும்.

சொல் + தொகை - சொற்றொகை

மக்கள் + தொகை - மக்கட்டொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழா நிலை - வழு - வழு அமைதி

**வழா நிலை :** முடிக்கப்படும் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணை, பால் முதலியவற்றால் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது வழா நிலை எனப்படும் (வழா நிலை - பிழையற்ற நிலை)

*i.* தம்பி சிரித்தான் - உயர்திணை ஆண்பாற் பெயர், அத் திணை பாலுக்குரிய வினை கொண்டு முடிந்தது.

*ii.* நங்கை அழுதாள் - உயர்திணை பெண்பாற் பெயர். அத் திணை பாலுக்குரிய வினை கொண்டு முடிந்தது.

*iii.* நீ படித்தாய் - முன்னிலை ஒருமைப் பெயர், முன்னிலை ஒருமை வினை கொண்டு முடிந்தது.

*iv.* நாளை வருவேன் - நாளை என்னும் வருநாள் பெயர், எதிர் கால வினை கொண்டு முடிந்தது.

**வழு :** முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் முதலியவற்றில் மாறுபட்டு நிற்றல் வழு எனப்படும். (வழு - பிழை, இலக்கணப் பிழை)

*i.* அவர்கள் சென்றன - திணை வழு

*ii.* பரமன் வந்தாள் - பால் வழு

*iii.* அவை வந்தது - எண் வழு

*iv.* நான் வந்தாய் - இட வழு

*v.* நாளை வந்தேன் - கால வழு

**வழுவமைதி :** முடிக்கப்படும் சொற்களோடு முடிக்கும் சொற்கள் திணை, பால் முதலியவற்றில் மாறி நின்று வழுவாகத் தோன்றினும், சில இடங்களில் அவ்வாறு இருக்கலாமென ஆன்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமைந்திருந்தல் வழுவமைதி ஆகும். (வழுவையும் விதிவிலக்காக ஏற்றல்)

### திணை வழுவமைதி :

திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைகளுக்குரிய பல பொருள்களும் கலந்து ஒரு தொடராய் வருவனவாயின் அவை சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிவைப் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு காரணமாக அஃறிணைப் பொருளை உயர்திணைப் பொருளோடு சார்த்தி இரண்டிற்கும் உயர்திணை முடிவைப் பெறலாம்.

உ-ம் : "திங்களும் சான்றோரும் ஒப்பர்"

இங்கு உயர்வு காரணமாக திங்களும் அறிஞரும் ஒப்பர் என்று உயர்திணை முடிக்கும் சொல் பெற்றது.

"மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா"

இங்கு இழிவு காரணமாக உயர்திணைப் பொருளும் அஃறிணைப் பொருளும் அஃறிணை முடிவினைப் பெற்றது.

"மூத்தோர், இளையோர், பெண்டிர், பசு இவர்கட்டு"

இதில் இரு திணையும் கலந்து மிகுதியால் இவர்கள் என்னும் உயர்திணை முடிவைப் பெற்றன.

"திணை பால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொரு முடிபெனவே"
- நன்னூல்

## திணை பால் வழுவமைதி :

திணையும் பாலும் உவப்பினாலும், உயர்வாக கூறுதலினாலும் சிறப்பிப்பதாலும், இழிவாக கூறுதலினாலும் வழுவி வரினும் வழுவமைதியே ஆகும்.

i. ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பதில் உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

ii. ஒரு பெண்ணை, 'கிளி பேசினாள்' என்பதில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

iii. 'தம் பொருள் என்ப தம் மக்கள் - இதில் சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

iv. 'இவன் ஒரு நாள்' - இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

## பால் வழுவமைதி :

i. 'என்ரை இராசாத்தி வந்தாள்' தன் மகனை உவப்பினால் மகள் போல் பாவித்தமை பால் வழுவமைதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii. ஒருவனை 'அவர் வந்தார்' என்பதில் உயர்த்திச் சொல்வதால் ஒருமைப்பால் பன்மைப் பாலாயிற்று. (இது உயர்வுப் பன்மை, மரியாதைப் பன்மை எனப்படும்)

iii. 'தேவன் மூவுலகிற்கும் தாய்' - இதில் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

iv. போரில் தோற்று ஓடியவனை 'இவன் பெண்' என்பதில் இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

'உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பிலும் பால்திணை யிழுக்கினு மியல்பே'
- நன்னூல்

**பால், இட வழுவமைதி :**

ஒருமைப் பாலிற் பன்மைப் பாற் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப் பாற் சொல்லையும், ஓர் இடத்திற் பிற இடச் சொல்லையும் ஏதேனும் ஒரு காரணம் பற்றி தழுவிக் கூறுதலும் வழுவமைதியாம்.

**பால் வழுவமைதி :**

நீரெல்லாம் அசுத்தமாயிற்று - இதில் நீர் என்னும் ஒருமைப் பாலில் எல்லாம் என்னும் பன்மைப்பால் வந்துள்ளது.

'வெற்றி கொள்வதும் தோற்பதும் நூல்களிற் சொல்லியதே' இதில் கொள்வதும் தோற்பதும் என்னும் பன்மைப்பால் சொல்லியதே என்னும் ஒருமைப் பாலில் முடிவுற்றது.

**இட வழுவமைதி :**

"முருகன் இது செய்வானோ"

இதில் யான் எனச் சொல்ல வேண்டிய தன்மை இடத்தில் முருகன் என்னும் படர்க்கைச் சொல் வந்தது.

'கண்ணன் பேசுகின்றேன்'

கண்ணன் என்னும் படர்க்கை எழுவாய் பேசுகின்றேன் என்ற பயனிலை தன்மையுடன் முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒருமையிற் பன்மையும் பன்மையி லொருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே"
- நன்னூல்

**கால வழுவமைதி :**

மூன்று காலங்களிலும் இடையறாமல் ஒரே தன்மையாக நடக்கின்ற தொழிலை நிகழ்காலத்தினாற் கூறுதல் கால வழுவமைதி எனப்படும்.

மலை நிற்கின்றது - மலை முக்காலங்களிலும் நிற்றல் உண்மை எனினும் நிகழ்காலத்தால் கூறப்பட்டது.

வானரங்கள் கனி கொடுத்து மத்தியொடு கொஞ்சும். இங்கு கொஞ்சும் என்பது எதிர்காலம். இங்கு இறந்த காலமும் நிகழ் காலமும் தொக்கி நிற்கின்றது.

விரைவு, மிகுதி, தெளிவு, இயல்பு ஆகிய இவற்றினால் முக் காலங்களில் ஒன்றை மற்றொன்றாக ஏற்ற இடத்தில் மாற்றிச் சொல்வதும் கால வழுவமைதியாம்.

## மரபும் மரபு வழுவும்

**மரபு :** எப்பொருளை எச்சொல்லால் எங்ஙனம் சான்றோர் கூறினரோ அங்ஙனமே சொல்லுதல் மரபு எனப்படும்.

*i.* குதிரைக்குட்டி, வாழைக்கன்று, பனைஓலை, தென்னம் பிள்ளை, மாந்தளிர் இவ்வாறு கூறுதல் மரபு.

*ii.* குதிரைக்குஞ்சு, வாழை ஓலை, பனை இலை, மாங்குருத்து இவ்வாறு கூறுதல் மரபு வழு.

**ஒரு பொருட் பன்மொழி :**

செவிக்கு சொல்லின்பம் தோன்றும் பொருட்டு ஒரு பொருள் மேல் பல சொற்கள் தொடர்ந்து வருதலும் உண்டு. அது வழு ஆகாது. வழுவமைதியே.

வெங்கொடும் போர், நாகிளங்கமுகு

(வெம் - கொடிய; கொடும் - கொடிய; நாகு - இளமை; இளம் - இளமை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிகள் பற்றிய விளக்கம்

இலக்கியத்தைக் கற்கும் மாணவர்கள் செய்யுளை அழகு படுத்தும் அணியைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். பெண்கள் உடலுக்கு அணிகள் (ஆபரணம்) மூலம் அழகுபடுத்துவது போல செய்யுளுக்கு அழகைக் கொடுப்பதும் அணியாகும்.

"சிந்தை வைத்து இயம்புவன் செய்யுட்கு அணியே" எனத் தண்டியலங்காரம் அணியின் சிறப்பைக் கூறுகின்றது. செய்யுளின் நுட்பத்தை உணர்ந்து இரசிக்க உதவுவது அணி யாகும். அணிகளால் இரசிக்க உதவுவது அணியாகும். அணி களால் உணர்த்தப்படும் நுண்பொருட்களைத் தற்காலத்தில் படிமம் என்று குறிப்பிடுவர். காட்சிப் படிமம், கருத்துப் படிமம், ஒலிப் படிமம் என்றெல்லாம் படிமங்களும் பலவகைப்படும்.

**தன்மை அணி :**

புலவன் தான் எடுத்துக்கொண்ட பொருளின் இயல்பாக உள்ள தன்மையை உவமை முதலியனவன்றி உள்ளவாறு விளக்கிக் கூறுதலாகும். அவ்வாறு உரைக்கும்போது கேட்போர் மகிழும்படி கூறுவதாகும்.

எடுத்துக்காட்டு : கைகேயி, சூழ் 68-ம் செய்யுள்

"குஞ்சரம் அனையார் சிந்தை கொள் இளையார்
பஞ்சினை அணிவார். பால்வளை தெரிவார்"

யானையைப் போன்ற பெருமிதமுடைய ஆடவர்களின் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் இளைய மங்கையர் செம் பஞ்சுக் குழம்பினைக் கால்களில் பூசுவர். பால் போன்ற வெண்மை யான சங்கு வளையல்களைத் தேர்ந்தெடுத்துக் கைகளில் அணிவார்.

மக்களது செயல்களை உள்ளது உள்ளவாறு கூறியமையால் இது தன்மை கவிற்சியணியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உயர்வு நவிற்சியணி :**

ஒரு பொருளின் இயல்பான தன்மையைக் கூறாது அதிசயம் தோன்ற உயர்த்திக் கூறுதல் உயர்வு நவிற்சி அணி எனப்படும்.

"உழுந்திட இடமிலை உலகம் எங்கணும்
அழுந்திய உயிர்க்கெலாம் அருட்கொம்பாலினான்
எழுந்திலன் எழுந்திடைப் படகுஞ் சேனையின்
கொழுந்து போய்க் கொடிமதில் மிதிலை கூடிற்றே"

இச் செய்யுளில் தசரதன் கட்டளை பெற்று புறப்பட்ட சேனையின் முன்னணி தசரதன் வெளிக்கிடுவதற்கு முன்னமே மிதிலையை அடைந்தது எனவும், இவ்விரண்டு (அயோத்தி - மிதிலை) நகரங் களுக்குமிடையே உழுந்திடவும் இடமில்லாதவாறு படைகள் நெருங்கியிருந்தன என்று சேனையின் மிகுதியை உயர்த்திக் கூறியமையால் உயர்வு நவிற்சியணி ஆயிற்று.

**உவமையணி :**

கவிஞன் எமக்கு முன் தெரியாத ஒரு பொருளை தெரிந்த பொருளைக் கொண்டு காட்டி இது போலும் இது என்று விளக்குவான். ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுதலாகும். ஒப்புமை கூறும்போது பொருளினுடைய வண்ணம், வடிவு, தொழில், பயன் முதலான இயல்புகள் நன்கு புலப்படும் படியாக செய்யும் புலப்பாட்டு நெறி தொல்காப்பியம். இதனை,

"வினை, பயன், மெய், உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமைத் தோற்றம்"

என்று கூறும். ஒரு பொருளை இன்னொரு பொருளுக்கு உவமை யாகக் கூறும்பொழுது அவ்விரண்டிற்கும் பொதுவாகியதொரு தொழில், பயன், வடிவு, உரு ஆகியவற்றில் ஏதாவது ஒன்று காரண மாகவே அமையும்.

உ-ம்:

வினை உவமம் - புலி போலப் பாய்ந்தான்
பயன் உவமம் - மாரி அன்ன வண்கை
மெய் உவமம் - துடி போலும் இடை
உரு உவமம் - தளிர் போலும் மேனி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உவமையின் கூறுகள் :**

உவமானம் : எவற்றிற்கும் தெரிந்த பொதுவான சிறப்புப் பொருளைக் குறிக்கும்.

உவமேயம் : கூறவந்த பொருள்

பொதுத் தன்மை : உவமானத்திற்கும் உவமேயத்திற்கும் இடையே யான ஒற்றுமை.

உவமை உருபு : இரு பொருட்களை ஒப்பிட்டுக் காட்டப் பயன் படும் சொற்கள்.

உ-ம் போல, புரைய, அன்ன, நிகர்

எடுத்துக்காட்டு : கைகேயி சூழ் – 5ம் செய்யுள்

"ஆழி நெடுங்கை மடங்கல் ஆளி அன்னான்"

ஆணைச் சக்கரம் ஏந்தும் நீண்ட கைகளை உடைய ஆண் சிங்கம் போன்ற தசரதன்.

உவமானம் : மடங்கல் ஆளி

உவமேயம் : தசரதன்

உவமை உருபு : அன்ன

பொதுத் தன்மை : பீடுநடையும் ஈடில்லா ஆற்றலும்

**எதிர்நிலை உவமை அணி :**

ஒரு பொருளுக்கு முன்பு தொட்டு உவமானப் பொருளை எதிர்நிலையாக (உவமேயமாக்கி) மாற்றிக் கூறுவதாகும்.

எடுத்துக்காட்டு : கைகேயி – சூழ் – 66ம் செய்யுள்

"ஆசைகூர் பாவைமார் முகம் என்ன முன்னம் மலர்ந்த பங்கயராசியே"

என்ற தொடரைக் குறிப்பிடலாம். வழமையாகச் சொல்வது மரபு. இங்கு பெண்ணின் முகம் போல தாமரை மலர்ந்தன என்றார். உமையை உவமேயமாக்கிக் கூறப்பட்டுள்ளது. இதுவே எதிர்நிலை உவமை அணியாகும்.

**இல்பொருள் உவமை அணி :**

இல்லாத ஒரு தன்மையை ஒரு பொருளுக்கு உவமான மாக்கிக் கூறுதல் இல்பொருள் உவமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு : கைகேயி - சூழ் - 4ம் செய்யுள்.

"மடந்தையை மானை எடுக்கும் ஆனையே போல்
தடங்கைகள் கொண்டு தழீஇ எடுக்கலுற்றான்"

ஆற்றலும் ஆண்மையும் கொண்ட களிறு பெண் மானை தனது நீண்ட பெரிய துதிக்கையால் தூக்கி எடுத்தல் போல ஆற்றலும் ஆண்மையும் மிக்க தசரதன் அன்பினால் மான் போன்ற கைகேயியை தன் பெரிய கைகளால் வாரி எடுத்துத் தூக்கினான்.

உவமானம் - ஆனை மானைத் தூக்குதல்

உவமேயம் - தசரதன் கைகேயியைத் தூக்குதல்.

தசரதனுக்கும் கைகேயிக்கும் கருத்தொருமைப்பாடு இல்லாததால், ஆனை மானைத் தூக்குதல் இயல்பாக நிகழாததால் இது இல் பொருள் உவமையாயிற்று.

**உருவக அணி :**

உவமையாகிய பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு இல்லாது தவிர்த்து இரண்டும் ஒன்றேயெனத் தோன்றுமாறு ஒருமித்து உரைப்பது உருவக அணியாகும். வடமொழியில் 'ரூபகம்' என்னும் சொல்லே தமிழில் உருவகமாயிற்று.

உவமானம் உவமேயம் இரண்டிற்கும் பேதம் தோன்றச் சொல்லப்படுவது உவமை அணி. பேதமின்மை தோன்றச் சொல்லப்படுவது உருவக அணியாகும். ஆக, ஆகிய என்பன உருவக உருபுகள் ஆகும், வெளிப்பட்டு வருவது விரி உருவகம் என்றும் கூறப்படும்.

"சேனையாகிய கடலை வீமனாகிய மலை கலக்கியது"

இதில் கடல், மலை ஆகிய உவமானப் பொருள்கள் உவமை உருபு கொடுத்து வேறுவேறாக கூறப்படாமல் சேனை வீமன் ஆகிய உவமிக்கப்படும் பொருள்களோடு ஒன்றுபடக் கூறப்பட்டிருப்பதால் இது உருவக அணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனை கடலாகவும் வீமன் மலையாகவும் உருவகிக்கப் பட்டுள்ளன.

**ஏகதேச உருவகம் :**

ஒரு பகுதியை உருவகப்படுத்தி மற்றொரு பகுதியை உருவகப்படுத்தாமல் விடுவது ஏகதேச உருவக அணியாகும்.

இராமன் பகைவர்க்குச் சிங்கம் - இராமனை சிங்கமாக உருவகித்தவர் பகைவரை யானையாக உருவகிக்கவில்லை என்பதை அறிந்துகொள்க.

**தற்குறிப்பேற்றவணி :**

ஓரிடத்தில் காணும் இயல்பான நிகழ்ச்சிக்குப் புலவன் தான் எண்ணிய வேறொரு காரணத்தைக் குறித்துக் கூறுதலாகும்.

எடுத்துக்காட்டு :

எண் தரும் கடை சென்றயாமம்
　　இயம்புகின்றன ஏழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன்
　　மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி அம்சிறை
　　ஆன காமர் துணைக்கரம்
கொண்டு தம் வயிறு எற்றி
　　விளிப்ப போன்றன கோழியே.

"நெஞ்சு கலங்கி அம்சிறையான காமர் துணைக்கரம் கொண்டு தம் வயிறு ஏற்றி விளிப்பன போன்றன கோழியே" என்பது தற்குறிப் பேற்றம். வைகறைப் பொழுதில் தம் சிறகுகளை அடித்துக் கொண்டு கோழிகள் கூவுகின்றமை இயல்பான நிகழ்வு. தசரதன் விம்மி விம்மி அழுவதைக் கண்டு அத்துன்பத்தை தாங்க முடியாமல் கலங்கி அவை அழுவதாகக் கூறியமை தற்குறிப்பேற்ற மாகும்.

**சொற்பின் வருநிலை அணி :**

ஒரு பாட்டின் முன் வைத்த சொற்கள் பின்வரும் பல விடயங் களில் வருதல் சொற்பின் வருநிலை அணியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு :

தழை ஒலித்தன வண்டு ஒலித்தன தார் ஒலித்தன பேரி ஆம் முழவு ஒலித்தன தேர் ஒலித்தன முத்தொலித்தன"

முடிசூட்டு நாளுக்கு சிறப்பாக ஒலிகள் கேட்டன. வினைப் பகுதிகள் வேண்டிய பொருளை விளக்கும் என்பதற்கு அமைவாக ஒலித்தன என்ற சொல் பல்வேறு பொருளில் வந்துள்ளன. இவ்வாறு அமைவது சொற்பின் வருநிலை அணியாகும்.

**கருத்துடை அடை கொளியணி :**

கருத்துடன் கூடிய சிறப்பைக் கூறுவது.

ஒரு பொருளுக்கு அடைமொழி கொடுத்துச் சொல்லும் போது அவை வேறு நிகழ்ச்சிகளை அறிவிக்கக் கூடிய வகையில் உணரத்தக்கதாக இருப்பதே கருத்துடை அடைகளாகும்.

எடுத்துக்காட்டு :

கள்ளவிழ் கோதை கருத்துணராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்
உள்ளமுவந்து செய்வேன் ஒன்றும் உலோபேன்
வள்ளல் இராமன் உன் மைந்தன் ஆணை என்றான்.

அரும்பான நிலையில் வெளிப்படுத்தாத தேனை அரும்பு அவிழ்ந்து மலர்ந்த பின் வெளிப்படுத்தும் மாலையை உடையவள் என்பதனால் வரம் தருக எனத் தன் கருத்துப் புலப்படாத வகையில் தசரதனைக் கேட்டு, தருவதாக கூறியவுடன் கருத்தை வெளிப் படுத்தும் இயல்புடையவள் கைகேயி. ஆகவே இது கருத்துடை யடை கொளியணி ஆகும்.

**ஒப்புமைக் கூட்டணி :**

புலவன் தான் கருதிய பொருள்களின் குணங்களை அதே குணங்களை உடைய மற்றைய பொருட்களோடு அப்பொருட் களையும் ஒருங்கு சேர்த்துக் கூறுதல் ஒப்புமைக் கூட்டணியாகும்.

உவமேயங்களாகிய பல பொருள்களையாயினும் உவமானங் களாகிய பல பொருட்களையாயினும் பொதுவாகிய ஒரு செய்கை யில் முடிவு செய்து கூறுதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டு :

நலங் கிளர் பூமியென்னும் நங்கையை நறுந்துழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்திலாதார்
இலங்கையினிருதரே யில்வேழுலகத்து வாழும்
விலங்கலும் ஆசை நின்ற விடா மத விலங்கலே யால்.

இச் செய்யுளின் இறுதி இரண்டு அடியிலும் இராமனது முடி சூட்டுவிழாவிற்கு வராதோர் இலங்கையிலுள்ள அரக்கரும் ஏழு உலகத்திலுள்ள மலைகளும் திக்கு யானைகளுமாகும். ஒத்த குணம் படைத்தனவாகப் பொருட்கள் ஒருசேரக் கூறப்பட்டுள்ளன. நிலைபெயர முடியாமையால் முடிசூட்டு விழாவிற்கு வரமுடியாதன வாகிய மலை, யானை என்பவைகளுடன் அரக்கர்களையும் சேர்த்துக் கூறியபடியால் அரக்கர்களின் குணத்தின் இழிவு கூறப்பட்டுள்ளது.

**வேற்றுமை அணி :**

உவமான உவமேயங்களை ஒன்றுபடக் கூறிப் பின்னர் அவற்றினிடையே வேற்றுமை காட்டுதல் வேற்றுமை அணி எனப்படும்.

“அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும் சான்றோர ஃதாற்றார் தெருமருந்து
தேய்வர் ஒரு மாசுறின்”

இதில் உவமானம் - திங்கள்; உவமேயம் - சான்றோர். இவை யிரண்டும் ஒப்பர் என முதலில் ஒன்றுபடக் கூறப்பட்டன. பின்னர் உவமானமாகிய திங்கள் தன்னிடத்தேயுள்ள களங்கத்தைப் பொறுத்துக் கொண்டிருக்கின்றது. சான்றோர் தம்மிடஞ் சிறிது களங்கமேற்படினும் அதைப் பொறுத்துக்கொண்டிராமல் இறந்து விடுவர் என வேற்றுமை கூறப்பட்டது. ஆகவே செய்யுள் வேற்றுமை அணி எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேற்றுமைப் பொருள் வைப்பணி :**

ஒரு பொருளின் இயல்பை எடுத்துச்சொல்லி அதனைச் சாதிப்பதற்கு வேறொரு பொருளைக் கூறுதல் வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும். சிறப்புப் பொருளை உறுதிப்படுத்தி முடித்தற்குப் பொதுப் பொருளையும், பொதுப் பொருளை உறுதிப் படுத்தி முடிப்பதற்கு சிறப்புப் பொருளையும் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பு அணியாகும்.

"புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரான் – மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்?"

இச் செய்யுளில் சூரியன் காலையில் தோன்றி மாலையில் மறைதல் சிறப்புப் பொருளாக கூறப்பட்டது. உயிர்கள் பிறந்து இறத்தல் பொதுப்பொருளாகக் கூறப்பட்டது. இங்கு பொதுப்பொருள் சிறப்புப் பொருளால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

**ஒட்டணி அல்லது பிறிது மொழிதலணி :**

கவிஞன் தான் கருதிய பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்த வேறொரு பொருளைக் கூறுதல் ஒட்டணி எனப்படும். (உவமேயத்தை அறிந்துகொள்ள உவமானத்தை மட்டும் கூறுதலாகும்) இதனையே பிறிது மொழிதல் அணி என்றும் கூறுவர். "ஒட்டெனினும், உள்ளுறை உவமையெனினும், உவமப் போலியெனினும், பிறிதுமொழிதலெனிலும், நுவலாநுவற்சி யெனினும் ஒக்கும்" என இலக்கண விளக்கவுரை கூறும்.

"பீலி பெய் சாகாடுமச்சிறும் பண்டம்
சால மிகுத்துப் பெயின்"

இக்குறளில் மெல்லியதான மயிலிறகை அளவிற்கு அதிகமாக வண்டியில் ஏற்றினால் வலிமையிழந்து வண்டியின் அச்சு முறித்து விடும் என்ற உவமானம் மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதனூடாக வலிமையற்றவராயினும் பலர் ஒருங்குசேர்ந்தால் வலிமையுள்ள ஒருவன் ஈடுகொடுப்பது அரிது என்ற உவமேயம் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறு வினாவிடைகள்

**பின்வரும் வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக்காட்டி வழுவற்ற வகையில் வாக்கியத்தை திருத்தி எழுதுக.**

*01. தெருக்கோடியில் இரண்டு மின்விளக்குகள் ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தது.*

எழுவாய் - மின்விளக்குகள் - அது பன்மைக்குரியது.

பயனிலை - ஒளி பாய்ச்சிக் கொண்டிருந்தது - அது ஒருமை.

இங்கு எண் இசையவில்லை.

எனவே தெருக்கோடியில் இரண்டு மின்விளக்குகள் ஒளிபாய்ச்சிக் கொண்டிருந்தன என அமைய வேண்டும்.

*02. முயலுடன் ஒப்பிடும்போது ஆமைகள் வேகமாக ஓடாது.*

எழுவாய் - ஆமைகள் - அது பன்மை

பயனிலை - ஓடாது - அது ஒருமை.

இங்கு எண் இசையவில்லை.

எனவே முயலுடன் ஒப்பிடும்போது ஆமைகள் வேகமாக ஓடா என அமையவேண்டும்.

*03. அங்குள்ள விலங்குகள் பார்வைக்குச் சிறியதாய் இருந்தன. இதில் உள்ள வழு.*

எழுவாய் - விலங்குகள், பயனிலை - இருந்தன.

இவையிரண்டும் பன்மைகள். ஆனால் அடைமொழியில் வழு உள்ளது. சிறியதாய் என்பது பயனிலை அடைமொழி. அது ஒருமை. எனவே வாக்கியத்தில் பயனிலை பன்மையாக இருப்பின் அடைமொழியும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

திருத்தம் : அங்குள்ள விலங்குகள் பார்வைக்கு சிறியனவாய் இருந்தன.

*04. நான் அப்படிப் பேசியிருக்கலாம் என்பது பலராலும் சொல்லப்படும் கூற்று.*

இதில் எழுவாய் - நான் - அது தன்மை ஒருமை

பயனிலை - பேசியிருக்கலாம் - தன்மை ஒருமைக்கு ஏற்ற பயனிலை இடம்பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கலாம் - இது தொடர்மொழி. இருத்தல் என்பது வழுச்சொல். எனவே திருத்தம் - நான் சிலவேளை அப்படிச் சொல்லியிருப்பேன்.

05. *நாம் நம் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணிப் பாது காக்க வேண்டும்.*

வழு - பண்பாடு கலாசாரம் இரண்டும் ஒருபொருட் சொற்கள். இரண்டில் ஒன்றை தவிர்த்துவிடுவதே நன்று.

திருத்தம் : நாம் நம் பண்பாட்டை பேணிக் காக்கவேண்டும்.

நாம் நம் கலாசாரத்தைப் பேணிக் காக்கவேண்டும்.

06. *எங்கள் ஊரில் ஒவ்வொரு கோயில்களிலும் திருவிழா நடந்தன.*

ஒவ்வொரு என்பது ஒருமையைக் குறிக்கின்றது. அதனால் கோயில் களிலும் என்பது வழு. அது கோயிலிலும் என திருத்தப்பட வேண்டும். நடந்தன என்ற பன்மை வினைமுற்று நடந்தது என ஒருமைக்கு மாற்றவேண்டும்.

திருத்தம் : எங்கள் ஊரில் ஒவ்வொரு கோயிலிலும் திருவிழா நடந்தது.

07. *நான் விளையாடும்போது அண்மையில் சமயச் சொற்பொழி வொன்று நிகழ்ந்து கொண்டிருந்தது.*

இதில் காலம் பொருந்தவில்லை.

விளையாடும்போது என்பது எதிர்காலம்.

நிகழ்ந்து கொண்டிருந்தது என்பது நிகழ்காலம்.

திருத்தம் : நான் விளையாடியபோது அண்மையில் சமயச் சொற்பொழிவொன்று நிகழ்ந்து கொண்டிருந்தது.

08. *நாட்டில் இலஞ்சமும் ஊழலும் அதிகரித்த வண்ணமே காணப்படுகின்றன. அது குறித்த முறைப்பாடுகள் கூட ஆணைக்குழுவுக்கு வந்து குவிந்தவண்ணமே இருக்கின்றன.*

வழுக்கள் :

முதல் வாக்கியத்தின் எழுவாய் - இலஞ்சமும் ஊழலும் - அது பன்மை.

இரண்டாம் வாக்கியத்தில் முன்வந்த எழுவாயை சுட்டியது. அது - ஒருமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அது அவையாக மாறவேண்டும்.

முறைப்பாடுகள் கூட என்பதை முறைப்பாடுகளும் என 'உம்' இடைச் சொல் பெறவேண்டும்.

திருத்தம் : நாட்டில் இலஞ்சமும் ஊழலும் அதிகரித்தவண்ணம் காணப்படுகின்றன. அவை குறித்த முறைப்பாடுகளும் ஆணைக் குழுவுக்கு வந்து குவிந்த வண்ணமே இருக்கின்றன.

09. *நீதி மன்றத்துக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர் ஒருவரைப் பொலிசார் கைதுசெய்தனர்.*

நபர் என்பதே ஒருவர். ஆகவே நபர் என்பது வேற்றுமொழி இணைந்த வழு.

நடமாடுதல் என்பது நடனமாடுதல் என வேறு பொருள் தரத்தக்கது. அச்சொற் பிரயோகம் பொருத்தமற்றது.

திருத்தம் : நீதிமன்றத்துக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடந்து திரிந்த ஒருவரை பொலிசார் கைதுசெய்தனர்.

10. *சார்ந்து வாழ்வது மனிதனுக்கு மட்டுமல்ல சகல சீவராசி களுக்குமே உள்ள இயல்புதான்.*

எழுவாய் - வாழ்வது - அது ஒருமை.

பயனிலை - அல்ல - அது பன்மை.

எனவே அல்ல என்பது அன்று என அமைதல் வேண்டும்.

இரண்டாவது வாக்கியத்தில் முதல் வாக்கிய எழுவாய் அது என்ற சுட்டாக வருதல் இலக்கண விதி. அவ்வாறு வராமை தவறு.

திருத்தம் : சார்ந்து வாழ்வது மனிதனுக்கு மட்டுமன்று. அது சகல சீவராசிகளுக்குமே உள்ள இயல்புதான்.

11. *ஒவ்வொரு பிள்ளைகளும் தங்கள் கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டவேண்டும்.*

வழு : ஒவ்வொரு பிள்ளைகளும் தங்கள் - ஒவ்வொரு என்பது ஒருமை. பிள்ளைகள் என்பது பன்மை. எனவே ஒவ்வொரு பிள்ளை யும் எனத் திருத்தல் வேண்டும். தங்கள் என்பதையும் தனது என மாற்ற வேண்டும்.

திருத்தம் : ஒவ்வொரு பிள்ளையும் தனது கல்வி முன்னேற்றத்தில் அக்கறை காட்டவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. *பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இங்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.*

பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் என்பது வழு.

திருத்தம் : ஞாயிற்றுக்கிழமை தோறும் இங்கு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

13. *நல் விமர்சனங்கள் தூற்றுதல்கள் அல்ல. அவர்களின் செயற்பாடுகளை உயர்த்தவல்ல விமர்சனங்களைச் சம்பந்தப்பட்டவனே ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாகும்.*

வழுக்கள் :

முதல் வாக்கியத்திற்கும் அடுத்து வந்த வாக்கியத்திற்கும் தொடர்பில்லாமை வழு.

ஒரே வாக்கியத்தில் அவர்கள் என்னும் பன்மையில் அப் பன்மையைக் குறிக்க சம்பந்தப்பட்டவன் என்னுஞ் சொல் ஒருமையையும் பெற்றுவந்தமை தவறு.

திருத்தம் :

நல்ல விமர்சனங்கள் தூற்றுதல்கள் அல்ல. அவை ஒருவனின் செயற்பாடுகளை உயர்த்த வல்லனவாயின் அவ்விமர்சனங்களை அவற்றோடு சம்பந்தப்பட்டவர்களே ஏற்றுக்கொள்ளும் நிலையும் உருவாகும்.

14. *சமாதானம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இரு தரப்பும் இணக்கம் தெரிவித்தனர்.*

வழு : இதன் எழுவாய் தரப்பு - இது பண்புப் பெயர். எனவே அஃது அஃறிணை.

பயனிலை - தெரிவித்தனர் - அது உயர்திணை. இதனால் திணை மாறுபட்டது.

திருத்தம் :

i. சமாதானம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்தனர்.

ii. சமாதானம் தொடர்பான நிபந்தனைகளுக்கு இரு தரப்பும் இணக்கம் தெரிவித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. *தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தமது தலைவிதியைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலையில் இப்போது இருக்கின்றோம் என்று தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.*

வழுக்கள் :

இது ஒரு கலப்பு வாக்கியம்.

தலைமை வாக்கியம் - பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னையதில் எழுவாய் - தமிழ் மக்கள் அனைவரும் - அது படர்க்கைப் பன்மை.

பயனிலை - இருக்கின்றோம் - இது தன்மைப் பன்மை. ஆகவே இடமும் முரண்பட்டது.

திருத்தம் :

தமிழ் மக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து நமது தலைவிதியை சிந்திக்கவேண்டிய நிலையில் இப்போது இருக்கின்றோம் என்று தமிழ்ப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

16. *அவர் செய்த கொடிய தவத்தைப் பார்த்து இந்திரன் நடுங்கினான்.*

வழு : கொடிய என்பது சொற்பொருள் வழுவாகும். கொடிய என்பது கொடூரமான தவம் எனப் பொருள் தரும். பதிலாக கடுந்தவம் என்றால் அது கொடூரமாகாது.

திருத்தம் :

அவர் செய்த கடுந் தவத்தைப் பார்த்து இந்திரன் நடுங்கினான்.

17. *சோமாலிய நாட்டினர் கடும் வெப்பம், பசி, தாகம் ஆகியவற்றினால் உயிர்துறந்து கொண்டுள்ளனர்.*

வழு : உயிர் துறத்தல் என்பது சொல்லின் தொனிப்பொருள் வழுவாகும். உயிர் துறத்தல் என்பது தியாக உணர்வை வெளிப்படுத்தும் பொருளாக கொள்ளவேண்டும். பசி, தாகத்தால் மரணம் அடைவதற்கு பொருந்தாது.

திருத்தம் : சோமாலிய நாட்டினர் கடும் வெப்பம், பசி, தாகம் ஆகியவற்றினால் உயிரிழந்து கொண்டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. *குண்டு வீச்சினால் பெண் ஊழியர் ஒருவர் இலேசான காயங் களடைந்தார்.*

வழு :

'இலேசான' என்பது பெயரடை. காயங்கள் என்னும் பெயருக்கு அடையாக வருகிறது. இவ்வாறு வருவதால் அடைந்தார் என்ற வினை விரித்து எழுதப்படல்வேண்டும். 'கள்' விகுதியை நீக்கி 'காயமடை' என்பதை வினையாக கொள்வது இதற்கு மற்றொரு தீர்வு. இந்த வினைக்கு இலேசாக எனப் பயன்படுத்தவேண்டும்.

திருத்தம் :

குண்டு வீச்சினால் பெண் ஊழியர் ஒருவர் இலேசாக காயமடைந்தார்.

19. *எந்தப் பொருட்களுக்கும் அதற்கேற்றாற்போல் விளம்பரத் தைத்தான் விரும்புவார்கள்.*

வழு : எந்த என்பதன் பின்வரும் பெயர்ச்சொல் பன்மையில் இருப்பதில்லை.

திருத்தம் : எந்தப் பொருளுக்கும் என மாற்றல் வேண்டும்.

20. *சுதந்திரதின விழா நாட்டின் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டன.*

வழு : விழா என்ற எழுவாய் ஒருமையில் இருப்பதால் அதற்கேற்ப வாக்கியத்தின் முடிவும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

திருத்தம் : சுதந்திரதின விழா நாட்டின் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது.

21. *'உம்' உள்ளங்காலில் ஒரு மையைத் தடவுகிறேன். அடுத்த கணமே நீங்கள் சொர்க்கத்தில் இருப்பீர்.*

வழு : இரண்டாவது வாக்கியத்தில் நீங்கள் என்ற முன்னிலைப் பன்மை வந்துள்ளதால் முதல் வாக்கியத்தில் உங்கள் என இருந்திருக்க வேண்டும். உம் சரியானது என ஏற்றுக் கொண்டால் இரண்டாவது வாக்கியத்தில் நீர் என இருப்பதே பொருந்தும்.

திருத்தம் : உம் உள்ளங்காலில் ஒரு மையைத் தடவுகிறேன் அடுத்த கணமே நீர் சொர்க்கத்தில் இருப்பீர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. *இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒழுங்கீனங்கள் ஏற்படாது.*

வழு : இதில் ஒழுங்கீனங்கள் என்னும் எழுவாய் பன்மையில் உள்ளது. எனவே அதற்குப் பயனிலையும் பன்மையில் இருத்தல் வேண்டும்.

திருத்தம் : இத் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒழுங்கீனங்கள் ஏற்படா.

23. *அமெரிக்காவை பார்த்து நாம் இதை கற்றுக்கொள்ள வேண்டும்.*

வழு : 'ஐ' உருபுக்குப் பின் சந்தி மிகும் என்பது இலக்கண விதி.

திருத்தம் : அமெரிக்காவைப் பார்த்து நாம் இதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

24. *இந்நூலை இயற்றியது பேராசிரியர் மாதவன்.*

வழு : இயற்றியது என்பது அஃறிணைச் சொல். அதனால் இயற்றியவர் என மாற்ற வேண்டும்.

திருத்தம் : இந்நூலை இயற்றியவர் பேராசிரியர் மாதவன்.

25. *மாடுகள் புற்களை மேய்ந்து கொண்டிருந்தன.*

வழு : புற்கள் (புல், நீர், தாகம், வறுமை ஆகியவற்றுக்குப் பன்மையில்லை)

திருத்தம் : மாடுகள் புல்லை மேய்ந்து கொண்டிருந்தன.

26. *நன்மையும் தீமையும் நாடி அதனுள் மிகை நாடி மிக்கது கொள்க.*

வழு : நன்மையும் தீமையும் என்பதற்கேற்ப அதனுள் என்பதை அவற்றுள் என திருத்துதல் வேண்டும். (பன்மையில் அமைதல் வேண்டும்)

27. *பல ஊர்த் தண்ணீர்கள் என் உடம்புக்குப் பிடிக்கவில்லை.*

வழு : தண்ணீர் என்ற சொல்லுக்கு பன்மை விகுதியில்லை.

திருத்தம் : பல ஊர்த் தண்ணீர் என் உடம்புக்குப் பிடிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கண வழுக்களை திருத்தி எழுதுக.

01. *இங்கு காலையும் மாலையும் வந்தது யார்?*

இவ் வாக்கியத்தில் அஃறிணை வினையும் (வந்தது) உயர்திணை வினாவும் இடம்பெற்றுள்ளது. திணை வழு உள்ளது.

திருத்தம் : இங்கு காலையும் மாலையும் வந்தவர் யார்?

02. *நீ எனக்குப் பணமாகவோ அல்லது பொருளாகவோ தரலாம்.*

இவ் வாக்கியத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலையில் வருவதால் அல்லது என்ற இணைப்பு இடைச்சொல் தேவையற்றது.

திருத்தம் : நீ எனக்குப் பணமாகவோ பொருளாகவோ தரலாம்.

03. *பெரியதும் சிறியதுமான பொருட்களைச் செய்கிறார்கள்*

வழு : வாக்கியத்தில் அடைகள் ஒருமையாக உள்ளன. செய்கிறார்கள் பன்மையாக வந்துள்ளது.

திருத்தம் : பெரியனவும் சிறியனவுமான பொருட்களைச் செய்கிறார்கள்.

04. *பின்வந்த செய்யுட்களுள் ஏதேனும் மூன்றினுக்கு உரை எழுதுக.*

வழு : பின்வந்த செய்யுள் என்பது தவறு. ஏதேனும் என்ற சொற் பிரயோகமும் தவறானது.

திருத்தம் : பின்வரும் செய்யுட்களில் எவையேனும் மூன்றிற்கு உரை எழுதுக.

05. *மனிதனின் அடிப்படை உரிமைகள் ஆட்சியாளர் மதிக்கப்பட வேண்டும்.*

வழு : உரிமைகள், ஆட்சியாளர், மதிக்கப்பட வேண்டும்.

வாக்கியம் செய்வினையில் அமையவேண்டும் அல்லது செயப்பாட்டு வினையில் அமைய வேண்டும். குறிப்பிட்ட மூன்று சொற்களையும் அவதானிக்குக.

திருத்தம் :

i. மனிதனின் அடிப்படை உரிமைகளை ஆட்சியாளர் மதிக்க வேண்டும்.

ii. மனிதனின் அடிப்படை உரிமைகள் ஆட்சியாளரால் மதிக்கப் படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்வரும் வாக்கியங்களில் உள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.

01. *தன் குருநாதருடன் பேசியபின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த சீடன் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றான்.*

விளக்கம் : குருநாதருடன் பேசிய பின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தானா அல்லது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்தவன் குருநாதருடன் பேசியபின் புத்துணர்ச்சி பெற்றானா என்பது தான் மயக்கம்.

திருத்தம் : வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த சீடன் தன் குருநாதருடன் பேசியபின் மீண்டும் புத்துணர்ச்சி பெற்றான்.

02. *கொலைக்குற்றம் சாட்டப்பட்ட பிரபல வர்த்தகரின் மனைவி தற்கொலை செய்து கொண்டனர்.*

விளக்கம் : கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர் யார் என்பதிலே தான் தெளிவு இல்லை. குற்றஞ் சாட்டப்பட்டவர் பிரபல வர்த்தகரா வர்த்தகரின் மனைவியா என்பது தான் மயக்கம்.

03. *நபிகளின் உரையைக் கேட்டு அறியாமையில் மூழ்கியிருந்த ராசிக் மெய்யறிவு பெற்றான்.*

விளக்கம் :

நபிகளின் உரையைக் கேட்டு ராசிக் அறியாமையில் மூழ்கினான் என்ற பொருள் கொள்ளும் மயக்கம் உள்ளது.

இதனை,

அறியாமையில் மூழ்கியிருந்த ராசிக், நபிகளின் உரையைக் கேட்டு மெய்யறிவு பெற்றான்.

04. *ஆண்டுதோறும் மறைந்த பேராசிரியர் கைலாசபதி நினைவாகக் கூட்டம் ஒன்று நடைபெறும்.*

விளக்கம் :

பேராசிரியர் கைலாசபதி ஆண்டுதோறும் மறைந்தார் என்ற பொருள் மயக்கம் உள்ளது. இதனைத் தவிர்க்க பின்வரும் வகையில் அதனை தெளிவுபெற செய்யவேண்டும்.

மறைந்த பேராசிரியர் கைலாசபதி நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் ஒன்று நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. *இந்த மருத்துவமனையில் நோயாளிகளை நம்பி விட்டுச் செல்லலாம். கண்ணுங்கருத்துமாக கவனித்துக் கொள்வார்கள்.*

விளக்கம் : நோயாளிகளை தயக்கமில்லாமல் இந்த மருத்துவ மனையில் விட்டுச்செல்லலாம் எனப் பொருள் தரவேண்டிய வாக்கியம். அதனுடைய அமைப்பில், நோயாளிகளை நம்பி வேறு யாரையோ விட்டுச் செல்லலாம் என்ற பொருள் தருகின்றது.

திருத்தம் :

நோயாளிகளை இந்த மருத்துவமனையில் நம்பி விட்டுச் செல்லலாம். கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்வார்கள்.

06. *வக்கீல் மனைவியைத் தீ வைத்துக் கொல்ல முயற்சி.*

விளக்கம் : வக்கீல் மனைவியைக் கொல்ல முயன்றாரா, வக்கீல் மனைவியை வேறொருவர் கொல்ல முயன்றாரா என்பதே மயக்கம்.

திருத்தம் :

வக்கீலின் மனைவியைத் தீ வைத்துக் கொல்ல முயற்சி.

07. *இலஞ்ச ஆணை விசாரணைக் குழு அறிக்கை வெளியிட தாமதம்.*

விளக்கம் : அறிக்கை வெளியிட தாமதித்தது விசாரணைக் குழுவா அரசா என்பதே மயக்கம். தெளிவில்லை.

திருத்தம் :

இலஞ்ச விசாரணை ஆணைக்குழு அறிக்கையை வெளியிட தாமதம் (வேற்றுமை உருபு வெளிப்படின் குழப்பத்திற்கு இடமில்லை)

08. *யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட புதிய விருந்தினர் விடுதி ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.*

விளக்கம் : இவ்வாக்கியத்தில் விடுதி புதியதா? விருந்தினர் புதியவரா என்ற தெளிவின்மை காணப்படுகின்றது.

திருத்தம் :

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட விருந்தினர் புதிய விடுதி ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. *நண்பன் எனக்கு வர வசதியில்லை என்றான்.*

விளக்கம் : எனக்கு என்பது தெளிவற்றதாக உள்ளது.

திருத்தம் : நண்பன் தனக்கு வர வசதியில்லை என்றான்.

10. *கொடுமையான விலங்குகளையும் மனிதர்களையும் கண்டனர்.*

விளக்கம் : கொடுமையான என்ற அடை விலங்குகளையும் மனிதர்களையும் குறிக்கின்றதா? என்ற தெளிவின்மை ஏற்படுகின்றது. இதனை திருத்த காற்புள்ளி என்ற குறியீட்டைப் பயன்படுத்த வேண்டும்.

11. *கண்ணன் இராமனுக்கு அவனுடைய புத்தகத்தைக் கொடுத்தான்.*

விளக்கம் :

இவ் வாக்கியத்தில் புத்தகம் யாருடையது என்பதே தெளிவற்றதாக உள்ளது.

கண்ணனுடையதா, இராமனுடையதா இருவரும் தவிர்ந்த இன்னொருவருடையதா என தெளிவற்றதாக உள்ளது.

12. *மகாத்மா காந்தி அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை கொன்றவனையும் மன்னித்தார்.*

விளக்கம் :

கொலைஞனை மன்னிப்பது வேறு கொன்றவனை (இறந்தபின்) எவ்விதம் மன்னிப்பது என்பதே மயக்கத்தை ஏற்படுத்துகின்றது.

திருத்தம் :

மகாத்மா காந்தி அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தன்னைக் கொல்ல முயன்றவனையும் மன்னித்தார்.

13. *அவன் எனக்கு முன்வந்து நின்றான். இவ்வாக்கியத்தை திருத்தி எழுதுக.*

முன் என்ற இடைச்சொல் இடம் அல்லது காலம் தழுவிய மயக்கமாக உள்ளது.

முன் என்பது இடத்தைச் சுட்ட விரும்பினால் 'முன்' என்பதற்கு பதிலாக முன்னிலையில் என தெளிவு தோன்ற எழுதுக.

திருத்தம் : அவன் எனக்கு முன்னிலையில் வந்து நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் என்பது காலத்தைச் சுட்ட விரும்பினால் முன்னமே என எழுதுக.

திருத்தம் : அவன் எனக்கு முன்னமே வந்து நின்றான்.

14. *மயிலும் குயிலும் கார்காலத்தை விரும்புவதும் வெறுப்பதும் இயல்பு. இவ் வாக்கியத்தை திருத்தி எழுதுக.*

குயில் ஒருபோதும் கார்காலத்தை விரும்புவதில்லை. வாக்கியம் விரும்புவதாக பொருள் தருகின்றது. எனவே அதனை தெளிவுபட வைப்பதற்கு முறையே என்ற சொல்லை, மயிலும் குயிலும் என்பதன் பின் இணைக்க வேண்டும்.

திருத்தம் : மயிலும் குயிலும் முறையே கார்காலத்தை விரும்புவதும் வெறுப்பதுவும் இயல்பு.

15. *சிறுவர் சிறுமியர் இம்சைப்படுத்தப்படுவது பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாவது இன்று நேற்று நடைபெறும் குற்றங்களல்ல. இவ் வாக்கியத்தில் உள்ள வழுக்களை திருத்தி எழுதுக.*

வழுக்கள் :

i. இம்சைப்படுத்தப்படுவது செயப்பாட்டு வினை. அதனால் உள்ளாவது என்ற சொல்லும் செயப்பாட்டு வினையாக இடம்பெற வேண்டும்.

ii. செயப்பாட்டு வினைகள் 'உம்' இடைச்சொல் பெறாதிருப்பதும் வழுவாகும்.

iii. இன்று, நேற்று என்பனவும் நீண்ட காலத் தொடர் நிகழ்வை வெளிப்படுத்த 'உம்' இடைச்சொல் பெறவேண்டும்.

திருத்தம் :

சிறுவர் சிறுமியர்கள் இம்சைப்படுத்தப்படுவதும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதும் இன்றும் நேற்றும் நிகழும் குற்றங்களல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்வினை, செயப்பாட்டுவினை வடிவங்கள்

01. *போதைப்பொருள் கடத்த முயன்ற இருவர் கைது செய்யப் பட்டனர்.*

*இச் செயப்பாட்டு வாக்கியத்திற்கு மூலமான செய்வினை வாக்கியத்தை தருக.*

போதைப்பொருள் கடத்த முயன்ற இருவரைக் கைதுசெய்தனர்.

02. *'விளம்பரங்களில் உண்மையை மட்டுமே சொல்லப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்' இவ் வாக்கியத்தை திருத்தி எழுதுக.*

i. விளம்பரங்களில் உண்மை மட்டுமே சொல்லப்படவேண்டும் என்பதை அரசாங்கம் வலியுறுத்தவேண்டும்.

ii. விளம்பரங்களில் உண்மையை மட்டுமே சொல்லவேண்டும் என்பதை அரசாங்கம் வலியுறுத்த வேண்டும்.

03. *'இலங்கையிலிருந்து தேயிலை, றப்பர் என்பவற்றை ஏற்றுமதி செய்கிறார்கள்.'*

*இவ் வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக எழுதுக.*

இலங்கையிலிருந்து தேயிலை, இறப்பர் என்பன ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

04. *'வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளை அமைச்சர் பார்வை யிட்டார்'*

*இதனை முழுமையான செயப்பாட்டு வினை வடிவமாக மாற்றுக.*

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட என இருத்தல் வேண்டும்.

05. *பயங்கரவாதிகளிடம் நூற்றுநாற்பது பேர் சிறைபிடிக்கப் பட்டனர்.*

*இதனை முழுமையான செயப்பாட்டு வினையாக மாற்றுக.*

பயங்கரவாதிகளால் என மாற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. *மகனே, வேந்தன் உன்னைக் கட்டினான் என்ற வாக்கியத்தை செயப்பாட்டு வினையாக மாற்றுக.*

**மகனே நீ வேந்தனால் கட்டுண்டாய் என மாற்றவேண்டும். (உண் துணைவினையாக வந்தது)**

07. *நீங்கள் கட்டளையிடுங்கள். இதனை செயப்பாட்டு வினையாக மாற்றுக.*

**உங்களால் கட்டளையிடப்படட்டும் என அமையும்.**

08. *சங்கீதம் நம் உள்ளங்களைக் கட்டுப்படுத்துகின்றது. இதனைச் செயப்பாட்டு வினையாக மாற்றுக.*

**சங்கீதத்தால் நம் உள்ளங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.**

09. *அவர் அக் காவியத்தின் சில நிகழ்ச்சிகளை மாற்றியிருக்கின்றார். இதனை செயப்பாட்டு வினையாக மாற்றுக.*

**அக் காவியத்தின் சில நிகழ்ச்சிகள் அவரால் மாற்றப்பட்டன.**

10. *சமூக நீதிக்காக இந்த மாற்றத்தை ஆசிரியர் செய்தார். இவ் வாக்கியம் செயப்பாட்டு வினையில் –*

**சமூக நீதிக்காக ஆசிரியரால் இந்த மாற்றம் செய்யப்பட்டது.**

11. *பாரதிதாசன் சமுதாய விழிப்புணர்ச்சியைத் தூண்டும் பாடல்களைப் பாடினார். செயப்பாட்டு வினையில் இது –*

**சமுதாய விழிப்புணர்ச்சியை தூண்டும் பாடல்கள் பாரதிதாசனால் பாடப்பட்டன.**

12. *அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும். இதனை செய்வினை வாக்கிய வடிவத்தில் தருக.*

**வாய்மை அகத்தூய்மையைக் காட்டும்.**

13. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும் நினைக்கப்படும். இதனை செய்வினை வாக்கிய வடிவில் தருக.*

**அவ்விய நெஞ்சத்தான் ஆக்கத்தையும் செவ்வியான் கேட்டையும் அறிஞர்கள் நினைப்பார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக வினாக்கள்

01. *ஒரு மொழியின் சொல் வளத்தை தெரிந்துகொள்ளவும் சொற்களின் பொருள் வீச்சை புரிந்துகொள்ளவும் அகராதி உதவுகின்றது. இவ் வாக்கியங்களைப் பிரித்துக் காட்டுக.*

i. ஒரு மொழியின் சொல்வளத்தை தெரிந்துகொள்ள அகராதி உதவுகின்றது.

ii. சொற்களின் பொருள்வீச்சை புரிந்துகொள்ள அகராதி உதவுகின்றது.

02. *முதல் நாள் இரவு சுகமாகப் படுத்து நித்திரை செய்தவன் இன்று இரவு நரக வேதனையை அனுபவித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். இவ் வாக்கியத்தின் எழுவாய் தொடர் என்ன.*

முதல்நாள் இரவு சுகமாகப் படுத்து நித்திரை செய்தவன்

03. *தங்கள் என்பது முன்னிலையிலும் படர்க்கையிலும் வர ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.*

தங்கள் வரவு நல்வரவாகுக - முன்னிலை.

மாணவர் தங்கள் வகுப்பறைக்குச் சென்றனர் - படர்க்கை.

04. *அவன் கர்ண கடூரமான குரலிலே கம்பீரமாகவும் இனிமையாகவும் பாடினான்.*

*இவ் வாக்கியத்தில் உள்ள சொற் பிரயோகத் தவறினை எடுத்துக்காட்டுக.*

இவ் வாக்கியத்தில் கர்ணம், கடூரம் என்ற இரு புதுச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

கர்ணம் - காது; கடூரம் - கடுமை எனப் பொருள்படும்.

காதுக்கு கடுமையான குரல் எவ்வாறு கம்பீரமாகவும் இனிமையாகவும் இருக்கமுடியும்.

வெறும் ஓசை சிறப்புக்காக விளக்கமற்ற சொற்களை பயன் படுத்தக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*05. எம்முடைய செயல்கள் பிறர்க்கு நன்மையாகவும் துன்பம் தராதனவாகவும் பயனுடையனவுமாய் இருத்தல் வேண்டும். சொற் பிரயோக தவறினைச் சுட்டிக்காட்டுக.*

விளக்கம் :

நன்மையாகவும், துன்பம் தராதனவாகவும் பயனுடையன வாகவும் என்று மூன்று மூன்று வெவ்வேறு வடிவங்களில் வந்துள்ளமை தவறான பிரயோகம்.

'உம்' இடைச்சொல் கொண்டு சொற்களை இணைக்கும் போது அவை ஒரே தன்மையானதாக இருத்தல் வேண்டும்.

திருத்தம் :

நன்மை தருவனவாகவும் துன்பம் தராதனவாகவும் பயன் தருவனவாகவும் இருத்தல் வேண்டும் என அமைவதே சிறப்பானது.

*06. ஒரு மனிதன் என்னைச் சந்திக்க வந்தான். சொற்பிரயோக தவறினை சுட்டிக் காட்டுக.*

விளக்கம் :

ஒரு என்னும் சொல் அஃறிணையில் வரும். (ஒரு வீடு, ஒரு மரம்)

உயர்திணையில் வரும்போது அது எந்தப் பாலைக் குறிக்குமோ அதற்குரிய விகுதியை சேர்த்தே பிரயோகிக்க வேண்டும்.

திருத்தம் :

மனிதன் ஒருவன் என்னைச் சந்திக்க வந்தான்.

Class No.
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத்துப் பிழைகளை திருத்தி எழுதுதல்

| *பிழையானது* | *திருத்திய வடிவம்* |
|---|---|
| கவலையீனம் | கவனயீனம் |
| கடசி | கடைசி |
| சமயல் | சமையல் |
| பொதுவுடமை | பொதுவுடைமை |
| மடயன் | மடையன் |
| அனியாயம் | அநியாயம் |
| சன்னிதி | சந்நிதி |
| தொப்புள் கொடி உறவு | கொப்பூழ்க்கொடி உறவு |
| (தொப்புள் என்ற சொல் எப்படி வந்தது?) | |
| ஒத்தடம் | ஒற்றடம் |
| கட்டிடம் | கட்டடம் (கட்டு + அடம்) |
| நாவரண்டது | நாவறண்டது |
| நடாத்துதல் | நடத்துதல் |
| நலன்புரிச்சங்கம் | நலன்புரிசங்கம் |
| இருபத்திமூன்று | இருபத்துமூன்று |
| முன்னூறு | முந்நூறு |
| தொண்ணூற்றியெட்டு | தொணூற்றெட்டு |
| வாழ்த்துக்கள் | வாழ்த்துகள் |
| அடமானம் | அடைமானம் |
| அருவெறுப்பு | அருவருப்பு |
| கர்ப்பூரம் | கருப்பூரம் |
| சித்தரிக்கிறான் | சித்திரிக்கிறான் |
| நாகரீகம் | நாகரிகம் |
| அருகாமை | அருகில் |
| சீயக்காய் | சிகைக்காய் |
| பன்னிரெண்டு | பன்னிரண்டு |
| மெய்வல்லுனர் | மெய்வல்லுநர் |
| இடதுபக்கம் | இடப்பக்கம் |
| புடவை | புடைவை |

Class No
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| உடமை | உடைமை |
| விடையம் | விடயம் |
| கலாச்சாரம் | கலாசாரம் |
| பிரச்சாரம் | பிரசாரம் |
| சந்தணம் | சந்தனம் |
| சம்மந்தம் | சம்பந்தம் |
| நாகரீகம் | நாகரிகம் |
| கோர்வை | கோவை |
| வரட்சி | வறட்சி |
| நோக்குனர் | நோக்குநர் |
| இலட்சினை | இலச்சினை |
| இணைப்பாடவிதானம் | இணைபாடவிதானம் |
| பயிலுனர் | பயிலுநர் |
| சுற்றவாளி | சுத்தவாளி |
| சுகயீனம் | சுகவீனம் |
| ஆராட்சி | ஆராய்ச்சி |
| பூட்டன் | பீட்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# உசாத்துணை நூல்கள்

1. நுஃமான்.எம்.ஏ.,அடிப்படைத் தமிழ் இலக்கணம், இலங்கை.

2. முனைவர் ச.அகத்தியலிங்கம், தமிழ்மொழி அமைப்பியல். மெய்யப்பன் தமிழாய்வகம், சென்னை.

3. என்.சொக்கன், நல்ல தமிழில் எழுதுவோம், கிழக்குப் பதிப்பகம், சென்னை.

4. சிங்கப்பூர் சித்தாத்தன், இலகு தமிழில் இனிக்கும் தமிழ் இலக்கணம், நர்மதாப் பதிப்பகம், சென்னை.

5. கழகப் புலவர் குழுவினர், நன்னூல் காண்டிகை உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

6. வித்துவான் க.சொக்கலிங்கம், இலக்கணத் தெளிவு, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

7. சி.வ.தணிகாசலம்பிள்ளை, பொற்காலத் தமிழ் இலக்கணம், நாவலர் அச்சுக்கூடம் - யாழ்ப்பாணம்.

8. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், இலக்கணச் சுருக்கம், தென்றல் பப்ளிகேஷன், கொழும்பு

9. பண்டிதர் க. வீரகத்தி, இலக்கண விளக்கம், வாணி வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை.

10. க.கணபதிப்பிள்ளை, பைந்தமிழைப் பாதுகாப்போம், யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி.

11. சண்முகதாஸ்.அ, தமிழ்மொழி இலக்கண இயல்புகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

12. பரந்தாமனார்.அ.க., நல்ல தமிழ் எழுத வேண்டுமா? சென்னை.

13. வரதராசன்.மு, மொழிநூல், கழக வெளியீடு, சென்னை.

14. தமிழ்நடைக் கையேடு - இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்; மொழி அறக்கட்டளை சென்னை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

15. ஆசிரிய வளநூல் (தமிழ்) தேசிய கல்வி நிறுவகம், மஹரகம, இலங்கை.

Class No:
Acc No



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1601

Arasady Public Library
Municipal Council
Batticaloa

Class No:
Acc No 1601

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Class No: | |
| --- | --- |
| Acc No | 1601 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணபிள்ளை நடராசா



திரு.கிருஷ்ணபிள்ளை நடராசா யாழ்ப்பாண மாவட்டத்தில் வடமராட்சிப் பகுதியில் ஐந்து தசாப்தங்களாக உயர்தர வகுப்பில் தமிழ்மொழியைக் கற்பித்து வரும் மூத்த தமிழாசிரியராவார். நெருக்கடி மிகுந்த காலக்கட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரியில் அதிபராகவும் கடமையாற்றி இரு கல்லூரிகளினதும் பல்துறை பரிணாம வளர்ச்சிக்கு பங்காற்றி சமூகத்தில் பலராலும் பாராட்டப் பெற்றவர். ஐந்து வருடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கும் கல்வியில் முதுமாணி மாணவர்களுக்கும் கல்வி நிருவாகம் தொடர்பான வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். நிறைந்த இலக்க இலக்கியப் புலமை கொண்ட இவரது முயற்சியினால் பாடநூல்கள் வெளிவந்தன.

- கைகேயி சூழ்வினைப் படலம் - உரை விளக்கம்
- கங்கைகாண் படலம் / குகப்படலம் - உரை விளக்கம்
- தேர்ந்த செய்யுள் - உரை விளக்கம்
- திருக்குறள் - அங்கவியல் - உரை விளக்கம்
- இலக்கண வினா விடை
- தமிழ் இலக்கிய வரலாறு (19ம் நூற்றாண்டு வரை)
- திருக்குறல் - அரசியல்
- தமிழ் இலக்கியக் களஞ்சியம் - (செய்யுளும் உரை நடையும்)

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு-11
011 2422321 / 011 2435713
poobalasingham202@gmail.com
www.poobalasingham.com

ISBN 978 955 3491 29 9
Rs: 325.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org